# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 51 தை 03ஆம் நாள் வியாழக்கிழமை 17 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2049

பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM


## பொங்கல் தினத்தில் நீரில் மூழ்கி 8 பேர் சாவு

தைப்பொங்கல் தினமான நேற்றுமுன்தினம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நீரில் மூழ்கி 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 5 பேர் இளைஞர்கள் எனவும், 2 பேர் குடும்பத் தலைவர்கள் எனவும், ஒருவன் சிறுவன் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, திருகோணமலை, சங்கமித்த கடற்கரை >> 06

## சிப்பாயின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

பலாலி இராணுவ பயிற்சி முகாமில் தூக்கில் தொங்கிய நிலையில் இராணுவச் சிப்பாயின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

அரியரத்ன என்ற 22 வயதுடைய சிப்பாயே சடலமாக மீட் >> 06

# புதிய அரசமைப்புக்கான பணியில் இணையுமாறு

# மகிந்த அணிக்கு சுமந்திரன் பகிரங்க அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியில் தம்முடன் இணைந்து செயற்படுமாறு மகிந்த அணியினருக்கு அழைப்பு விடுத்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன்.

ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிலமையை திறம்படக் கையாண்டமைக்காக அதன் பேச்சாளர் சுமந்திரனுக்கு பருத்தித்துறையில் நேற்று பாராட்டு விழா முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகை >> 06

# புதிய அரசமைப்பை உடன் கைவிடுங்கள்

## இல்லையேல் நாட்டை முடக்குவோம் என்று அரசுக்கு மகிந்த எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 17

புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளை ரணில் அரசு உடன் கைவிட வேண்டும். இல்லையேல் அதற்கு எதிராக நாட்டை முடக்கி மாபெரும் போராட்டங்களை முன்னெடுப்போம். இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த >> 06

## நல்லூரில் நாளை சிலப்பதிகார விழா

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு தமிழ் ஐயா கல்விக் கழகமும் தமிழ் ஆடற்கலை மன்றமும் இணைந்து நடத்தும் இருநாள் சிலப்பதிகார முத்தமிழ் விழா நாளையும், நாளை மறுதினமும் காலை, மாலை அமர்வுகளாக நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டப அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

**காலை அமர்வு**

நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் காலை அமர்வில் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்து இசைப்பர். யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கிரு பாசக்தி கருணா சிலப்பதிகார வாழ்த்து இசைப்பார். தமிழ்ச்சங்கச் செயலர் இ.சர்வேஸ்வரா வரவேற்புரையையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரையையும் இந்தியத் துணைத்தூதரக கொன்சியூலர் ஜெனரல் பாலச்சந்திரன் வாழ்த்துரையையும் வழங்குவர். >> 06

## அரசமைப்பு உருவாக்கல் முயற்சியிலிருந்து நாங்கள் ஒருபோதும் பின்வாங்கமாட்டோம்

### ரணில் உறுதி

யாழ்ப்பாணம், ஜன. 17

தடைகள் வரும்போது அஞ்சமாட்டோம். அதைத் தகர்த்து அனைவரினதும் மனதையும் வெல்வோம். புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளிலிருந்து நாம் ஒருபோதும் பின்வாங்கமாட்டோம். நாம் எடுத்த கொள்கையில் உறுதியாக இருக்கின்றோம். வதந்திகளை நம்பாதீர்கள். இவ்வாறு தலைமை அமைச்சர் >> 06

## வாக்குறுதியிலிருந்து பின்வாங்காது அரசு!

### சம்பந்தன் நம்பிக்கை: பன்னாட்டுச் சமூகம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றது எனவும் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 17

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு புதிய அரசமைப்பைக் கொண்டு வந்தே தீரும். பன்னாட்டுச் சமூகத்துக்கு அளித்த வாக்குறுதியிலிருந்து இந்த அரசு பின்வாங்காது என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்ட >> 06

see more news in newuthayan.com

## போராளிகள் இருவருக்கு 10 வருடங்கள் கடூழியம்!

வவுனியா, ஜன. 17

'ஒப்பரேசன் எல்லாளன்' நடவடிக்கையில் தொடர்புபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் இருவருக்கு தலா பத்து வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை வித்தது அனுராதபுரம் மேல் நீதிமன்றம்.

அனுராதபுரம் வானூர்தி நிலையத்தின்மீது விடுதலைப் புலிகள் அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலே ஒப்பரேசன் எல்லாளன் நடவடிக்கை என்று அழைக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையில் தொடர்புபட் >> 06

## மக்களினுடைய தீர்ப்பின் மூலம் புதிய அரசமைப்பு நிறைவேறும்

### ஆதலால் எவருக்கும் அச்சம் வேண்டாம் என்கிறார் அமைச்சர் ராஜித சேனாரட்ன

கொழும்பு, ஜன. 17

புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகள் தொடர்பில் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அரசமைப்புக்கான வரைபு அவசரமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவும் இல்லை. ஆகவே இந்த அரசமைப்புத் தொடர்பில் அனைவரினதும் நிலைப்பாட்டையும் பெற்று நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்ததன் பின்னர் மக்கள் தீர்ப்பினூடாகவே அது நிறைவேற்றப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன குறிப்பிட்டார். >> 06

## இராமநாதபுரம் மீனவர்கள் போராட்டம்

சென்னை, ஜன. 17

உயிரிழந்த தமிழக மீனவரின் சடலத்தை இறுதிச் சடங்குகளுக்காக இந்தியாவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இன்றும் இந்த ஆர்ப்பாட்டம் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த சனிக்கிழமை 8 இந்திய மீனவர் >> 06

### அரசதலைவர் தேர்தல் தொடர்பில்

## மகிந்தவின் குடும்பத்துக்குள் வலுக்கிறது அதிகார மோதல்

### தானும் தயார் என்கிறார் சமல்



கொழும்பு, ஜன. 17

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தானும் தயார் என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சபாநாயகருமான சமல் ராஜபக்ச.

ராஜபக்ச சகோதரர்களில் மூத்தவரான முன் >> 06

## ஐ.தே.முன்னணி அரசு கூட்டமைப்பின் கைதி

### விமர்சித்துத் தள்ளுகிறார் விமல் வீரவன்ச

கொழும்பு, ஜன. 17

ஐக்கிய தேசிய முன்னணி அரசு கூட்டமைப்பின் பயணக் கைதியாக மாறியுள்ளது. கூட்டமைப்பின் இணக்கப்பாடு இல்லாமல் வடக்கில் எந்த நடவடிக்கையையும் அரசால் மேற்கொள்ள முடியாது. அத்துடன் வடக்கு அபிவிருத்தி அமைச்சும் கூட்டமைப்பின் கீழே இருக்கின்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுதந்திர >> 06

## மன். மனிதப் புதைகுழியில் இருந்து 300மனிதஎலும்புகள்மீட்கப்பட்டன



மன்னார், ஜன. 17

மன்னார்மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகளின்போது இதுவரைசுமார்300மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன என்று அகழ்வுக்குப் பொறுப்பானசட்டவைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மன்னார் நகர் நுழைவுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடு அகழ்வுப் பணிகள் 130 ஆவது நாளாக நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றன. நேற்றைய அகழ்வுப் பணிகள் குறித்து அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார்மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள் இன்றுடன் (நேற்றுடன்) 130 ஆவது தடவையாக இடம் பெற்றுள்ளன. இதுவரை 300 மனித எலும்புக்கூடுகள் குறித்த வளாகத்தில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 294 மனித எலும்புக்கூடுகள் முழுமையாகஅப்புறப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக அகழ்ந்துஎடுக்கப்பட்ட294 மனித எலும்புக்கூடுகளில் இருந்துதெரிவுசெய்யப்பட்ட மாதிரிகள் புளோரி டாவுக்கு அனுப்பப்படுவதற்காகமன்னார் நீதி மன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 23ஆம் திகதி மனித எச்சங்கள் ஆய்வுக்காக புளோரிடாவுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளன. குறித்த ஆய்வு முடிவுகள் இரு வாரங்களில் அறிவிக்கப்படும். அதுவரை மன்னார் மனித புதைகுழி அகழ்வுபணிகள்தொடர்ச்சியாகஇடம்பெறும்-என்றார். (ம-56.60)

# அழிவின் விளிம்பில் உள்ள விவசாயத்தைபாதுகாக்குக

## மாந்தைமேற்குபிரதேசசெயலர்கேதீஸ்வரன்அழைப்பு

மன்னார், ஜன. 17

**அழிவின்விளிம்பில்உள்ளவிவசாயத்தைப்பாதுகாக்கவும்,விவசாயிகளின் துயர் துடைக்கவும் அனைவரும் முன்வர வேண்டும் என்று தெரிவித்தார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் கேதீஸ்வரன்.**

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் பிரதேசசெயலர்கேதீஸ்வரன்தலைமையில்பொங்கல்விழாவும்விவசாயிகளை மதிப்பளிக்கும்நிகழ்வும்செயலக முன்றலில் நேற்று நடைபெற்றன. இந்த நிகழ்வில் தலைமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாந்தைபிரதேசமானதுஇலங்கையின் வரலாற்றில் நெற்களஞ்சியம் என்று போற்றப்படுகின்றபிரதேசமாகும்.இன்று வரை மாந்தை பிரதேசத்தின் விளைச்சலை மிஞ்சிய இடம் எங்கும் இல்லை என்பதை அறியமுடிகிறது. உழவுத் தொழிலின்மூலம்சமூகத்துக்குவழிகாட்டியாகஇருப்பவர்கள்விவசாயிகள்.அவர்களின் வறுமை நிலையை போக்க வேண்டியதுஎமதுகடமை.நாம்விவசாயி அனைவரையும் போல சராசரி மனிதர்களாகப் பார்க்கின்றோம். அது தவறு. சமூகத்தின் வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்புமிகவும்அதிகம் என்று அவர் மேலும்தெரிவித்தார்.

இந்தநிகழ்வில்திருக்கேதீஸ்வரம்ஆலயத்தின்தலைமைக்குருவான, கண்ணண் குருக்கள், அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,அடம்பன்பங்குத்தந்தை போன்றோருடன்பிரதேசசெயலகத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள். (ம-213)

## குடமுழுக்கு நிகழ்வு

யாழ். ஜன. 17

சீரடிசாயிபாபாநூதனவிக்ரக பிரதிஷ்டா குடமுழுக்கு எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 8 மணிக்கு இராசவீதி கோப்பாயில் உள்ள நவ மங்கை நிவாசத்தில் இடம் பெறவுள்ளது. (ம-8)

### யாழ். மாநகர சபைக்குக் கிடைத்த

# 12 மில்லியன் ரூபா திரும்பிச் சென்றது!

## பணிகள் முடிவுறாதமையே காரணம்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு கடந்த வருடம்கிடைத்த12 மில்லியன் ரூபா நிதி, அதற்குரிய பணிகள் முடிவுறாதமையால் திரும்பிச் சென்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் 2014ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முத்திரை வரிப்பணம் கிடைக்காத காரணத்தால்அதற்குப்பதிலாகமாகாணஒதுக்கீட்டின் ஊடாக65மில்லியன்ரூபாவழங்கப்பட்டது. இவ்வாறுவழங்கப்பட்டபணத்தில்27வட்டாரங்களுக்கும்தலா1.5மில்லியன்வீதம்ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்தநிதியில்இருந்துமாநகரசபைக்காக11 மில்லியன்ரூபாவில்டோசரொன்றுகொள்வனவு செய்யப்பட்டது. இருப்பினும் எஞ்சிய14 மில்லியன்ரூபாவில்இருசந்தைகள்மற்றும் ஓர் ஆயுள்வேத வைத்தியசாலை என்பன அமைக்கத்திட்டமிடப்பட்டது.

அவ்வாறு மேற்கொண்ட திட்டங்களில் ஏற்பட்டமாற்றங்கள்நடைமுறைகள்காரணமாக காலதாமதம்ஏற்பட்டது.இவற்றின்அடிப்படையில் உள்ளூராட்சிஆணையாளரால்இந்தப் பணிகளை நிறைவுறுத்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையே சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதனால்ஜனவரி மாதம் 3ஆம் திகதி சகல கணக்குகளும் இடைநிறுத்தப்பட்டு முழுமை செய்யப்பட்ட பணிகள் மட்டும் பரிசீலணை மேற்கொண்டு கணக்குகள் முடிவுறுத்தப்பட்டன.

இதன் காரணமாக 12 மில்லியன் ரூபாவுக்கானபணிகள்முடிவுறுத்தப்படாதகாரணத்தினால் பணிகளின் நிதி நிறுத்தப்பட்டது. குறித்த பணம் ஆண்டு இறுதிக்குள் செலவு செய்யப்படாதுவிடின் கண்டிப்பாக திரும்பும் என மாநகர சபையில் பல தடவை பலரும் சுட்டிக்காட்டியபோதும் அது எமது பணம் அதனைதிருப்பமுடியாதுஎனச்சிலர்வாதிட்ட நிலையில் தற்போது நிதி திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பட்டிப்பொங்கல் தினமான நேற்று யாழ். நகரில் பசுக்களின் பவனி!

யாழ்ப்பாணம், ஜன. 17

பட்டிப் பொங்கல் தினமான நேற்று யாழ்ப்பாணம்நகரில்பசுக்களின்பவனிஇடம்பெற்றது. பசுக்களைப் பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. யாழ்ப்பாணம் சத்திரம் ஞானவைரவர் ஆலயத்தில் இருந்து பசுக்கள்ஊர்வலமாகக்கொண்டுசெல்லப்பட்டன.பின்னர்சத்திரம்ஞானவைரவர்ஆலயத்தில் சிறப்புப் பூசைகள் இடம்பெற்று பசுக்களுக்கு உணவளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். (ம-7)





# மூன்று மதக் கடவுளர்களிடமும் ஆசீர் பெற்றார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜன. 17

வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ரா்கவன் மூன்று மதங்களின் கடவுளர்களிடமும் நேற்றும் நேற்றுமுன்தினமும் சென்று ஆசீர் பெற்றார்.

யாழ்ப்பாணம்நாகவிகாரையின்விகாராதிபதி வண. மீஹகாஜதுரே விமல தேரர், நயினாதீவு விகராதிபதி வண. நமதகல பத்மகித்தி தேரர் மற்றும் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோரை சந்தித்து அவர்களுடன் ஆளுநர் கலந்துரையாடினார்.

'வடக்குமாகாணஆளுநராககலாநிதிசுரேன் ராகவனைநியமித்தமையானதுஅரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனவின்மிகச்சிறந்ததொரு தீர்மானமாவே நான் பார்க்கிறேன் என்றுயாழ்ப்பாணம்நாகவிகாரைவிகாராதிபதி விமல தேரர் தெரிவித்தார். ஆளுநருடன் இணைந்து வடக்கில் மதங்களுக்கு இடையில்நல்லுறவினைகட்டியெழுப்பஒன்றுபட்டு செயற்பட தயாராக இருக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு வடக்கு மாகாணத்தில் நிலவும் போதைப்பொருள் பாவனைகள் தொடர்பில் சிறப்பாகக்குறிப்பிட்டவிகாராதிபதி இளைஞர்களை தவறான வழிக்கு இட்டுச்செல்லும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனதனது நேரடிக் கண்காணிப்பில் போதைப்பொருள் ஒழிப்புசெயற்திட்டத்தைநடைமுறைப்படுத்தி வருகிறார். அவருடன் இந்த செயற்திட்டத்துடன் இணைந்து வடக்கில் இளையோரை தவறான பாதைக்கு வழிநடத்தும் போதைப்பொருள்பாவனையைகட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் - என்று தெரிவித்தார். (ம)

# கடன் உதவி பெறும் பேச்சு நடக்கவில்லை

கொழும்பு, ஜன. 17

கடன் உதவி பெறும் நோக்கில், பன்னாட்டு நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்ரின் லகாடேயுடன் இலங்கையின் நிதியமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழுவினர் நேற்று நடத்தவிருந்த பேச்சு பிற்போடப்பட்டுள்ளது.

வொசிங்டனில் வீசிய கடுமையான பனிப்புயலால், இந்தப் பேச்சு பிற்போடப்பட்டதாக, நிதியமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழுவில் இடம்பெற்றுள்ள அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட கடன் உதவியைப் பெற்றுக் கொள்வதற்குப் பேச்சு நடத்துவதற்காக, அந்தக் குழு அமெரிக்கா சென்றிருந்தது.

நேற்றுமுன்தினம் இந்தக் குழுவினர் நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்ரின் லகாடே உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவிருந்தனர். வொசிங்டனில் கடுமையான பனிப்புயலினால் அனைத்துலக நாணய நிதிய செயலகம் மூடப்பட்டுள்ளது. இதனால் சந்திப்பு நடக்கவில்லை என்றும், அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார். எனினும், இந்தச் சந்திப்பு எப்போது நடக்கும் என்ற எந்த விவரத்தையும் அவர் வெளியிடவில்லை. (த)

# அரசமைப்புக்கு எதிராக பிக்கு உணவு ஒறுப்பு

கொழும்பு, ஜன. 17

புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்த சூழ்ச்சி செய்யப்படுவதாகக் குற்றம்சாட்டி, பௌத்த பிக்கு ஒருவர் அதற்கு எதிராகச் சாகும்வரையான உணவு ஒறுப்புப் போராட்டத்தில் இறங்கியுள்ளார்.

கொழும்பு புறக்கோட்டை அரச மரத்தடியில், அமத்த தம்ம தேரர் என்ற பௌத்த பிக்குவே இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். அத்துடன், இவர் உணவு ஒறுப்பு இருக்கும் பகுதியில் கட்டப்பட்டுள்ள பதாகைகளில், இலங்கையில் கடற்படைத் தளம் அமைக்கும் முயற்சிகளை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் ஒளிப்படத்துடன் கட்டப்பட்டுள்ள பதாதைகளில் இந்தியாவின் தலையீடுகளுக்கு எதிரான வாசகங்களும் எழுதப்பட்டுள்ளன. (த)

## பாதுகாப்பு விடயங்கள் கொண்ட

# அமெரிக்க உடன்பாட்டை மறுத்தது இலங்கை அரசு

கொழும்பு, ஜன. 17

இலங்கையுடன் இருதரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதற்கு அமெரிக்கா முன்வைத்திருந்த புரிந்துணர்வு உடன்பாட்டு வரைவு ஒன்றை இலங்கை அரசு நிராகரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுடன் இந்த உடன்பாட்டைக் கையெழுத்திடுவதற்கு அமெரிக்கா விருப்பம் வெளியிட்டிருந்தது. இதற்காகச் சமர்ப்பித்திருந்த வரைவில், இருதரப்பு பாதுகாப்பு வசதிகளை உருவாக்குதல், பயிற்சிகள், விநியோகங்கள், பிராந்திய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டு வரைவு ஆவணத்தை இலங்கையின் பாதுகாப்புச் செயலர் தலைமையிலான குழுவொன்று ஆராய்ந்த பின்னரே, அதன் பெரும்பாலான உள்ளடக்கங்களை நிராகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

# தெற்கு மீனவர் அழைத்துவந்திருந்த நாயில்தான் ட்றைபனசோம நோய்!

## ஏனையவற்றுக்குப் பரவாதிருக்கும் வகையில் தடுப்பு நடவடிக்கை வேண்டும் எனக் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜன. 17**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் முகத்துவாரம் பகுதியில் தங்கியுள்ள தென்னிலங்கை மீனவர்கள் தெற்கிலிருந்து அழைத்துவந்த நாய்களிலேயே ட்றைபனசோம நோய் இனங்காணப்பட்டது. அவற்றில் ஒரு நாய் உயிரிழந்துள்ளது.**

அதன்படி தென்பகுதியிலிருந்து தெற்கு மீனவர்கள் அழைத்துவந்த நாய்கள் மூலமாக இந்த நோய் ஏனைய நாய்களுக்குப் பரவுகிறதா என்ற சந்தேகம் தற்போது அங்கு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

நாய்களுக்கு ட்றைபனசோமா என்னும் நோய்த் தாக்கம் முல்லைத்தீவில் கொக்குளாய்ப் பகுதியில் இனங்காணப்பட்டது. அது மனிதருக்கும் பரவும் வாய்ப்புள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நோய் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் நோக்கில் மத்திய சுகாதார கால்நடை அமைச்சின் சிறப்பு நிபுணர்கள் அடங்கிய குழுவினர் சில நாள்களுக்கு முன்னர் முல்லைத்தீவுக்கு வந்து ஆய்வு நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில், முல்லைத்தீவிலுள்ள தென்பகுதி மீனவர்கள் வாழும் பகுதியில் ஏற்கனவே 4 நாய்கள் காரணம் தெரியாது இறந்துள்ளன. இவ்வாறு மற்றுமோர் வளர்ப்பு நாயும் நோயால் பீடிக்கப்பட்டபோதே அவர்கள் கால்நடை மருத்துவரை நாடியுள்ளனர். ஒரு நாய் பரிசோதனைக்காகப் பெரதெனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு முகத்துவாரம் பகுதியில் தங்கியுள்ள தென்பகுதி மீனவ மக்கள் தமது செல்லப்பிராணிகளாக தெற்கில் இருந்து அழைத்துவந்து வளர்த்த நாய்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளமை தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் அங்குள்ள ஏனைய நாய்களுக்கும் நோய் பரவியிருக்கலாம் என்றே அஞ்சப்படுகின்றது.

இந்த ஆய்வின் பின்னர் அந்தப் பகுதியில் வாழும் சகோதர மொழி பேசும் மக்களின் நலன் கருதியும் குறித்த நோய்த் தாக்கம் ஏனைய பகுதிகளுக்குப் பரவுவதற்கு முன்பாகவும் அந்தப் பகுதியில் உடனடியாக தடுப்பு நடவடிக்கை எடுப்பதே முன் ஆயத்த நடவடிக்கையாக அமையும் என்று அங்குள்ள பங்குத் தந்தை அகஸ்ரின் தெரிவித்தார்.

நாய்களில் ஏற்பட்டிருக்கும் இந்த நோய்த் தாக்கம் மனிதருக்கும் ஏற்படக் கூடிய வாய்ப்பு உள்ளது என்று பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் எச்சரித்துள்ளார். (த-105)

# பிரதேச சபைகளின் ஆளணியை அதிகரிக்க நடவடிக்கை துரிதம்

யாழ்ப்பாணம், ஜன. 17

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை மட்டுமன்றி வடக்கில் உள்ள 34 பிரதேச சபைகளின் ஆளணி அதிகரிப்பு, திண்மக் கழிவு பரிகரிப்பு செயற்றிட்டம் தொடர்பில் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம. பற்றிக் டிறைஞ்சன் தெரிவித்தார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சிமாத இறுதி நாள் பரிசளிப்பு விழா பிரதேச சபையின் மண்டபத்தில் தலைவர் த. நடனேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் உள்ளூராட்சி ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது:

வலிகாமம் மேற்கு பிரதேச சபைமக்களையும், சபையையும் இணைக்கும் நிறுவனமாக இன்று பெருமாற்றம் பெற்றுள்ளது. வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு என்று ஒரு கீதம் உருவாக்கும் எண்ணம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் திண்மக் கழிவுகளை டிராக்டர் மூலம் கொண்டுவரும் போது அதற்கெனஒருகீதத்தையும்தன்னகத்தே கொண்டுள்ளது.

**உடலை அசைப்பதை விட்டுவிடாதீர்கள்!**

இன்று மாணவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள் என்று அநேகமானவர்கள் உடலை அசைத்து விளையாடுகின்ற விளையாட்டுக்களை முழுமையாகத் தவிர்த்து, நோயைத் தருகின்ற நவீன அலைபேசிக்குள் உறைந்து விடுகின்றனர். இதுகவலைக்குரிய விடயம்.

வளர்ந்து வருகின்ற இளம் சமுதாயம் வாசிப்பில் அதிக அக்கறைகாட்ட சனசமூக நிலையங்கள், நூலகங்கள் சென்று வாசிப்பைத் தூண்ட வேண்டும். மாலை நேரங்களில் உடலை அசைத்து விளையாடுகின்ற விளையாட்டுகளில் நேரத்தை ஒதுக்கீடுசெய்துவிளைாடமுன்வர வேண்டும் என்றார். (த-50)

# அரசியலில் பொறுமையின் முக்கியத்தை உணர்த்தினேன்

## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 17



பலரும் எனக்கு அமைச்சுப் பதவி கிடைக்காது எனவும் அதற்கு ஆப்பு வைக்கப்பட்டு விட்டதாகவும் கூறிவந்தார்கள். ஆனால் நான் பொறுமையாக இருந்த காரணத்தால் இன்று எனக்கு நல்லதொரு அமைச்சு கிடைத்திருக்கின்றது. எனவே இது எனது பொறுமைக்கு கிடைத்த ஒரு வெற்றி என்றும் அரசியலில் பொறுமையாக இருந்து முடிவெடுக்க வேண்டும் என்பதற்கு இது உதாரணம்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், சிறப்புப் பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நுவரெலியாவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

கடந்த காலங்களில் நான் நாடு பூராகவும் சென்று வேலை செய்தேன். தற்பொழுது இந்த அமைச்சின் மூலமாக பெருந்தோட்ட பகுதிகளில் பாதை அபிவிருத்தி, பாடசாலைஅபிவிருத்தி, சுகாதாரம், ஆலயங்களுக்கான அபிவிருத்தி சிறுவர் மகளிர் விவகாரம் தொடர்பான அபிவிருத்தி ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

எனக்கு கிடைத்திருக்கின்ற இந்த அமைச்சின் மூலமாக பெருந்தோட்ட பகுதிகளுக்கும் கிராமங்களுக்கும் நகர்புறங்களுக்கும் அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும். சுகாதாரம், கல்வி, பாதை அபிவிருத்தி, ஆலய அபிவிருத்தி மற்றும் சிறுவர் மகளிர் விவகாரம் ஆகிய துறைகளில் நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.

மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளருமான ஆர். ராஜாராம், மலையக மக்கள் முன்னணியின் பொருளாளரும் பேராசிரியருமான எஸ். விஜேசந்திரன், உப தலைவர்களான கிருஸ்ணன், ஜெயபாரதி, மலையக தொழிலாளர் முன்னணியின் செயலாளர் சுப்பிரமணியம், மலையகதொழிலாளர் முன்னணியின் நிதிச் செயலாளர் விஸ்வநாதன் புஸ்பா, பிரதேச சபை உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

# வரும் 21ஆம் திகதியிலிருந்து ஒரு வாரம் போதை ஒழிப்பு

## கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

யாழ்ப்பாணம், ஜன. 17

எதிர்வரும் 21 திகதி தொடக்கம் போதை ஒழிப்பு வாரமாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பான அறிவுறுத்தல் சகல கல்வி சார்ந்த தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

2020ஆம் ஆண்டு போதை பொருள் பாவனையற்ற நாடாக மாற்ற வேண்டும் என்று அரச தலைவர் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றார். பாடசாலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் போதைப் பொருள் விற்பனை மற்றும் பாவனை தொடர்பில் கண்காணித்து நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாரைக் கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் அரச தலைவர் பணித்துள்ளார்.

மாணவப் பருவத்தில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதால் அவர்களின் வாழ்க்கை கேள்விக் குறியாகிறது. சிலர் இதனை ஏன் பயன்படுத்துகிறோம்? இதனால் என்ன பாதிப்புகள் உண்டாகும் என்பதை மாணவர்கள் அறியாமல் உள்ளனர். ஆகவே போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இந்தப் போதை ஒழிப்பு வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 21 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை இந்த வாரம் கடைபிடிக்கப்படும். துறை சார்ந்தவர்கள் நாடகங்கள், காணொலிகள், ஆற்றுகைகள் மூலமாக மாணவர்களுக்குத் தெளிவூட்டும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

### அநுராதபுரத்தில் தனிநபர் கையகப்படுத்திய

# விவேகானந்த சபைக்குரிய காணியை மீட்டுத் தருமாறு குருக்கள் கோரிக்கை

**வவுனியா, ஜன. 14**
**அநுராதபுரம் விவேகானந்தா சபைக்குரிய காணியை அடாத்தாகச்சிலர் அபகரித்துள்ளனர். அவற்றை மீட்டுத் தருமாறு அநுராதபுரம் விவேகானந்தா சபையின் தலைவரும், அநுராதபுரம் கதிரேசன் ஆலயத்தின் தலைமைக் குருக்களுமான பி. ஞானச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அநுராதபுரத்தில் இந்துமக்கள் எதிர்கொள்கின்ற அசௌகரியங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பொன்று வவுனியா தமிழ் ஊடக மையத்தில் சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்றது. அதில்கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

1985ஆம்ஆண்டுநடைபெற்ற வன்செயல்களின்பின்னர் 2000ஆம்ஆண்டு விவேகானந்தாசபையைஅநுராதபுரத்தில் மீண்டும் ஆரம்பித்திருந்தோம். அநுராதபுரம்விவேகானந்தாசபைக்கு ஒதுக்கப்பட்ட காணியை சண்முகம் சிவஞானம்என்பவர்சட்டவிரோதமாக அரசஅதிகாரிகளைப்பிழையாகவழிநடத்தி, காணிக்கான உரிமப் பத்திரத்தைப் பெற்றுள்ளார்.

குறித்த காணி 2006ஆம் ஆண்டளவில் சண்முகம் சிவஞானம் என்பவருக்கு எரிவாயுவியாபாரம்நடத்துவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டு விவேகானந்த சபையால் வழங்கப்பட்டிருந்தது. 2011ஆம் ஆண்டு குறித்த காணியை போலியான முறையில் தனக்குச்சொந்தமாக்கிநீண்டகாலஉரிமப்பத்திரத்தை அவர்பெற்றுள்ளார்.

குறித்தகாணிக்குஅவர்உரிமப்பத்திரம் பெற்றுள்ளார் என்றவிடயம் 2016ஆம் ஆண்டே எமக்குத் தெரியவந்தது. குறித்த விடயம் தொடர்பாகத் தகவல் அறியும்உரிமைச்சட்டத்தின்மூலமாக நாம் விண்ணப்பித்து பல விடயங்களை அறிந்தபோது போலியான தகவல்கள் மூலம் அரசஅதிகாரிகளை ஏமாற்றி, இலஞ்ச ஊழல் மூலமாகக் காணிக்கானஉரிமப்பத்திரத்தை அவர் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதைத் தெரிந்துகொண்டோம்.

இதுதொடர்பாக நீதிமன்றில் வழக்கு தாக்கல்செய்துள்ளோம். கடந்தவருடம் சபையின்மிகுதிக்காணியையும்தனக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கான முயற்சிகளை அவர் மேற்கொண்டார். நீதிமன்றில் வழக்கிருப்பதால் அது முடியாமல்போனது. குறித்த நபர் யாழ்பாணம்காரைநகரைச்சேர்ந்தவர். யாழ்ப்பாணம், வவுனியா, அநுராதபுரம், கொழும்பு போன்ற பகுதிகளில் பல வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார். பலகோவில்களையும் கட்டியிருக்கிறார். பெரும் கொடையாளி என்று அறியப்படுபவர். எனினும் ஒரு இந்துவாக இருந்து கொண்டுவிவேகானந்தாசபைக்குரிய அனைத்துக்காணிகளையும்தனக்குச் சொந்தமாக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். இவரால் அபகரிக்கப்பட்டகாணியில்அசைவஉணவகம் ஒன்று இயங்குகிறது. இது எமது சமயத்துக்கு ஒவ்வாத நடவடிக்கையாகவே உள்ளது.

இதேவேளை அநுராதபுரம் கதிரேசன் கோவிலின் ஒரு ஏக்கர் காணியும், அதற்கு அருகாமையில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள காணியையும் சொந்தமாக்கிக் கொள்வதற்கு வேறு இருவர் முயன்று வருகின்றார்கள்.

ஏற்கனவே அநுராதபுரத்தில் இந்து மக்களின் தொகையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளால் மீதி இருக்கும் சொற்ப மக்களின் தொகையிலும்மாற்றம்ஏற்பட்டுவிடும். பொதுமக்களின் சொத்துக்களை தனிநபர்களின் தேவைக்காக அரசஅதிகாரிகள், ஊழியர்கள், மக்கள் பிரதிநிதிகள் போன்றோர் கையூட்டுப் பெற்றுக் கொண்டு மாற்றிவழங்கியிருக்கின்றனர். இதுவெட்கக்கேடானவிடயம். இது நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது.

எனவே விவேகானந்தா சபைக்குச் சொந்தமான காணியை மீட்டுத்தருவதுடன், இதில் ஈடுபட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகளைவெளிப்படுத்திஉரியநடவடிக்கைஎடுக்கவேண்டும்என்று உரியதரப்புகளைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

குறித்த விடயம் தொடர்பாக அரசதலைவர் அலுவலகம், தலைமை அமைச்சர் அலுவலகம், எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகம், காணிஅமைச்சு, இந்துவிவகார அமைச்சு என்று 13 திணைக்களங்களுக்கு மனுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

10க்கும் மேற்பட்டவர்கள் ஊடக சந்திப்புக்காக அநுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கு வந்திருந்தனர். அவர்களில் சிங்கள இனத்தவர்களும் அங்கம் வகித்திருந்தனர்.

(த-110)

# கிராம எழுச்சித் திட்டங்களை மக்களுக்கு விளக்கிக்கூறவும்

### அதன்பின்னரே செயற்படுத்துமாறு சரவணபவன் எம்.பி. வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், ஜன. 17
கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ், அபிவிருத்திக்கானகருத்திட்டங்களை முன்வைக்கும்போது மக்களிடம் சென்று அரசின் திட்டங்களை விளக்கிக்கூறி கருத்திட்டங்களை முன்னுரிமைப் படுத்த வேண்டும். அதன்பின்னர் மக்களின் பங்களிப்புடன் இறுதிமுடிவுக்குவரவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்வரும் காலங்களில் பொருளாதார விவகாரங்கள், வடக்கு அபிவிருத்தி அமைச்சால் துரித கிராம அபிவிருத்தி என்ற கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் (கம்பரெலிய) 300 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

பிரதேசசெயலகங்கள், உள்ளூராட்சிச்சபைகள் இணைந்த வகையில் மக்கள் பங்கேற்புத் திட்டத்தை முன்வைத்து கிராமங்கள், கிராம அலுவலகங்கள் தோறும் மக்களைத் திரட்டி கருத்திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

அதன் மூலமேமக்களின்தேவைகளை (வீதிகள், குளங்கள், சிறுகுளங்கள், பாலங்கள், பாடசாலை மீள்சீரமைப்பு, மைதானசீரமைப்பு, சந்தை, சிறுவர்பூங்கா, பொதுமக்களுக்கானமின்சார இணைப்பு, ஆலயதேவைகள், சோலர்மின் விளக்கு) முன்னுரிமைப்படுத்தித் திட்டங்களைப் பெறலாம். வெறுமனே அரசியல்வாதிகள், அதிகாரிகளால் இனம்காணப்படும் திட்டங்கள் முழுமை பெறுவதில்லை.

எனவேதுரிதகிராமஅபிவிருத்தித்திட்டம் 2019 இல்வடக்கில் வெற்றி பெறவேண்டும் என்றால் பொதுமக்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள் என்று கருத்திட்டங்களைப் பெற்றால் மட்டுமே உண்மையான அபிவிருத்திகளை எட்டலாம் - என்றார்.

(த-50)

# ஊடக, கருத்துச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

### முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன. 17
நாட்டில் ஊடக சுதந்திரமும், கருத்துச் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். கடந்த வாரம் சில ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கன. அவைபோன்று எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்க வேண்டும்என்றுமுன்னாள்நாடாளுமன்றஉறுப்பினரும், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம்கொழும்பிலுள்ளசிலஊடகநிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இது கவலையளிக்கும் விடயம், எந்த நாட்டில் ஊடகத்துறைக்கும், ஊடகவியலாளர்களுக்கும் பாதுகாப்பும் சுதந்திரமும் வழங்கப்படுகிறதோ அந்த நாட்டில் ஜனநாயகம், பாதுகாக்கப்படுவதோடு, நல்லாட்சியும் உறுதிசெய்யப்படுகிறது. மக்கள் நலன் மேம்பாடுகளும்அதிகரிக்கும். அந்தவகையில்ஊடகத்துறையின் பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையும் பொறுப்புமாகும்.

\நல்லாட்சியில்ஊடகச்சுதந்திரம்குறித்தும் ஊடகவியலாளர்கள்நலன்கள்குறித்தும்அரசு அதிககவனம்செலுத்தியுள்ளது என்று அறிவித்தல்கள் மாத்திரமே வெளியாகின்றனவே தவிர செயற்பாடுகள் பல அவற்றுக்கு எதிராகவே உள்ளன. ஊடகங்கள்உண்மைக்குப்புறம்பாகவோசட்டத்துக்குமாறாகவோ செயற்படுகின்றபோது சட்டத்தின் உதவியை நாட வேண்டுமே தவிர ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும்அச்சுறுத்தும்வகையில் செயற்பாடுகள் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மேலும் தெரிவித்தார்.

(த-214)

# வீடு புகுந்து வாள்வெட்டு

### தைப்பொங்கலன்று மீசாலையில் சம்பவம்

சாவகச்சேரி, ஜன. 17
நண்பர்களுடன்பொங்கல்பண்டிகையைக் கொண்டாட நண்பன் வீட்டுக்கு வந்திருந்த இளைஞரை உந்துருளியில் வந்த 15 பேர் அடங்கிய கும்பல் வாளால் வெட்டிக் காயப்படுத்தியதுடன் அவரது உந்துருளியையும் தாக்கிச் சேதப்படுத்தியது.

இந்தச்சம்பவம்மீசாலைகிழக்குஅல்லாரை தம்பு தோட்டத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

எழுதுமட்டுவாழ்தெற்கைச்சேர்ந்த ஆனந்தராசா லக்கிகன் (வயது 19) என்பவரே வாள் வெட்டில் படுகாயமடைந்தார். அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

(த-9)



*தமிழகத்தின், சென்னையில் நடந்து கொண்டிருக்கும் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவை இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் 'உதயன்' குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் பார்வையிட்டார். அதன்போது புதுச்சேரி பேராசிரியை முனைவர் நளினிதேவி தனது ஆய்வு நூல்கள் இரண்டை சரவணபவனிடம் வழங்கினார். அதன்போது 'நக்கீரன்' புலனாய்வு இதழ் வெளியிடும் 'இனிய உதயம்' இலக்கிய இதழின் பொறுப்பாசிரியர் ஆரூர் தமிழ் நாடன் (இடதுபுறம்), இலங்கைத் தமிழ் மணி பன்னூலாசிரியர் மானா மக்கீன் (வலதுபுறம்) ஆகியோரும் கலந்துகொண்டனர்.* (த)

# காட்டு யானைகள் தாக்கி 95 பேர் உயிரிழந்துள்ளனர்

### விபத்துகளால் 311 யானைகள் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 17
கடந்தவருடத்தின்முதல்10 மாதங்களில் 311காட்டுயானைகள் உயிரிழந்துள்ளன என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவிக்கின்றது. அத்தகைய காட்டு யானைகளின் தாக்குதலில் 95 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்தவருடத்தில்மனிதசெயற்பாட்டினாலேயே, அதிகயானைகள் உயிரிழந்துள்ளன என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளைஉயிரிழந்தயானைகளில் 48 யானைகள், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளன. 29யானைகள்தொடருந்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன என்றும்வனஜீவராசிகள்திணைக்களம்குறிப்பிட்டுள்ளது. திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் வரை ஆயிரத்து 445 யானைகள் உயிரிழந்துள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.



(த-222)

# வடமாகாண அலுவலகங்களில் பெண்கள் 50 வீதமாக அதிகரிப்பர்!

## ஆளுநர் ராகவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

வடக்கு மாகாணத்திலுள்ள அரச அலுவலகங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 50 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார். தமிழர்களின் தனிப்பெரும் பண்டிகையான தைப்பொங்கல் பண்டிகை வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் தலைமையில் அவரது செயலகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம்பெற்றது.



ஆளுநர் தனது செயலக பணிக்குழாமினருடன் பொங்கல் பொங்கி சம்பிரதாயபூர்வமாகத் தைப் பொங்கல் பண்டிகை கொண்டாடினார்.

இதன்போது பணிக்குழாமினரிடம் கருத்துத் தெரிவித்தபோதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார் என்று அவரது ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. தற்போது வடக்கு மாகாணத்தில் ஆசிரியர்களாகவும் தாதியர்களாகவுமே பெண்கள் அதிகளவில் பணிபுரிந்து வருகின்றனர். அந்த நிலைமையை மாற்றி 2020/21 ஆம் ஆண்டளவில் வடக்கிலுள்ள அனைத்து அரச அலுவலகங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 50 வீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை உடனடியாகவே ஆரம்பிக்கவுள்ளேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (கு)

# தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 17

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்குக் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாகவுள்ள மாவட்டக் கிளை அலுவலகத்தில் இடம்பெறும்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

கட்சிக் கிளைகள் அமைப்பு, தமிழ் அரசு வாலிப முன்னணி, மகளிர் அணி ஆகியவற்றின் முன்னேற்றங்கள் ஆய்வு செய்யப்படவுள்ளன.

தற்போதைய அரசியல் நிலவரங்கள் பற்றியும் மேற்படி மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகச் செயலர் சூ.சேவியர் குலநாயகம் அறிவித்துள்ளார். (கு-50)



# ஈழத்துக்குப் படகில் திரும்ப முற்பட்ட இருவர் இந்தியக் கடற்படையால் கைது

## அவர்கள் விசாரணையிலுள்ளனர்

மன்னார், ஜன. 17

**தமிழகத்திலிருந்து சட்ட விரோதமாக படகில் இலங்கைக்குத் திரும்ப முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பேரை இந்திய கடலோரக் காவற்படையினர் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்துள்ளனர். அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இவர்கள் இராமேஸ்வரம் மண்டபத்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குப் படகில் சென்றுகொண்டிருந்தபோது, மன்னார் வளைகுடா கடற்பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடலில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடலோரக் காவல் படையினர் சந்தேகத்துக்கு இடமான வகையில் கண்ணாடி இழைப்படகில் இருவர் பயணிப்பதை அவதானித்து சோதனையிட்டு அவர்களைக் கைது செய்ததாகக் கடலோரக் காவற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சிவராஜா மற்றும் அன்பு குமரன் ஆகியோரே கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் சகோதரர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இருவரும் இலங்கையில் இடம்பெற்ற போர் காரணமாக 1990 ஆம் ஆண்டு படகு மூலமாக ஏதிலிகளாக இந்தியாவின் தமிழகத்துக்குச் சென்றிருந்தனர். மதுரை ஆனையூர் முகாமில் தங்கியிருந்தனர். படகு மூலமாக ஈழத்துக்குத் திரும்பும்போது அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று விசாரணைகளின் அடிப்படையில் கடலோரக்காவற் படையினர் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடமிந்து சுமார் 10 அலைபேசிகள், பன்னாட்டுப் பணம், தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணை இடம்பெறுகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

போர் காரணமாக ஈழத்திலிருந்து சென்றவர்களை மீளவும் நாட்டுக்கு வருமாறு அரசு சில வருடங்களுக்கு முன்னர் அழைப்பு விடுத்திருந்தது. அவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகவும் வீடு வழங்கப்படும் என்றும் இலங்கை அரசு கூறியிருந்தது.

அதன்படி குறிப்பிட்ட தொகையினர் இந்தியாவிலிருந்து ஈழத்துக்குத் திரும்பியுள்ளனர். (கு-56)

# மாட்டிறைச்சிக் கடைகளை மூடத் தீர்மானிக்கும் பிரதேச சபைகள் மீது அழுத்தங்கள்

## அத்தகைய அதிகாரிகள் மீது நடவடிக்கையெடுக்க தயக்கம் இராது என்று இந்துசமயப் பேரவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

அந்நியர்கள் தமது ஆட்சிக் காலத்தில் தமது உடைகளுக்காக ஒவ்வொருவரும் மாடுகளைக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டபோது அதனைச் செய்வதற்கு மறுத்து இந்தியாவுக்குச் சென்ற ஞானப்பிரகாசர் மண்ணில் மாட்டிறைச்சிக்கடைகளை மக்கள் பிறப்புக்கு அமைய பூட்டுவதற்குத் தீர்மானங்கள் இயற்றும் பிரதேச சபைகள் மீது தேவையற்ற அழுத்தங்களைச் சில மாற்றுமத அதிகாரிகள் பிரயோகித்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

அத்தகைய அதிகாரிகள் அழுத்தம் கொடுத்தால் இந்துக்களிடம் முறையான பாடம் கற்க வேண்டிவரும். அவர்கள் இத்தகைய போக்கைக் கைவிடவேண்டும். மக்கள் கருத்துக்கு மதிப்பளிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இது ஜனநாயக நாடு என்பதை மறந்து செயற்படுவார்களானால் தகுந்த பாடம் கற்றே ஆக வேண்டிவரும்.

இவ்வாறு யாழ்ப்பாண இந்து சமயப் பேரவை கூறியுள்ளது.

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இந்து ஆலயங்களின் பரிபாலன சபைகளுக்கான கலந்துரையாடலுக்குத் தலைமை தாங்கி உரையாற்றியபோது இந்து சமயப் பேரவைச் செயலர் ஸ்ரீ.சிவசக்திகீரிவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இன்று ஆலயங்களுக்கு அருகில் மாட்டிறைச்சிக் கடைகளும் மாதுபானசாலைகளும் மலியத் தொடங்கிவிட்டன. இது நம்மவர் கலாசாரத்துக்கு முரணானது. இதனை உணர்ந்து செயற்படும் உள்ளூராட்சிச் சபைகளுக்கு இந்து சமயப் பேரவை என்றும் பக்கபலமாகவே இருக்கும். மக்களின் வேணவாக்களை நிறைவேற்ற மக்கள் பிரதிநிதிகள் செயற்படுவதை எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. அப்படி ஒரு ஏற்பாடும் சட்டங்களில் இருப்பதாகத் தெரியவில்லை.

மக்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் பயமுறுத்தினால் அதனால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமாகலாம் என்பதை மறந்து செற்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆலய நிர்வாகிகள் இங்கு வந்து தமக்குள்ள குறைகளைப் பகிர்ந்து கொள்வது எமக்குப் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. அவர்கள் எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் ஆலயங்களைத் திறம்பட நடத்தி வருகிறார்கள். எனினும் அவர்களால் தங்கள் மீது தேவையற்ற பழிச் சொற்கள் வராதபடி ஆசார சீலத்தையும் நிதி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்- என்றார்.

**முரணான செயற்பாடுகள்**

இந்தக் கலந்துரையாடலில் நல்லை ஆதின மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கியபோது தெரிவித்ததாவது:

போர் உக்கிரமடைந்தபோது அனைவரும் மௌனிகளாக இருந்தனர். அந்தக் காலத்தில் இந்து சமயப் பேரவை ஆற்றிய பணிகள் எழுத்திலடங்கா. இந்துக்களின் நலனுக்காக அவர்கள் ஆற்றிய பணிகள் மூலம் அந்தப் பேரவை மக்கள் மனதில் ஆழப் பதிந்துள்ளது. சில காலமாக எமது பிரதேசத்தில் எமது கலாசார பண்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை கவலைக்குரியது. அனைவரும் இந்து சமயப் பேரவையுடன் இணைந்து அத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்- என்றார்.

**சொத்துக்களைப் பொறுப்பாக்கி ஆலயத்தைப் பொறுப்பெடுங்கள்**

இந்த நிகழ்வில் கருத்துரையாற்றிய முன்னாள் உதவிக் காணிப் பதிவாளர் நாயகம் பிரம்மஸ்ரீ ந.சதாசிவஐயர் தெரிவித்ததாவது:

ஆலயங்களைப் பராமரிக்கும் பரிபாலன சபையினர் சொத்துக்களைச் சரியாகப் பதிந்து ஆவணப்படுத்த வேண்டும் என்பது தலையாய கடமை. இதைச் சரியாகப் பேணாத சில ஆலயங்களின் பரிபாலன சபையினர் வழக்குகளை எதிர்கொள்கிறபோது பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. நம்முன்னோர் ஆலயங்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஒரு பரிபாலன சபையினரிடம் இருந்து இன்னோர் பரிபாலன சபையினர் பெறுகிறபோது தமது சொத்துக்களைப் பொறுப்பாக்கி ஒற்றி உறுதிகளை முடித்துவிட்டே ஆலயங்களைப் பரிபாலிக்கத் தொடங்கியிருப்பதற்கான பல ஆதாரங்கள் காணப்படுகிறன. இத்தகைய பொறுப்புணர்வு இன்று அருகி வருவதே ஆலயங்களில் ஏற்படும் பிணக்குகளுக்குக் காரணமாகிறது.

ஆலயச் சொத்துக்களைப் பேணுவதில் யாருக்காவது உதவி தேவைப்பட்டால் இந்து சமயப் பேரவை ஊடாக எம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்பதைத் அறியத் தருகிறேன்- என்றார்.

**மாற்றுத் தொழில் வழங்கத் தயார்**

மறவன்புலவு எஸ். சச்சிதானந்தன் உரையாற்றுகையில் நம்மவர்களில் பலர் மதம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அது தொடர்ந்தபடியே இருக்கின்றது. அது தற்போது யாழ்ப்பாணத்துக்கும் பரவத் தொடங்கிவிட்டது. மாட்டிறைச்சிக் கடைகளை நடத்தும் சில வியாபாரிகள் தமது தொழில் கெட்டுவிடும் என்று கூறி வருகிறார்கள். அப்படியானவர்களுக்கு மறுவாழ்வளித்து புதிய தொழில்களைத் தொடங்க நாம் உதவுவதற்கு தயாராக உள்ளோம். ஆயிரக்கணக்கான மக்கள் வாழும் பிரதேசத்தில் 806பேர் கையொப்பமிட்டு மாட்டிறைச்சிக் கடை வேணும் என்று விண்ணப்பித்தால் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எண்ணும் அதிகாரிகளை எப்படி வர்ணிப்பது என்று தெரியாதுள்ளது - என்றார். (கு)

## மகிந்தவின்...

னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச, நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

"மக்கள் தயார் என்றால், அரச தலைவர் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பதாக கோத்தபாய ராஜபக்ச கூறியுள்ளார். அரச தலைவர் பதவிக்கு நான் பொருத்தமானவர் எனின், நானும் போட்டியிடுவதற்குத் தயாராகவே இருக்கின்றேன்" என்று சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவார் என்றும், அவர் யார் என்பதை இப்போது வெளியிட முடியாது எனவும் சில நாள்களுக்கு முன்னதாக, சமல் ராஜபக்ச தெரிவித்திருந்தார். இதற்குப் பின்னர், கோத்தபாய ராஜபக்ச, அரச தலைவர் தேர்தலில் போட்டியிடத் தயார் என்று அறிவித்துள்ளதை அடுத்து, சமல் ராஜபக்ச, தானும் தயாராக உள்ளேன் என்று தெரிவித்துள்ளார். (ம)

## புதிய அரசமைப்பை...

ராஜபக்ச.

"மகாநாயக்க தேரர்களின் அறிவுரைகளை இந்த அரசு உதாசீனம் செய்கின்றது" எனவும் அவர் குற்றம்சாட்டினார்.

இது தொடர்பில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:

அவசரப்பட்டு புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதில் இந்த அரசு உறுதியாகவுள்ளது. இதில் எமக்கு பலத்த சந்தேகங்கள் உள்ளன. நாட்டின் பொருளாதாரம் அதாள பாதாளத்தைச் சென்றடைகின்றது. முதலில் அதை உயர்த்த வேண்டும். அதைவிடுத்து அர்த்தமற்ற புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதில் எவ்வித பயனும் இல்லை.

முதலில் புதிய அரசமைப்புப் பணியை அரசு கைவிட வேண்டும். இல்லையேல் நாடளாவிய ரீதியில் மாபெரும் போராட்டங்கள் வெடிக்கும். மக்களைத் திரட்டி அரசுக்கு எதிராக இந்தப் போராட்டங்களை நாம் முன்னெடுப்போம்.

நாட்டைத் துண்டாக்க நாம் ஒருபோதும் இடமளியோம். நாட்டைப் பாதுகாக்க இராணுவத்தினர் சிந்திய குருதி வீண்போக விடமாட்டோம். புதிய அரசமைப்பை தமிழ் மக்கள் விரும்பவில்லை. முஸ்லிம் மக்களும் விரும்பவில்லை. சிங்கள மக்களும் அதை அடியோடு நிராகரிக்கின்றார்கள்.

இந்நிலையில், எதற்குப் புதிய அரசமைப்பு? ரணில், சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரின் விருப்பத்துக்கு இணங்க நாட்டின் அரசமைப்பை மாற்றியமைக்க முடியாது. முதலில் நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்லுமாறு இந்த அரசுக்கு சவால் விடுகின்றேன். அதன் பின்னர் ஆட்சியமைக்கும் அரசு புதிய அரசமைப்பு தொடர்பில் சிந்திக்கட்டும் - என்றார். (ம-ஒ.5,22)

## அரசமைப்பு...

ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

மகாநாயக்க தேரர்கள் மற்றும் சிங்களப் புத்திஜீவிகள் ஆகியோரின் எதிர்ப்பையடுத்து புதிய அரசமைப்பைக் கொண்டுவரும் முயற்சியில் இருந்து அரசு பின்வாங்குகின்றது என்று இணையதளங்களில் வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பின் உள்ளடக்கங்களை நாட்டிலுள்ள சகல தரப்பினருக்கும் நாம் தெளிவுபடுத்துவோம். நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் இந்தப் பணிகளை நாம் நினைத்த மாதிரி முன்னெடுக்க முடியாது. சகல தரப்பினரினது மனதையும் வென்று புதிய அரசமைப்பைக் கொண்டு வந்தே தீருவோம்.

மூவின மக்களுக்கும் நாம் அளித்த வாக்குறுதிகளிருந்து பின்வாங்கமாட்டோம். அவர்களை நல்லிணக்கத்துடன் சமாதானமாக வாழ வைப்பதே எமது நோக்கம்.

பிளவுபடாத நாட்டுக்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்குவோம். நாட்டைப் பிளவுபடுத்தும் முயற்சியில் நாம் ஒருபோதும் ஈடுபடமாட்டோம்.

சிறுபிள்ளைத்தனமாக அரசியல் நடத்துவோர் எம் மீது அர்த்தமற்ற போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். நாட்டு மக்களுக்கு உண்மை நிலை புரியும்போது குழப்பவாதிகளும் திருந்தி நல்ல வழிக்கு வருவார்கள் - என்றார். (ம-ஒ.5,22)

## போராளிகள்...

டவர்கள் என்று தெரிவித்து தவரூபன், அரவிந்தன் ஆகிய இருவருக்குமே அனுராதபுர மேல் நீதிமன்றம் நேற்று தலா பத்து ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது. இவர்கள் இருவர் மீதும் இரண்டு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இரண்டுக்கும் தலா ஐந்து ஆண்டுகள் வீதம் பத்து ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் ஐந்து ஆண்டுகளில் அந்தத் தண்டனையை அனுபவிக்க முடியும் என்றும் நீதிமன்றம் தெரிவித்தது. (ம)

## பொங்கல்...

யில் நேற்றுமுன்தினம் சுழிக்குள் சிக்குண்ட நால்வரை திருகோணமலைப் பொலிஸார் காப்பாற்றியுள்ளனர். காப்பாற்றப்பட்டவர்கள் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம-22)

## சிப்பாயின்...

கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பலாலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## வாக்குறுதியிலிருந்து...

மைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

மகாநாயக்க தேரர்கள் மற்றும் சிங்கள புத்திஜீவிகள் ஆகியோரின் எதிர்ப்பையடுத்து புதிய அரசமைப்பைக் கொண்டுவரும் முயற்சியில் இருந்து அரசு பின்வாங்குகின்றது என்று நேற்று வெளியான செய்திகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு நல்ல காரியம் நடக்க இருக்கின்றதெனில் அதைக் குழப்பியடிக்க சில கும்பல்களும் இருக்கும். அந்தக் கும்பல்களின் வதந்திக் கருத்துக்களை எவரும் நம்பக்கூடாது. உண்மை நிலையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அரசு மீண்டும் ஆட்சியமைக்க நாம் வெளியில் இருந்து அதாவது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துகொண்டு ஆதரவளித்தோம். பல கோரிக்கைகளை அரசிடம் நாம் முன்வைத்திருந்தோம். அதில் முக்கியமானதுதான் இந்தப் புதிய அரசமைப்பு. இதைக் கொண்டு வருவதில் அரசு உறுதியாக உள்ளது. அதற்கான நடவடிக்கைகளில் அரசு இறங்கியுள்ளது. நம்பிக்கையுடன் நாம் பயணிக்க வேண்டும். அதைக் குழப்பியடிக்கும் விதத்தில் எவரும் செயற்படக்கூடாது

புதிய அரசமைப்புக்கான நிபுணர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களின் உத்தேச வரைவுத் திட்டத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அரசமைப்பு நிர்ணயசபையான நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துவிட்டார். இதை நிறைவேற்றுவதற்கான பணிகளை அவர் தலைமையிலான அரசு முன்னெடுக்கும். நாமும் எம்மாலான சகல ஒத்துழைப்புகளையும் வழங்குவோம்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் இலங்கையில் நடக்கும் ஒவ்வொரு காரியங்களையும் பன்னாட்டுச் சமூகம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றது - என்றார். (ம-ஒ.5,22)

## நல்லூரில்...

தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர் முனைவர் சு. நரேந்திரன் சிறப்புரையாற்று வார். திருவையாறு அரசர் கல்லூரி முன்னான் முதல்வர் முனைவர் செல்வகணபதி தலைமையில் 'சிலப்பதிகாரக் காப்பியமும் கதைமாந்தரும்' என்ற தலைப்பில் மகளிர் அரங்கும் இடம்பெறும். இதில் 'வசந்தமாலை' என்ற பொருளில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முனைவர் எப்.தீபாவும் கவுந்தியடிகள் என்ற பொருளில் தமிழ்ப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முனைவர் எஸ். கற்பகமும் மாதரி என்ற பொருளில் தமிழ்ச் சங்க உபதலைவர் முனைவர் மனோன்மணி சண்முகதாசும் கருத்துரைகளை வழங்குவர்.

**மாலை அமர்வு**

மாலை அமர்வு நாளைமறுதினம் மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் சிலப்பதிகார வாழ்த்தை யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவன் ஜெ.மதுசிகன் இசைப்பார். தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் ந.ஐங்கரன் வரவேற்புரையையும் யாழ். பல்கலைக்கழக கல்வியியற் துறைத் தலைவர் கலாநிதி ஜெ.இராசநாயகம் வாழ்த்துரையையும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தொடக்கவுரையையும் ஆற்றுவர். சென்னை சுருதிலயா வித்தியாலய முதல்வர் முனைவர் பார்வதி பாலச்சந்திரன், மதுரை பாத்திமா கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் முனைவர் க.சரஸ்வதி ஆகியோர் பங்கேற்கும் இசையரங்கம், யாழ். கலாகேந்திரா நடனப்பள்ளி இயக்குநர் முனைவர் கிருஷாந்தி இரவீந்திராவின் நெறியாள்கையில் நாட்டிய அரங்கம் என்பனவும் இடம்பெறும். (ம)

## மக்களினுடைய...

அலரி மாளிகையில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புக்கான வரைபை அரசமைப்புச் சபையே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்தே அரசமைப்புச் சபையை உருவாக்கினர். இந்த சபையினூடாக அனைவருக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரமும் வழங்கப்பட்டிருந்தது. இதனூடாகக் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் குறித்து ஏனையவர்களின் ஆதரவான எதிரான கருத்துக்களைப் பதிவு செய்யமுடியும். இரண்டாவதாக தீர்மானங்கள் தொடர்பான மாகாண சபைகளின் நிலைப்பாட்டைப் பெற்றுக்கொள்ளவதும் அவசியமாகும்.

ஆகவே புதிய அரசமைப்பு வரைபு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னரே சட்ட மூலமாக்கப்படும். எனவே புதிய அரசமைப்புக் குறித்து எவரும் குழப்பமடையவோ அல்லது அச்சம் கொள்ள வேண்டிய அவசியமோ இல்லை.

சட்டமூலம் உருவாக்கப்பட்டதன் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்கான பெரும்பான்மையையும் பெற்றுக்கொள்ள வேண்டும். அதுமாத்திரமன்றி புதிய அரசமைப்புக்கான சட்ட மூலத்துக்காக மக்களின் கருத்தினையும் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே சட்ட மூலம் நிறைவேற்றப்படும்.

புதிய அரசமைப்புத் தொடர்பான விமர்சனங்கள் தற்போது தேவையற்றவையாகும். புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் அவசரமாக ஆரம்பிக்கப்படவில்லை. 2015ஆம் ஆண்டே புதிய புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பித்துவிட்டன. 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னரே அரசமைப்புச் சபையினூடாக அதன் வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-61)

## இராமநாதபுரம்...

கள் கைது செய்யப்பட்டனர். மீனவர் ஒருவரின் சடலமும் மீட்கப்பட்டது. இலங்கைக் கடற்படையின் படகு மோதியே குறித்த மீனவர் உயிரிழந்தார் என்று சக இந்திய மீன்வர்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் தமிழக மீனவர்கள் பலர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உயிரிழந்த மீனவரின் சடலத்தைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், இலங்கைக் கடற்படையின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே நாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம் என்று அவர்கள் இந்திய ஊடகங்களுக்குத் தெரிவித்தனர். (ம)

## ஐ.தே. முன்னணி...

முன்னணியால் பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சிக் காரியாலயத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே வீரவன்ச இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பணயக் கைதியாக மாறியுள்ளது. அதனால் கூட்டமைப்பின் இணக்கப்பாடு இல்லாமல் அமைச்சரவையில் எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ளவும் முடியாது. நிறைவேற்றவும் முடியாது. அதேபோன்று வடக்கில் எந்த அபிவிருத்தியை மேற்கொண்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனுமதியுடனே மேற்கொள்ளவேண்டும். இதுதொடர்பான கூட்டுப்பொறிமுறையொன்று அமைக்கப்பட்டுள்ளது என மாவை சேனாதிராசா அண்மையில் தெரிவித்திருந்தார்.

அத்துடன் வடக்கு அபிவிருத்தி அமைச்சு தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கு கீழே இருக்கின்றது. கூட்டமைப்புடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமையவே ரணில் விக்ரமசிங்க இதனைத் தனக்குக் கீழ் கொண்டுவந்துள்ளார். வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கூட்டமைப்பின் இரண்டு பேர் தலைமை அமைச்சருக்குக் கீழ் நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கு அபிவிருத்தி அமைச்சராக ரணில் விக்ரமசிங்க இருந்தாலும் அமைச்சுப்பொறுப்பு முற்றாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழே இருக்கின்றது.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட நம்பிக்கைத் தீர்மானத்துக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாக வாக்களித்தமைக்கான வெகுமதியே வடக்கு அபிவருத்தி அமைச்சு. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் பெயரளவிலே இருக்கின்றது. ஆனால் அதுவே இன்று அரசின் முக்கிய அதிகாரம் மிக்க அணியாக இருக்கின்றது.

மேலும் வடக்கு அபிவிருத்தி அமைச்சை அவர்களுக்குக் கீழ் வைத்துக்கொண்டு இன்று வடக்கில் கூட்டமைப்பு இனவாத, பிரிவினைவாத பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறது. கூட்டமைப்பின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் இருவர் முல்லைத்தீவு நயாரு விகாரைக்குக் வலுக்கட்டாயமாக நுழைந்து அங்கிருப்பவர்களை எச்சரித்துள்ளனர். அத்துடன் அங்கு கோயில் கட்டப்போவதாகவும் தெரிவித்துள்ளனர். இவர்களுக்கு எதிராக சட்டம் நிலைநாட்டப்படுவதில்லை. சுமந்திரனின் கட்டளையின் பிரகாரமே வடக்கில் பொலிஸும் செயற்படுகின்றது. அரசு கூட்டமைப்பின் பணயக் கைதியாக இருக்கும் வரைக்கும் இந்த நிலை தொடரும் -என்றார். (ம-31)

## புதிய...

யிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர்.

நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் பிரச்சினைகள், உரிமைகள் ஆகியன தொடர்பில் மட்டுமே பேசியது என்று தெரிவித்த சிங்கள மக்கள், ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் புரட்சியின் பின்னர் நாட்டின் பிரச்சினைகளையும் கூட்டமைப்பு பேசியது என்று தெரிவிக்க ஆரம்பித்துள்ளார்கள். இது நல்ல சகுனமும்கூட.

மக்களும் ஊடகங்களும் புதிய அரசமைப்புக்கான வரைபில் என்ன உள்ளது என்பதைப் படித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும். நாடாளுமன்றத்தின் இணையத்தளத்தில் மூன்று மொழிகளிலும் அதைப் படித்துப் பார்க்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. அதை விடுத்து, அரசியல் வாதிகளின் கருத்துக்களின் பின்னாலும் கதைகளின் பின்னாலும் ஓடுவது நல்லதல்ல. பெரும்பாலான ஊடகங்கள் இன்று பொய்ப் பரப்புரைகளை மக்கள் மத்தியில் திணித்து வருகின்றன. அரசியல் வாதிகள் செய்யும் அரசியலை விடவும் ஊடகங்கள் செய்யும் அரசியல்தான் இன்று பெரும்பாடாக உள்ளது.

புதிய அரசமைப்பு உருவாவதைத் தடுக்க வேண்டாம் என்று மகிந்த தரப்பினரைக் கேட்டுக்கொள்கின்றேன். மகிந்த ராஜபக்ச, தனது பொங்கல் வாழ்த்தில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளார். அதற்கு அவருக்கு நன்றி. வெறும் கருத்தோடு நின்றுவிடாது அதற்கான பயணத்தில் அவரும் எம்முடன் இணைந்து பயணிக்க வேண்டும். அதற்காக நான் அவருக்கு இன்று பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (ம)



### அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில்

# ஈ.சரவணபவன் எம்.பி தலைமையில் கலந்துரையாடல்

2019ஆம் ஆண்டில் வலி.மேற்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 25 கிராம அலுவலர் பிரிவு மக்களும் நன்மை அடையக் கூடிய திட்டங்கள் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை ஆராயப்பட்டன.

இதில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் திருமதி கி.செந்தூரன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் செல்வி த.தர்சினி, கணக்காளர் ஞா.லோகநாதன், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், வலி.மேற்குப் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-50)

### காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்க

# அமெரிக்க ஆதரவை, உதவியை எதிர்பார்த்து தாயகம் முழுவதும் கையெழுத்து வேட்டை!

**யாழ்ப்பாணம், ஜன. 17**

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது நோக்கத்தை அடைவதற்காக உத்தியோகபூர்வமாக அமெரிக்காவிடம் ஆதரவு, உதவி கோரிக் கையெழுத்துப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.**

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி கையெழுத்துப் பெறும் போராட்டம் ஆரம்பிக்கப்படும்.

தாயகம் முழுவதும் கையெழுத்துப் பெறப்படும் என்று கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரை ஒப்படைக்குமாறு கோரி அவர்களின் உறவுகள் தைப்பொங்கல் தினமான நேற்றுமுன்தினம் வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதில் கருத்துத் தெரிவிக்கையில் ராஜ்குமார் மேலும் தெரிவித்ததாவது:

சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் எமது உணவு தவிர்ப்புப் போராட்டம் இரண்டு வருடங்களை எட்டவுள்ளது. இந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளான எங்களுக்கு உதவி புரியுமாறு அமெரிக்காவை உத்தியோகபூர்வமாகக் கேட்டுக்கொள்ளவுள்ளோம். அதற்காகவே கையெழுத்து வேட்டை இடம்பெறவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளைக் கண்டு பிடிப்பதற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் மற்றும் தொழிநுட்ப அறிவு முழுவதும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் உண்டு. அவர்கள் எங்களது தாயகத்துக்கு வந்தவுடன், இலங்கை இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்வார்கள். அவர்கள் காமணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை உயிருடன் கொண்டு வருவார்கள். இப்போது நாங்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பற்றிப் பேசுகையில் நமது அரசியல் எதிர்பார்ப்பும் என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் கூட்டமைப்பினர் புத்த சமயத்துக்கு முன்னுரிமை வழங்கி வடக்குக்கிழக்குப் பிரிவினைக்கு அனுமதித்து தமிழர்களுக்குக் கூட்டாட்சி வேண்டாம் என்றும் அதற்குப் பதிலாக ஒற்றையாட்சி சிங்களத்தில் ஏக்கியராஜ்ஜிய என்பதை ஏற்றுள்ளார்கள். ஒவ்வொரு நிகழ்வுகளை யும் நீங்கள் பார்த்தால் சுமந்திரனும் கூட்டமைப்பும் சிங்களவர்களுக்குத் தான் தீர்வைப்பெறுவது போல் தெரிகின்றது. தமிழர்களுக்கு அல்ல என்று தெரிவித்தார். (த-111)

## மகாசபையின் புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.17

பன்னாட்டு இந்துமத குருமார் ஒன்றியத்தின் மகா சபையின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆனைப்பந்தி குருகுலத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது

தலைவர் - கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜகதீஸ்வரக் குருக்கள், உப தலைவர்கள்- சிவஸ்ரீ து.சிவப்பிரபாகரக் குருக்கள், சிவஸ்ரீ மு.பாஸ்கரக் குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ சிவகுகேந்திரக் குருக்கள், உபசெயலாளர்- சிவஸ்ரீ சிவபாலக் குருக்கள், பொருளாளர்- சிவஸ்ரீ இ.ரமணீதரக் குருக்கள் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக சிவஸ்ரீ ஸ்ரீகந்தக் குருக்கள், பிரமஸ்ரீ சுரேஸ்வர சர்மா, பிரம்மஸ்ரீ வை.ஜெயந்திநாத சர்மா, சிவஸ்ரீ பூரண சுதாகரக் குருக்கள், சிவஸ்ரீ சு.திலகேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ கு.கஜேந்திரக்குருக்கள், சிவஸ்ரீ சு.சங்கர்குருக்கள், சிவஸ்ரீ தி.பிகலாதக் குருக்கள், சிவஸ்ரீ ர.பிரபாகரக் குருக்கள் ஆகியோருடன்

வித்துவசபை உறுப்பினர்களாக

தலைவர்பேராசிரியர் சிவஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணஐயர், சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள்,சிவஸ்ரீ கை.வாமதேவக் குருக்கள், சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள், சிவஸ்ரீ தி.கெங்காதரக் குருக்கள்,சிவஸ்ரீ சதாசிவ ஐயா, சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

## தொடக்க நிகழ்வும் கால்கோள் விழாவும்

யாழ்ப்பாணம், ஜன.17

தெல்லிப்பழை கிட்ஸ்பார்க் மழலைகள் பூங்கா மாதிரி முன்பள்ளியின் தொடக்க நிகழ்வும் கால்கோள் விழாவும் முன்பள்ளி வளாகத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஓய்வுபெற்ற பிரதி அதிபர் இ.சேதுநாதன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர், யாழ்ப்பாணம், உரும்பிராய் கிட்ஸ் பார்க் பணிப்பாளர் அ.பஞ்சலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

## கால்கோள் விழாவும் சின்னம் சூட்டுதலும்

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ்ப்பாணம், உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழாவும் சின்னம் சூட்டும் நிகழ்வும் இன்று வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபை தொழில்நுட்ப அலுவலகர் இ.தயாபரன். சிறப்பு விருந்தினர்களாக வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர்களான பா.மகாலிங்கசிவம், க.கனகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## கால்கோள் விழா

அச்சுவேலி,ஜன.17

யாழ்ப்பாணம் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் அருட்சகோதரி மரியஜவந்தி தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செ. உதயகுமார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வலய கல்வி பணிப்பாளர் சி. சுந்தரசிவம், வடமாகாண ஆரம்பப் பிரிவு பிரதிக் கல்வி பணிப்பாளர் ஏ.சற்குணராஜா, மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாண வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்வி பணிப்பாளர் பி.சசிக்குமார், கோப்பாய் கோட்ட கல்வி பணிப்பாளர் நா. சிவநேசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-422)

## கால்கோள் விழா

கொடிகாமம்,ஜன.17

யாழ்ப்பாணம் வரணி வடக்கு சைவப்பிரசாக வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பாடசாலை மேம்பாட்டுத்திட்ட வலயப் பிரதிநிதி ஆசிரிய ஆலோசகர் சீ.நாகராசா, சிறப்பு விருந்தினராக வரணி வடக்கு கிராம அலுவலர் த.அருந்தமிழ்ச் செல்வன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)

★★★ ★★★ ★★★

யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை கல்லூரியின் அருணாசல உடையார் மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு அதிபர்.நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை அதிதியாக அளவெட்டி அஞ்சலதிபர் திருமதி.கவிதா சிவகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (63)

★★★ ★★★ ★★★

யாழ்ப்பாணம் கைதடி, நாவற்குழி அ.த.க. பாடசாலையின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு அதிபர் சி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன், சிறப்பு விருந்தினராக பூநகரி விக்னேஸ்வராக அ.த.க.பாடசாலை ஆசிரியர் திருமதி வளர்மதிஉதயராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)

★★★ ★★★ ★★★

கொடிகாமம் கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கொடிகாமம் மக்கள் வங்கியின் முகாமையாளர் சி.மோகனச்செல்வன், சிறப்பு விருந்தினராக கச்சாய் அ.த.க.பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியர் ச.ஞனசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)

★★★ ★★★ ★★★

கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலையின் கால்கோள்விழா இன்று வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு அதிபர் திருமதி சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலயம் ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆலோசகர் திருமதி பிறேமினி திருக்குமார்,சிறப்பு விருந்தினர்களாக அப்புத்துறை வரதராசா,வாசுகி சரதராசா தம்பதியினர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

★★★ ★★★ ★★★

யாழ்ப்பாணம் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் கால்கோள்விழா இன்று வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் காலை 9 மணிக்கு அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்ரி.ஞானசுந்தரம், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் செ.சிவஞானசுந்தரம்,மதிப்புறுவிருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி அலுவலகர் திருமதி சிவகுமாரி ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். (ஐ)

★★★ ★★★ ★★★

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக கொடிகாமம் தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர் இ.நாகவரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-159)

★★★ ★★★ ★★★

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மகாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் செ.மகேஸ், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவர் த.கேதீஸ்வரமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம் ஜன. 17

வலிகாமம் மேற்கு தொல்புரம் கலாலயம் நாடகமன்றத்தினால் உருவாக்கப்பட்ட லங்கா தகனம் மற்றும் அபிமன்யுஇதிகாசஇசைநாடகங்களின் இறுவட்டுவெளியீட்டு நிகழ்வு இன்று பிற்பகல் .3 மணிக்குதொல்புரம் சர்வோதய நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.

கலாலயநாடகமன்றத்தலைவர் செ.உதயச்சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள்திணைக்களபதில் பணிப்பாளர் திருமதி சுஜீபா சிவதாஸ், சிறப்பு விருந்தினராக வலி மேற்கு பிரதேசசபைத்தவிசாளர்நடனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இறுவட்டின் நயப்புரையை சுன்னாகம் ஸ்கந்தவரோதயகல்லூரிநாடகமும்அரங்கக் கலைகளும் பாட ஆசிரியர் பு.கணேசராசா நிகழ்த்துவர் இறுவட்டு வெளியீடும் இறுவட்டில் குரல் பதித்த கலைஞர்கள் மதிப்பளிப்பும் இடம்பெறும். (ஐ-9)



யாழ்ப்பாணம்அராலிமாவத்தைவிளையாட்டுக்கழகம்உழவர்திருநாளை முன்னிட்டுநடத்தியகைக்கொடிமாட்டுசவாரி போட்டிநேற்றுமுன்தினம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. (ஐ-23)

# மூன்று முச்சக்கரவண்டிகள் நேருக்கு நேர் மோதி விபத்து

*ஒருவர் சாவு,நால்வர் படுகாயம்*

யாழ்ப்பாணம்,ஜன.17

மூன்று முச்சக்கரவண்டிகள் நேருக்கு நேர் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரில் ஒருவர் உயிரிழந்ததுடன் ஏனைய மூவருடன் பொலிஸ் அலுவலர் ஒருவரும் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் யாழ்ப்பாணம் இணுவில் 7 ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

படுகாயமடைந்தவர்களில் மூவர் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் பாலச்சந்திரன் சுஜன்(வயது12) என்ற சிறுவனே உயிரிழந்தார். பாலலேந்திரன் பாலச்சந்திரன் (வயது48), பாலசந்திரன் திபுஸா (வயது 8) பாலச்சந்திரன் தனுஜனி (வயது44) ஆகியோர் படுகாய மடைந்தனர்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது;

முச்சக்கரவண்டி ஒன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் பயணித்துள்ளனர்.

முச்சக்கரவண்டி இணுவில் பகுதிக்கு வந்தடைந்தபோது, அந்த நாற்சந்திக்கு மூன்று பக்கங்களில் இருந்தும் வந்த முச்சக்கரவண்டி நேருக்கு நேர் மோதியது.

விபத்துச் சம்பவம் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்த இறப்புத் தொடர்பாக யாழ் போதனா வைத்திய சாலையின் அதிகாரி ந. பிறேமகுமார் திடீர் மரண விசாரணை மேற்கொண்டார். (ஐ-8,105,106.)

## நவீன உலகில் முன்னேற வேண்டுமாயின்

# இனங்கள், மதங்களுக்கிடையிலான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்

## தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பார் தெரிவிப்பு

**தென்மராட்சி,ஜன.17**

**இன்றையநவீனஉலகில்முன்னேற்றப்பாதையில் செல்ல வேண்டுமாக இருந்தால் இனங்கள் மதங்களுக்கிடையில் காணப்படும் பிரச்சினை கள் தீர்க்கப்பட வேண்டும். என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பார்ள சு.சுந்தரசிவம் தெரிவித்தார்.**





மந்துவில் சிறிபாரதி வித்தியாலய சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டின் திட்டத்தின் கீழ்பொங்கல்விழாநேற்றுமுன்தினம் நடைபெற்றது.மேல்மாகாணஸ்ரீஜெயவர்த்தனபுர கல்வி வலயத்தின் தலகென மகா வித்தியாலயத்திலிருந்து வருகை தந்திருந்த அதிபர் ஆசிரியர்களுடனான நல்லிணக்க உறவுப்பால நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டதென்மராட்சிவலயக்கல்விப் பணிப்பார் சு. சுந்தரசிவம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்அங்குமேலும்தெரிவித்ததாவது;

தென்னிலங்கை வடமாகாணத்துடன் நல்லுறவைஏற்படுத்தசந்திரிக்காபண்டாரநாயக்க குமாரணதுங்கவினால் நல்லிணக்க அமைச்சு உருவாக்கப்பட்டது.

இலங்கை திருநாட்டில் யாழ்ப்பாணம் 1980ஆம்ஆண்டுக்குமுன்நல்லமுன்னேற்றமாக இருந்தது. இன்று கலை கலாசார பண்பாடுகளிலிருந்து யாழ்ப்பாணம் வேறுபட்டுக் காணப்படுகிறது. இதற்கு இன்றைய பொங்கல் நாள் சிறந்தஎடுத்துக்காட்டாகும். அன்றைய காலத்தில் பொங்கல் என்றால் ஒரு மாதத்திற்கு முன் ஒழுங்குபடுத்துவார்கள்வீடுதோறும்ஆரவாரமும்சந்தோசமும் காணப்படும். இதற்கு மதிப்பு கொடுப்பது இப்போது அருகிவிட்டது. அன்றைய காலத்தில் 100 வீதம் என்றால் இப்போது 5 வீதமாகக் காணப்படுகிறது.

இன்றையநிகழ்வுகிராமப்புறச்சூழலில் நடக்கும் நிகழ்வு அதில் அதிகளவு மக்கள் கலந்து இருப்பார்கள் என்று நினைத்தேன் ஆனால் மக்கள் குறைவாகவந்துள்ளனர். மக்கள் எண்ணிக்கையைப்பார்க்கும்போதுபாரம்பரியம் முற்றாகவே அழிந்து செல்லும் நிலை காணப்படுகிறது.

தற்போதைய காலத்தில் மெகா சீரியல் பார்ப்பது அதிகரித்து காணப்படுகிறது. கலை கலாசார பண்பாட்டு நிகழ்வுகள் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை அந்தக் காலத்தில் பொங்கல் என்றால்காலையில்வீட்டிலும்மாலையில் கோயில்களிலும் பாரம்பரிய விளையாட்டுக்களுடன் பொங்கல் உற்சவம் கொண்டாடப்பட்டது.

தற்போதுஅதுஅருகிக்காணப்படுகிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கலாசாரம் நலிவடைந்து செல்கிறது என்பதை மனவருத்ததுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிங்கள மக்களிடையே தற்போதும் பாரம்பரிய கலாசாரங்கள் விளையாட்டுக்கள் என்பன மேலோங்கி அழியாமல் காணப்படுகிறன.

நமது நாடு நிலைபேறாக காணப்பட வேண்டுமானால் கலாச்சார பண்பாடுகள், விழுமியங்கள், பாரம்பரியவிளையாட்டுக்கள்நல்லநிலையில்நடைபெற வேண்டும் - என்றார்.

நிகழ்வில் மேல்மாகாண ஜெயவர்த்தனபுர கல்வி வலயத்தின் தலகென மகா வித்தியாலய அதிபர் ஹஸ்மீரா ஹெட்டிகேதலைமையிலான11பேர்கொண்ட குழுவினர் மந்துவில் சிறிபாரதி வித்தியாலயத்துக்குவருகைதந்துபொங்கல் விழாவில் கலந்து கொண்டனர்.

தலகெனமகாவித்தியாலய அதிபர், மந்துவில் சிறிபாரதி வித்தியாலயத்தின் மாணவர்களுக்கென கற்றல் உபகரணங்கள், இனிப்பு பண்டங்கள் ஆகியவற்றினை அதிபரிடம் அன்பளிப்பாக வழங்கினார்.

நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்களான தாச்சி ,முட்டியுடைத்தல் கண்கட்டிஉணவூட்டல்போன்றவிளையாட்டுக் கள் இடம் பெற்றன. நேற்றுப் புதன் கிழமை மந்துவில் சிறிபாரதி வித்தியாலயத்தின் மாணவி ஒருவரின் வீட்டில் பட்டிப் பொங்கல் நிகழ்வும் இடம்பெற்றது. (ஐ-159)

# பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.17

தீவக சிவில் சமூகம் , புங்குடுதீவு உலக மையம், குறிகாட்டுவான் பொலிஸ் நிலையம் ஆகியன இணைந்து நடத்தும் பொங்கல் விழா இன்று குறிகாட்டுவான் பொலிஸ் நிலைய முன்றலில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும்.

மண்டைதீவு அல்லைப்பிட்டி கத்தோலிக்க பங்குத்தந்தை டேவிட் அடிகளார் தலைமையில் நடை பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ-ஸ்வரபாதம் சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார். கலை நிகழ்வுகள், முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன. (ஐ)

# யாழ்.மாநகரசபையின் தைப்பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஏற்பாட்டில் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் மாநகரசபைமுன்றலில்கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வானது யாழ்ப்பாண மாநகர சபையின் சமயம் மற்றும் கலை கலாசார குழுவினால்ஏற்பாடுசெய்யப்பட்டிருந்ததுடன் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட்தலைமையில்இடம்பெற்றது.

நிகழ்வில் மாநகரசபை உறுப்பினரும், சமயம் மற்றும் கலை கலாசார குழுவின் தலைவருமான பாலச்சந்திரன் அவர்கள் தலைமையுரையினை வழங்கியிருந்தார்.

வாழ்த்துரைகளை முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட் , மாநகர சபை உறுப்பினர் செல்வவடிவேல், ஆணையாளர் ஜெயசீலன் ஆகியோர் வழங்கியிருந்தனர். இத் தைப்பொங்கல் விழாவில் மாநகரசபை உறுப்பினர்கள், மூத்த அலுவலகர்கள், பகுதித்தலைவர்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-105)



# முறையற்ற கம்பங்களை அகற்றினாரென மாநகர முதல்வருக்கு எதிராக முறைப்பாடு

## அவரது அலுவலகத்தில் பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம்,ஜன.17

**முறையற்ற கம்பங்களை அகற்றியமைக்கு எதிராக மாநகர பிதாவுக்கு எதிராக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. அதனையடுத்து முதல்வரின் அலுவலகத்துக்குச் சென்று அது பற்றிய ஆரம்ப விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர்.**

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமான முறையில்கேபிள் கம்பங்கள் ஒரு நிறுவனத்தினால் நடப்பட்டிருந்தன. அவை அனைத்தும் சட்டவிரோதமாக நடப்பட்டன என்பதன் அடிப்படையில் யாழ்ப்பாண மாநகர முதல்வரின் பணிப்பில் அவை அகற்றப்பட்டிருந்தன. அதன்போதே யாழ்ப்பாணம்பருத்தித்துறை வீதியில் கேபிள் இணைப்புக்கள் அகற்றப்பட்டன.

அது பற்றி முறையிடப்பட்டதால் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் விசாரணைக்காக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு மாநகரமுதல்வரை பொலிஸார் அழைத்திருந்தனர்.

வேலைப் பழு காரணமாக முதல்வர் பொலிஸ் நிலையத்துக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் பொலிஸார் முதல்வரின் அலுவலகத்துக்கு நேற்றுச் சென்று விசாரணை நடத்தினர்.

அது பற்றி வாக்குமூலம் பதிவு செய்வதற்காக எதிர்வரும் 18ஆம் திகதி முதல்வரின் அலுவலகத்துக்கு வருவதாகப் பொலிஸார் முதல்வரிடம் கூறிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதியில் அதிகளவில் மின் கம்பங்களை நடுவதற்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். முறையான அனுமதியுடன் உரியமுறையில் கேபிள் கம்பங்களை நடவேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர். அவைகூடத் தமக்குத் பெரும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை என்று மக்கள் தெரிவித்து கம்பங்களை நடுவதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

(ஐ-106)



### பேருந்து நிலையத்தில் இலத்திரனியல் கடிகாரக் கூடு

சாவகச்சேரி, ஜன. 17

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் சாவகச்சேரி பேருந்து நிலைய முன்றலில் அமைக்கப்பட்ட இலத்திரனியல் கடிகாரக் கூடுநடும்நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை 6 .30 மணிக்கு கழகத் தலைவர் லயன் கு.பிரணவராஜ் தலைமையில் இடம்பெற்றது.

பன்னாட்டு லயன்ஸ் கழகத்தின் நூறாவது ஆண்டை நினைவூட்டும் வகையில் இந்த கடிகாரக் கூடு பன்னாட்டு லயன்ஸ் கழக 306 பீ1 மாவட்ட ஆளுநர் லயன் தேவா பீற்றரினால் நட்டுவைக்கப்பட்டது. (ஐ-9)

### போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி

தெல்லிப்பழை.ஜன.17

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பிலான விழிப்புணர்வுப் பேரணி இன்றுவியாழக்கிழமைமுற்பகல்9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச மட்டத்திலான முதியோர்சங்கத்தின்ஏற்பாட்டில்தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து பிரதேச செயலர் காரியாலயம்வரை பேரணிஇடம்பெறவுள்ளது. (ஐ)

### இறால் பருவகாலம் ஆரம்பம்

வடமராட்சி.ஜன.17

வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் இறால் பருவகாலம் ஆரம்பமாகியுள்ளது. இப்பிரதேசத்தில் உடுத்துறை, வத்திராயன், ஆழியவளை, வெற்றிலைக்கேணி கட்டைக்காடு ஆகிய கடல்பகுதிகளில் தினமும் பெருந்தொகையான இறால்கள் பிடிக்கப்பட்டுவருகின்றன.

இக்கடல் பகுதிகளில் வருடந்தோரும் டிசம்பர் மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம் வரை இறால் பெருமளவு பிடிக்கபடுவது வழக்கம்.இம்முறையும் பருவகால இறால் பிடி ஆரம்பித்துள்ளது. ஒருகிலோ இறால் 800 ரூபா வாக விற்பனை செய்யப்பட்டுவருகிறது. தென் பகுதிகளுக்கு மீன்களை எடுத்துச்செல்லும் மீன்வியாபாரிகள் மீனவர்களிடம் இறால் கொள்வனவிலும் ஈடுபட்டுவருகின்றனர். (ஐ-173)

### விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

அச்சுவேலி.ஜன.17

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த பெண்மணி 11 தினங்களின் பின்னர் நேற்று புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த திருமதி குணராசா அஜந்தி (வயது - 39) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

ஆவரங்கால் - வல்லை முதன்மை வீதியில் பெரிய மதவடி பகுதியில் கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விபத்துக்கு உள்ளானார்.

பெண் மேற்படி தனது இல்லத்துக்குச் செல்வதற்கு வீதியைக் கடப்பதற்கு முற்பட்டவேளையில் வடமராட்சி நோக்கிவந்த இளைஞனின் உந்துருளி மோதியதில் படுகாயமடைந்தார்.

இந்த விபத்தில் இரண்டு பெண்களும் இரண்டு இளைஞர்களுமாக நான்குபேர் படுகாயமடைந்தனர்.

(ஐ- 11)

### போதைப்பொருள் பாவித்த நால்வருக்கும் பிணை

சாவகச்சேரி, ஜன. 17

போதைப் பொருள்களைப் பாவித்த நால்வருக்கும் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்லுமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கூட்டமாக அமர்ந்திருந்து போதைப் பொருள்கள் பயன்படுத்துகின்றனர் என பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நாவற்குழி தொடருந்து நிலையத்துக்கு அருகில் வைத்து நால்வரையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர். இவர்களிடமிருந்து போதைப் பொருள்களான ஹெரோய்ன் மற்றும் கஞ்சா போன்றவை கைப்பற்றப்பட்டன.

ஹெரோய்ன் போதைப் பவுடர் வைத்திருந்த இருவருக்கும் கஞ்சா வைத்திருந்த இருவருக்கும் எதிராக வழக்குகள் பதிவு செய்து கடந்த திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்குகள் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நால்வரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நால்வுரையும் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்ததுடன் வழக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-9)

### தொடர் தெய்வீகப் பேருரை

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கொண்டலடி விநாயகர் ஆலய பெருந்திருவிழா கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

தினமும் முற்பகல் 11 மணிக்குவவுனியாதமிழ்ச் சங்கத்தலைவர்தமிழருவி த.சிவகுமாரன் " காலமும் கருத்தும்" என்னும் பொருளில் தொடர் தெய்வீகப் பேருரைகளை ஆற்றிவருகிறார். தொடர்ந்து மாலை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ)

### கற்றல் உபகரணங்கள் வழங்கல்

நெடுந்தீவு,ஜன.17


கனடா - புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினால் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான அன்பளிப்புப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் அம்பலவாணர் கலையரங்கில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும்.

சங்கத்தின் தலைவர் வடக்கு மகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன் தலைமையில்நடைபெறும்நிகழ்வில்முதன்மைவிருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற முதுநிலை விரிவுரையாளர் ந.பேரின்பநாதன்,சிறப்பு விருந்தினராக நா.பகீரதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

### 50வருடங்களில் பின்னர் குதனை வீதி மீள்சீரமைப்பு

வலி.மேற்கு.ஜன.17

நவாலி வடக்கு குதனை வீதி 50 வருடங்களின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனின் கோரிக்கையின் பிரகாரம் ஒரு பகுதி மீள்சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குதனை 150 மீற்றர் நீளமான வீதி 12 லட்சம் ரூபா செலவில் மீள்சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. நவாலி வடக்கு குதனை வீதி மொத்தம் 440 மீற்றர் நீளத்தைக் கொண்டதாகும். மீள்சீரமைப்பு செய்யப்படாது உள்ள மிகுதி வீதியையும் 2019ஆம் ஆண்டில் மீள்சீரமைப்புச் செய்ய நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் முன்வர வேண்டும் என்று நவாலி பொது அமைப்புக்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன. (ஐ-50)



### தென்மராட்சியில் பட்டிப்பொங்கல்

சாவகச்சேரி, ஜன. 17

தென்மராட்சி பிரதேச பொது அமைப்புகள் ஒன்றிணைந்து பாரம்பரிய உழவர் திருநாளையும் பட்டிப் பொங்கலையும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரியில் நடத்தவுள்ளனர்.

சங்கத்தானை கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து பசுக்களின் பவனி மற்றும் மாட்டு வண்டில்கள் பவனி ஆரம்பமாகி ஏ 9 முதன்மை வீதியூடாக சாவகச்சேரி நகர மையத்துக்கு வந்து பட்டிப் பொங்கல் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் , தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆவின அறவோர், தென்மராட்சி பிரதேச கமக்கார அமைப்புக்கள், பிரதேச வணிகர் கழகங்கள் , மாட்டுவண்டில் சவாரிச் சங்கம், முச்சக்கர வண்டிகள் சங்கம் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் போன்றவை இணைந்து நிகழ்வினை நடத்தவுள்ளன.

(ஐ-9)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன 17

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கும் ஆளுநருக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை ஆளுநர் செயலக கேட்போர் கூடத்தில் முற்பகல் 10 மணிக்குநடைபெறும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநராகப் பதவியேற்றுள்ள சுரேன் ராகவன் முதல் தடவையாக உள்ளூராட்சிமன்றத் தவிசாளர் ,செயலர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடால் காரணமாக இன்று நடைபெற இருந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வு பிற்போடப்பட்டுள்ளதுஎன்று தவிசாளர் அறிவித்துள்ளார். (ஐ-7)

## முல்லைத்தீவு மாணவர்களுக்காக சப்ரகமுவ கல்வி அமைச்சால் உதவி

முல்லைத்தீவு, ஜன.17
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்காக சப்ரகமுவ மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் மகிந்த வீரசூரியவின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களால் சேகரிக்கப்பட்ட பொருள்கள் கடந்த 12ஆம் திகதி புதுக்குடியிருப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.
சப்ரகமுவ மாகாணப் பாடசாலை மாணவர்களால் சேகரிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள், பாதணிகள் அடங்கிய பார ஊர்தி கடந்த 12ஆம் திகதி எடுத்து வரப்பட்டது.
இதில் கொண்டுவரப்பட்ட சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.
இவ்வாறு எடுத்து வரப்பட்ட பொருள்கள் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டன.
நிகழ்வில் சப்ரகமுவ மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் உட்பட அலுவலர் 50 பேரும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உட்பட புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர். (க-105)

# மாற்றுத்திறனாளிகளின் குடும்பம் மீது விசுவமடுவில் தாக்குதல் இருவர் கைது

**முல்லைத்தீவு, ஜன.17**
**முல்லைத்தீவு, விசுவமடு மாணிக்கபுரம் பகுதியில் வசித்து வரும் மாற்றுத் திறனாளிகளான கணவன்– மனைவியைக் கொண்ட குடும்பம் ஒன்றின் வீட்டுக்குள் புகுந்த சிவில் பாதுகாப்பு அலுவலர் உள்ளிட்ட இருவர் மாற்றுத்திறனாளிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.**

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் விசுவமடு தலைமைப் பணிமனையில் பணியாற்றும் அலுவலர் உள்ளிட்ட இருவரும் நேற்றுமுன்தினம் மாலை மதுபோதையில் சென்று தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிக் குடும்பம் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன், புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் தாக்குதல் மேற் கொண்ட இருவரும் கைதுசெய்யப்பட்டுக் காவலில் தடுத்து வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
விசுவமடு மாணிக்கபுரம், இளங்கோபுரம் பகுதிகளில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் பணியாற்றும் சிலர் மதுபோதையில் மக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-ரி3)



# கிளிநொச்சியில் 700 குடும்பங்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்கல்

மன்னார், ஜன.17
கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள உதவிப் பொருள்கள் கிடைக்க பெறாத கிராமங்களான உழவனூர், நாதன் குடியிருப்பு, இராமநாதபுரம், புளுதியாறு ஆகிய கிராமங்களில் உள்ள 700 குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகள் மன்னார் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஊடாக கடந்த 13 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் ஒத்துழைப்புக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட குறித்த கிராமங்களுக்கான பொருள்கள் மன்னார் சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை அதிகாரி ஜாட்சன் தலைமையில் உரிய மக்களிடம் கையளிக்கப்பட்டன.
நிகழ்வில் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு அதிகாரிகள், கிராம அலுவலர் மற்றும் பிரதேச சபை அலுவலர்களும் கலந்து கொண்டு 25 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்து வழங்கினர். (க-56)

## த.தே.ம.மு ஏற்பாட்டில் தைப்பொங்கல் நிகழ்வு

முல்லைத்தீவு,ஜன.17
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் தைப்பொங்கல் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் தி.கிந்துஜன் தலைமையில் நடைபெற்றது கருத்துரைகளைப் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் இரத்தின வடிவேல், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலர் செ.கஜேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.
நிகழ்வில் போரில் அங்கவீனர்களான முன்னாள் போராளிகளின் 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (க-ரி3)




# போரால் பாதிக்கப்பட்ட இரு பெண்களுக்கு கிணறுகள் வழங்கல்

முல்லைத்தீவு, ஜன.17
போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் இரு பெண்களுக்கு கிணறுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.
மண்ணுக்காகத் தனது கணவரை இழந்த மூங்கிலாறு உடையார்கட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயும், எறிகணை வீச்சினால் உடலில் பல வடுக்களைக் கொண்ட சு.மேரிபிறிஜி ஆகியோருக்கான குடிதண்ணீர் மற்றும் வீட்டுத் தோட்டத்துக்கான வாழ்வாதார உதவியாகக் கிணறு அமைத்து வழங்கப்பட்டுள்ளது. கடந்த 14 ஆம் திகதி கனடாவில் வசிக்கும் ஃறோல்ட் எட்வேட் கிணற்றை அமைத்து வழங்கியுள்ளார். (க-222)

## வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு

முல்லைத்தீவு, ஜன.17
முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் வருடாந்த நிகழ்வு கடந்த 12ஆம் திகதிஇடம்பெற்றது.
மருத்துவமனைப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மூத்த முறிவு நெறிவு மருத்துவ நிபுணர் மருத்துவக் கலாநிதி கோபிசங்கர் கலந்து கொண்டார்.
சிறப்பு விருந்தினர்களாக மருத்துவமனை மருத்துவ நிபுணர்களும் முன்னாள் பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.
பல வருடங்கள் அங்கு சேவை செய்து ஓய்வு பெற்றவர்களும் மாற்றமாகிச் சென்றவர்களும் நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டனர். (க-433)




## கிளிநொச்சியில் பேருந்து மோதி மாணவி உட்பட இருவர் படுகாயம்

கிளிநொச்சி, ஜன.17
பேருந்து மோதியதில் பாடசாலை மாணவி மற்றும் அவரது உறவினர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் எஸ்.ஆர் சந்திக்கும் நாட்டாங்கண்டல் சந்திக்கும் இடையில் இடம் பெற்றுள்ளது.
இதில் தேன்நிலா (வயது - 13), சயந்தன் (வயது-14) ஆகிய இருவர் படுகாமடைந்துள்ளனர். வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் பேருந்து ஒன்றைவாங்கி அதை செலுத்தும்போது விபத்து இடம்பெற்றது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
பாடசாலையில் பொருள்கள் சிலவற்றைவாங்கிக்கொண்டு வீடு திரும்பும் போது சிறுவர்களைப் பேருந்து மோதித் தள்ளியது என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (க-21)

## இயற்கை விவசாயத்தை மேம்படுத்தும் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஜன.17
இயற்கை விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கில் வடக்கில் சகல மாவட்டங்களிலும் இயற்கைவழி ஆர்வலர்களின் பங்கெடுப்புடன் கடந்த 8ஆம் திகதி மன்னாரில் தொடக்கிவைக்கப்பட்டதன் இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள செல்வபாக்கியம் பண்ணையில் நடைபெற்றுள்ளது.
மருத்துவர் பிரபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செல்வபாக்கியம் பண்ணையின் உரிமையாளரும் நடனம்மா இயற்கை வழி உள்ளீடுகள் உற்பத்தியின் உரிமையாளருமான நேசன் தனது இயற்கை வேளாண் மாடுவளர்ப்பு தொடர்பில் உரை நிகழ்த்தினார்.
விவசாய போதனாசிரியர்கள்,பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் இயற்கை இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.
இனிவரும் காலங்களில் இயற்கைவளி உள்ளீடுகளைப் பயன்படுத்தி எவ்வாறு உற்பத்திகளை மேற்கொள்ளவேண்டும் என்பது தொடர்பிலும், அதனால் உடல் நலனுக்குக் கிடைக்கும் நன்மைகள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.உகநாதன் எடுத்துரைத்தார். (க-ரி3)







# காந்தள் இளையோர் அமைப்பின் தைப்பொங்கல் விழா

முல்லைத்தீவு, ஜன.17
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மருதமடுக் கிராமத்தில் காந்தள் புலம்பெயர் அமைப்பின் ஏற்பாட்டில், தைப்பொங்கல் விழா இடம் பெற்றுள்ளது.
நிகழ்வில் மாணவர்களுக்குக் கற்றல் கருவிகளும், முதியோர்களுக்கான மாதாந்த உதவு தொகைகளும் காந்தள் புலம்பெயர் இளையோர் அமைப்பால் வழங்கப்பட்டுள்ளன.
காந்தள் புலம்பெயர் அமைப்பின் 'உறவுகளுடனான பாசம்பகிரும் பயணம்' எனும் செயற்றிட்டத்தில், தைப்பொங்கல் நாளான நேற்று முன்தினம் மருதமடுப்பிள்ளையார்கோயிலில் இடம்பெற்றுள்ளது. நிகழ்வில் 200பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் கருவிகளும், 30 முதியோர்களுக்கான் மாதாந்த உதவுத் தொகைகளும் வழங்கிவைக்கப்பட்டன. (க-222)

## 110 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி,ஜன.17

கடந்த கால போர் நிலமைகளால், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கிளிநொச்சி மாவட்ட சங்கத்தினால், வட்டு. இந்து வாலிபர் சங்கத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, நேற்று முன்தினம் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகப்பைகளுடன் இணைந்த கற்றல் உபகரணங்கள் 110 பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பெற்றோர்கள், உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த, பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மற்றும் பல இடர்களால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் 110 பேருக்கு, தொடங்கியுள்ள கல்வியாண்டை முன்னிட்டு கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கான கற்றல் உபகரணங்களைத் தந்துதவுமாறு வட்டு இந்து வாலிபர் சங்கத்திடம் கடிதம் மூலம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (க)



## பௌத்த துறவி பயணித்த வாகனம் உழவுஇயந்திரத்துடன் மோதி விபத்து

முல்லைத்தீவில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கிப் பயணித்த பௌத்த துறவி ஒருவரின் வாகனம் உழவு இயந்திரத்துடன் மோதி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்;

'இலங்கையைப் பாதுகாப்போம்' என்ற அமைப்பின் தெற்கைச் சேர்ந்த பௌத்த துறவிகள்,பிரிட்டனைச் சேர்ந்த பௌத்த துறவிகள் மற்றும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் உட்படப் பலர் முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

பிரிட்டனைச் சேர்ந்த பௌத்த துறவிகளின் பேருந்து வட்டுவாகல் பாலம் ஊடாகப் புதுக்குடியிருப்பு நோக்கிப் பயணித்து விபத்துக்குள்ளாகியுள்ளது. உழவு இயந்திரத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார்.

இவற்றைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த முல்லைத்தீவுப் பொலிஸார் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை நீதிமன்றில் முன்னிலைபடுத்தியுள்ளனர். (க-ரி3)



## ஹெப்பிட்டிக்கொலாவ மத்திய மகா வித்தியாலயத்தில் பொங்கல் நிகழ்வுகள்

வவுனியா, ஜன.17

வவுனியா 'தமிழ் விருட்சம்' அமைப்பினரால் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஹெப்பிட்டிக்கொலாவ மத்திய மகா வித்தியாலயலத்தில் தமிழர் முறைப்படி பொங்கல் நிகழ்வுகள் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றன.

அநுராதபுரம் மாவட்டத்தின் ஹெப்பிட்டிக்கொலாவ மத்திய மகா வித்தியலாயத்தின் ஆசிரியரின் வேண்டுகோளின் அடிப்படையில் 2 ஆயிரம் பெரும்பான்மையின மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையிலேயே 'தமிழ் விருட்சம்' அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரால், இன நல்லுறைவைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையாக தமிழர் திருநாள் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-111)





## கிளிநொச்சியில் தொடர்ச்சியான மணல் அகழ்வால் இயற்கை வளங்கள் அழிந்து நாசம்

கிளிநொச்சி, ஜன.17

**கிளிநொச்சி மாவட்டத்தின் தொடர்சியான மணல் அகழ்வு காரணமாகப் பயன்தரு மரங்கள் பல வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. கிளிநொச்சியின் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மணல் அகழ்வு ஒரு தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.**

இதற்கு உடந்தையாக சில பொலிஸாரும் ஈடுபட்டு வருவதுடன் சில பொலிஸாரின் டிப்பர் ரக வாகனங்களும் மணல் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக மாவட்ட உயர் அதிகாரிகள் முதல் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் மக்கள் கருத்துக்களை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இலங்கையில் எங்கேயும் இல்லாத மண் வகை, கிளாலி கடற்கரைப் பகுதியில் உள்ளதாகப் பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அண்மையில் தெரிவித்திருந்தார்.

அவ்வாறான வளங்களைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக மணல் அகழப்படுவதால் மக்கள் பல்வேறு துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த மாத இறுதிப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக முன்னைய காலங்களில் வெள்ளப்பாதிப்பு ஏற்படாத பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கின. அதற்கான முதன்மை காரணமாக மணல் அகழ்வு, நீர் ஓடும் வாய்க்கால்கள் சரியான முறையில் சீரமைக்கப்படாமை, பொருத்தமற்ற வீதிச் சீரமைப்பு, கட்டடங்கள் அமைத்தல் போன்றவற்றைக் குறிப்பிடுகின்றனர். அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக பயன்தரு மராங்கள் பல வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், சில மரங்கள் பிடிங்கிச் சாய்கப்பட்டுள்ளன. மணல் கொள்ளையைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு மற்றும் சிறு குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்கவிடம் கேட்டபோது, இவை தொடர்பாக தொடர்ச்சியான கவனிப்புக்கள் இடம் பெறுவதாகவும், முன்னயை காலப் பகுதியை விடத் தற்போது நிலமைகள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், தொடர்ச்சியாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (க-6)

## பழுதடைந்த நீர்க் குழாய்களைச் சீரமைப்பதற்கு தொன்னூற்று நான்கு மில்லியன் ரூபா தேவை

மன்னார்.ஜன.17

முருங்கனில் இருந்து மன்னார் வரை உள்ள பழுதடைந்த நீர்க் குழாய்களைச் சீரமைப்பதற்குத் தொன்னூற்று நான்கு மில்லியன் தேவை என மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

முருங்கன் நீர்வழங்கல் திட்டத்தின் கீழ், முருங்கனில் இருந்து மன்னார் நகருக்கு நீர் செல்லும் நிலக் கீழ் பிரதான நீர்க் குழாய்கள் பழுதடைந்து இடையிடையே நீர்க் கசிவுகள் ஏற்பட்டு நீர் வீணாவதுடன் போக்குவரத்து வீதிகள் சேதமடைகின்றன.

இவ்வாறு முருங்கனில் இருந்து பல இடங்களில் நீர்க் குழாய்கள் சேதமடைந்துள்ளன.

தற்போது மன்னார் தள்ளாடிப் பகுதியில் தேசிய நீர் வழங்கல் வடிகான் அமைப்பு திணைக்களத்தினரால் நீர் கசிவு குழாய்கள் சீரமைப்புச் செய்யப்படுகின்றன.

இந்த நீர்க்குழாய்கள் 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைக்கப்பட்டவை. அவற்றின் கால வரையறையும் முடிந்து விட்டது. மேலும் குறித்த நீர்க் குழாய்கள் பிரதான வீதி அருகிலும் சில இடத்தில் வீதியின் நடுவிலும் சீரமைக்கப்படுவதனால், அந்த குழாய்கள் அனைத்தையும் வீதியை விட்டு நகர்த்தி அமைக்க வேண்டிய கட்டாய தேவை உள்ளதாக தெரிவித்த மன்னார் தேசிய நீர் வழங்கல் திணைக்களத்தினர், இதற்காக தொன்னூற்று நான்கு மில்லியன் ரூபா செலவாகும் என்றும் தெரிவித்துள்ளனர். (க-213)





## ஈருருளி வழங்கல்

வவுனியா,ஜன.17

கோதாண்ட நொச்சிக்குளத்தைச் சேர்ந்த• தவசிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவனுக்கு நகரசபை உறுப்பினர் எம். லரீப்பினால் ஈருருளி வழங்கப்பட்டுள்ளது. இந்த மாணவன் சுமார் 8 கிலோமீற்றர் கால் நடையாகப் பாடசாலை சென்றுவந்துள்ளார்.

அவரின் நிலையைக் கருத்தில் கொண்டே இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் உதவிப்பணிப்பாளரான அமரர் கிருஷ்ணமூர்த்தி கனகலட்சுமி யின் பத்தாவது ஆண்டு நினைவாக, எம்.ஏ. மொழி பெயர்ப்பகத்தின் அனுசரணையுடன் குறித்த உதவிவழங்கி வைக்கப்பட்டது. (க-110)

## கோடாவை வைத்திருந்த இரண்டு பெண்கள் கைது

கிளிநொச்சி. ஜன.17

கசிப்பு மற்றும் கோடாவினை உடமையில் வைத்திருந்த இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்டப்பேதைப்பொருள்தடுப்புப்பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கடந்த 12 ஆம் திகதி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலினை அடுத்து இராமநாதபுரம் அழாகாபுரி கிராமத்தில் 16 போத்தல் கசிப்பினை உடமையில் வைத்திருந்தார் என ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பொன்நகர் பகுதியில் 46 போத்தல் கோடாவினை உடமையில் வைத்திருந்த பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் கடமையாற்றுபவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும், மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (க-6)





# நிரந்தர மருத்துவரை நியமிக்கக் கோரி இரணையிலுப்பைக்குள மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஜன.17

வவுனியாவின் எல்லைகிராமமும்,மன்னார் மாவட்டத்தின் மடுப்பிரதேசசெயலகத்துக்குட்பட்ட இரணையிலுப்பைகுளம் பகுதியில் உள்ள ஆரம்பசுகாதார பராமரிப்புநிலையத்துக்கு நிரந்தரமாக மருத்துவர்ஒருவரைநியமிக்குமாறுகோரிஅந்தப்பகுதிமக்கள்ஆர்ப்பாட்டம்ஒன்றைமுன்னெடுத்திருந்தனர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்ப மரத்துவமனைக்குமுன்பாக மேற்கொள்ளபட்டிருந்த ஆர்ப்பாட்டத்தில் கருத்துத் தெரிவித்த பொதுமக்கள் கடந்த ஒருமாத காலமாக எமது மருத்துவமனைக்கு மருத்துவர் நியமிக்கப்படவில்லை.

இதனால் மாதாந்த மருத்துவ சேவையைப் பெற்றுகொள்ளும் 200 க்கும் மேற்பட்டோர் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த இரண்டு வருடங்களாக மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதும், அவர் தற்போது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். எமது கிராமம் மிகவும் பின்தங்கிய பகுதியாகக் காணப்படுவதுடன். மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது முதல் நிரந்தரமாக ஒரு மருத்துவரும் நியமிக்கப்படவில்லை. 26 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குறித்த ஆரம்பசுகாதார மருத்தவ நிலையத்தால் பயன்பெற்று வருகின்றனர். தற்போது மருத்துவர் இன்மையால் நீண்ட தூரம் சென்று வவுனியா,பூவரசங்குளம் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகறக்குச் சென்றே சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

அவசரநோயாளிகளை இங்கு அனுமதித்து முதலுதவிச் சிகிச்சை அளிக்கபட்ட பின்னர் அம்புலன்ஸ் மூலம் வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டன. மருத்துவர் இன்மையால் அம்புலன்ஸ்சில் கொண்டு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முச்சக்கர வண்டியில் வவுனியாவுக்குச் சென்றால் அதிகபணச் செலவு ஏற்படுகின்றது.

குறிப்பாகக் கர்ப்பிணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் கர்பிணி ஒருவருக்கு முச்சக்கரவண்டியில் குழந்தை பிறந்துள்ளது. எனவே எமது நிலையைக் கருத்தில் கொண்டு நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்குமாறு கோருவதுடன் தற்காலிகமாக முன்னர் கடமையாற்றியவரையாவது மீண்டும் நியமிக்குமாறு வேண்டுகோள் முன்வைப்பதாக தெரிவித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அந்தப் பகுதியால் வருகை தந்த குறித்த வட்டாரத்தின் மாந்தைமேற்கு பிரதேசபையின் உறுப்பினர் தனது வாகனத்தில் இருந்து இறங்காமல் ஆர்ப்பாட்டக் காரர்களுடன் சிலவினாடிகள் பேசிவிட்டு அங்கிருந்து சென்றார். குறித்த சம்பவம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடத்தில் விசனத்தை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பி டத்தக்கது. (க-110)



## பற்சுகாதார செயலமர்வு

கிளிநொச்சி,ஜன.17

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிறுவனத்தினால் கடந்த 5 வருடங்களாக செயற்படுத்தபட்டு வரும் ஆரம்பப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்கான பற்சுகாதார செயற்திட்டத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான பற்சுகாதார செயலமர்வு கடந்த 11 ஆம் திகதி முல்லைத்தீவு வலயக்கல்வி பணிமனையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைவலயக் கல்வி பணிப்பாளர்,உதவிக்கல்விப் பணிப்பாளர்,கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் செயலர்,மத்திய மற்றும் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதில் 52 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன், ஆரம்ப பிரிவை சேர்ந்த 1965 மாணவர்களுக்கான பற்தூரிகைகளும் பற்பசைகளும் வழங்கி வைக்கபட்டன. இதற்கான நிதி அனுசரணையை ஆஸ்திரேலியா மருத்துவ நலச்சங்கம் தொடர்ந்து வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தகது. . (க-222)





மன்னார் நகர சபை முன்றலில் நேற்று பொங்கல் நிகழ்வு நடைபெற்றது. நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க60)

## சஜித் பிரேமதாசாவின் 52ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு வவுனியாவில் மரக்கன்றுகள் வழங்கல்



வவுனியா,ஜன.17

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார துறை அமைச்சர் சஜித் பிரேமதாசாவின் 52 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டுவவுனியாவில்கடந்த12ஆம் திகதி மரக்கன்றுகள் வழங்கி வைக்கப் பட்டன.

வவுனியா ஓமந்தை வேப்பங்குளத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட பிரசாரச் செயலர் கே.கே.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் கெ.கலன்சூரிய கலந்து கொண்டு மரக்கன்றுகளை வழங்கி வைத்தார்.

ஐக்கியதேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட பிரசாரச் செயலர் எஸ்.சுரேஸ்குமாரின் ஏற்பாட்டில் ஓமந்தை வேப்பங்குளம் சிறி சித்திவிநாயகர் ஆலயத்தில் சிறப்பு பூசைவழிபாட்டினைத் தொடர்ந்து விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தன. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் கெ.கலன்சூரிய இன.மத. கட்சி பேதமின்றி எந்த மக்களுக்கு வீடுகள் இல்லையோ அந்த மக்களுக்கு வீடுகள் வழங்கப்படும். அத்துடன் ஓமந்தை பிரதேசத்தில் வீடில்லாத 247 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். வடக்கு மாகாணத்துக்கு மாத்திரம் இலவச வீட்டுத்திட்டங்களை வழங்க வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார துறை அமைச்சர் சஜித் பிரேமதாசா உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தார். நிகழ்வில் ஐக்கிய தேசியக்கட்சியின் வவுனியா மாவட்ட பிரதான அமைப்பாளர் பி.ஏ.கருணாதாச, வவுனியா தெற்கு தமிழ் பிரதேசபையின் உறுப்பினர் ஆர்.ஏ.அமலியா, வவுனியா நகரசபை உறுப்பினர் ஆர். ஜானக மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (க-110)



## டென்மார்க் நாடாளுமன்றத்தில் களை கட்டியது பொங்கல் விழா

*அங்கீகாரம் கோரி மனுவும் கையளிப்பு*

டெனிஸ். ஜன.17
டென்மார்க் நாடாளுமன்றத்தில் தைப்பொங்கல், தமிழர்புத்தாண்டைஒட்டியநிகழ்வுகள்கடந்ததிங் கட் கிழமை நடந்தேறின. தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் டென்மார்க்கில் டெனிஸ் தமிழ் அமைப்புக்களின்ஒன்றியத்தின் முயற்சியின்பலா பலனாக முதல் முறையாக டென்மார்க் நாடாளு மன்றில் இந்த விழாக்கள் கொண்டாடப்பட்டன என்றுடெனிஸ்தமிழ்அமைப்புக்களின்ஒன்றியம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவித்தது.
அந்தஅறிக்கையில்மேலும்குறிப்பிட்டிருப்பதாவது: இந்த நிகழ்வில் டென்மார்க் நாடாளுமன்றில் அங் கம்வகிக்கின்றசிலகட்சிகளின்பிரதிநிதிகள், மனித உரிமை அமைப்பினர், 'குர்திஸ்தான்' மகளிர் அமைப்பினர்எனப்பலரும் கலந்துகொண்டனர். கலாசார அமைச்சர் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார். இதன் ஊடாக எங்களுடைய கலாசார பண்பாட்டுபாரம்பரியங்களையும், நாங்கள்தனித் துவமான இனம்என்பதையும்வெளிக்காட்டியிருக் கிறோம். அத்துடன்கனடாநாடாளுமன்றம்தமிழர் மரபுரிமைமாதமாகத்தைமாதத்தைஅங்கீகரித்த தைப்போல்டென்மார்க்நாடாளுமன்றமும்அங்கி காரம் கிடைக்கவேண்டும் என்பதுதான் எமது நோக்கம். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நாடா ளுமன்ற உறுப்பினர்களிடம் 'தமிழர் திருநாளை' அங்கிகரிக்கவேண்டும் என்றுகோரும் மனுக் கையளிக்கப்பட்டது. நாங்கள் ஒரு தேசிய இனம் என்றுஅங்கிகாரம்கிடைக்கும்என்றநம்பிக்கையு டன் தைப்பொங்கல் புத்தாண்டு நாளை நிறைவு செய்தோம் என்றுள்ளது.

## நுவரெலியாவில் மும்மொழி தேசியப் பாடசாலை

நுவரேலியா. ஜன.17
நுவரெலியா–நானுஓயாப்பகுதியில்மும்மொழித் தேசிய பாடசாலை ஒன்றை அமைப்பாதற்கான அங்கீகாரம்கடந்தவருடம்வழங்கப்பட்டது. அதற் கான பணிகளை முன்னெடுப்பதற்காகச் சிறப்புப் பிராந்தியங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் இராதாகிருஷ்ணன், 'அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற வேலைத்திட்டத்தின் கல்வி அமைச்சுச் செயல்திட்டப் பணிப்பாளர் பத் மன், கட்டடக் கலைஞர்கள், பொறியிலாளர் ஆகி யோர் குறித்த பாடசாலை அமையவிருக்கும் பகுதியைப் பார்வையிட்டனர்.
பின்னர் வேலைத்திட்டங்களை முன்னெடுப்ப தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பாடசாலையைக் கட்டியெழுப்புவதற்கு 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் வைப வத்தை வெகுவிரைவில் தலைமை அமைச்சர் மற்றும்கல்வி அமைச்சரின் தலைமையில் நடத் துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என அமைச் சர்இராதாகிருஷ்ணன்இதன்போதுதெரிவித்தார்.

# குழந்தையின் உடலில் சிகரெட் சூடுகள்

*தாயும் நபர் ஒருவரும் கைது*

**மொனறாகலை. ஜன.17**
**ஒன்றரைவயதுடைய குழந்தையைச் சிகரெட்டால் சுட்டுக் கொடுமைப்படுத்திய சந்தேகத்தில் அந்தக் குழந்தை யின் தாயையும், ஆண் ஒருவரையும் கைது செய்ததாகச் சியாம் பலாண்டுவைப் பொலிஸார் தெரிவித்தனர்.**


சூட்டுக் காயங்களுடன் சியாம்ப லாண்டுவை மருத்துவமனை யில் சிகிச்சையளிக்கப்பட்டு வரு கின்ற குறித்த குழந்தையைப் பரி சோதித்தமருத்துவர்கள்குழந்தை யின் உடலெங்கும் 102 வரை யானசூட்டுக்காயங்கள்இருப்பதா கக் கூறினர்.
சியாம்பலாண்டுவைப் பகுதியின் ஐந்தாம்மைல்கல்லருகேதொம்ப காவெலை என்ற இடத்தில் நடந்த இந்தச்சம்பவம்தொடர்பில்மேலும் தெரியவருவதாவது:
சிகரெட்டால் சூடு வைக்கப்பட்ட குழந்தையின்தாய்கணவனைப் பிரிந்து, பிறிதொரு நபருடன் வாழ்ந்துவந்தார். அந்தநபர், தான் தினமும்புகைக்கின்றசிகரெட்டால் குழந்தையைச்சுட்டுக்கொடுமைப் படுத்தியுள்ளார். சூட்டுக் காயங்க ளுக்குள்ளானகுழந்தைகதறியழு ததை அவதானித்த அயல்வீட்டார் சியாம்ப லாண்டுவைப் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கி னர். குறிப்பிட்ட வீட்டைச் சுற்றி வளைத்த பொலிஸார் தப்பியோட முயற்சித்த அந்த நபரைக் கைது செய்தனர்.
அத்துடன் குழந்தைக்குச் சூடு வைக்கும்போது தடுக்காமல், குற் றத்துக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் குழந்தையின் தாயையும்கைதுசெய்தனர்.
பின்னர்சியாம்பலாண்டுவைநீதி மன்றநீதிபதியின்முன்னிலையில் நேற்றைய தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது.
இதன்போது எதிர்வரும் 23ஆம் திகதி வரை குறித்த நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.



## படுவான்கரையில் பரவியது வெள்ளம் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன

மட்டக்களப்பு. ஜன.17
மட்டக்களப்பு–படுவான்கரைப்பகுதி யில்கடந்தஞாயிறு, திங்கட்கிழமை களில்கனமழைபெய்தது. இதனால் ஏற்பட்ட வெள்ளத்தால், குறித்த பகு தியின்மண்முனைமேற்குப்பிரதேச செயலகபிரிவுக்குட்பட்டகாலபோட் டமடு கிராமத்துக்கான காஞ்சிரங் குடாவீதிப்போக்குவரத்துத்தடைப் பட்டது. காஞ்சிரங்குடாவீதியிலுள்ள குருந்தையடிச்சேனையின் பாலத் தின்மேலாக நீர்மேவிப் பாய்ந்தது. இந்தக் கன மழை காரணமாக மண்முனை தென்மேற்குப்பிரதே சத்தின் உள்ளூர் கிரவல் வீதிகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கின. கொக்கட்டிச்சோலை மைதானத்தி லும் நீர் நிரம்பியது. பிரதேசம் முழு தும் குடிமனைகளைச் சூழ்ந்து மழை நீர் பரவிக் காணப்பட்டது.





## விபத்துக்குள்ளான இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே சாவு

பொலனறுவை. ஜன.17
பொலனறுவை - தலுகான எனும் பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடந்த வீதி விபத்தில் பதின்மவயதுடைய இரண்டு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். 17 மற்றும் 18 வயதுடைய இந்த இளைஞர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கும்போது அவர்களது மோட்டார்சைக்கிள்மீதுடிப்பர்வாகனம்மோதியது. இளைஞர்கள் தூக்கி வீசப்பட்டனர். வீதியில் கிடந்த மோட்டார்சைக்கிள்பின்னால்வந்தபஸ்ஸின்கீழே அகப்பட்டது. தூக்கி வீசப்பட்ட இளைஞர்கள் இருவ ரும் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர்.
விபத்தை ஏற்படுத்தியதாகக் கருதப்படும் டிப்பர் வாகனம் தப்பிச் சென்றது.
விபத்து நடந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டதோடு விபத்தில் சாவடைந்தஇளைஞர்களைஅடையாளம்காணும் செயலிலும், தப்பிச் சென்ற டிப்பர் வாகனத்தையும் அதன் சாரதியையும் தேடும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

## பஸ் மோதியதில் குடும்பஸ்தர் சாவு

மட்டக்களப்பு. ஜன.17
மட்டக்களப்பு – கொழும்பு நெடுஞ்சாலையின் சித் தாண்டிப்பிரதேசத்தில்கடந்தசெவ்வாய்க்கிழமை இரவுநடந்தவீதி விபத்தில் குடும்பத் தலைவரான கூலித் தொழிலாளி ஒருவர் சாவடைந்ததாக ஏறா வூர் பொலிஸார் தெரிவித்தனர். சாவடைந்த நபர் சித்தாண்டி, உதயன்மூலை மதுரங்காட்டுக் கொலனியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தை யான பொன்னம்பலம் தியாகராசா (வயது 54) என்பவராவார்.
மட்டக்களப்பு - கொழும்பு முதன்மை வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த குடும்பத் தலைவரை, தூரப் பிரதேசப் போக்குவ ரத்தில்ஈடுபடும்தனியார்பஸ்மோதியது. விபத்துக் குள்ளாகிய குடும்பத் தலைவரை சந்திவெளி பிர தேசமருத்துவமனைக்குஎடுத்துச்சென்றபோதும் ஏற்கெனவே அவரது உயிர் பிரிந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. விபத்தை ஏற்படுத்தியதாகக் கருதப்படும் பஸ்ஸைக் கைப்பற்றிய ஏறாவூர்ப் பொலிஸார் சாரதியைக் கைது செய்து மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டனர்.





கல்முனை தமிழ் இளைஞர் சேனை அமைப்பின் பொங்கல் விழா அந்த அமைப்பின் தலைவர் திரு ஏ. டிலாஞ்சன் தலைமையில் நடந்தது. காவடி ஆட்டம், மாட்டு வண்டிப் பவனி எனப் பாரம்பரிய நிகழ்வுகள் அரங்கேறின. மட்டு அம்பாறை மவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே. நுவான் வெதசிங்க, களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை வைத்திய அட்தியட்சகர் கே. சுகுணன், அம்பாறை மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் கே. பாக்கியராஜா, இராணுவ, கடற்படைத் தளபதிகள், சிவசிறி சச்சிதானந்த குருக்கள், பங்குத்தந்தை ஜேசுதாஸ் அடிகளார், பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

# நிலவில் முளைத்தது பருத்தி சீனாவின் திட்டத்தில் வெற்றி!

பீஜிங்.ஜன.17
நிலவின் மறுபக்கத்தை ஆய்வு செய்வதற்காகச்சீனா அனுப்பிய விண்கலத்தில் இருந்த பருத்தி விதை முளைக்கத் தொடங்கியுள்ளதாகச் சீனா செய்தி வெளியிட்டது.

சீனாவின் விண்வெளி ஆய்வு நிலையம் கடந்த மாதம் 8ஆம் திகதி 'சாங் இ4' என்ற விண்கலத்தை நிலவுக்கு அனுப்பியிருந்தது. அதன் மூலம் பூமிக்குத்தென்படாதநிலவின் மறுபாதியை ஆய்வுசெய்வதேசீனாவின் திட்டம். அந்தவிண்கலம்இந்தமாதம்3ஆம்திகதிநிலவின்இருண்டபகுதி என்று கூறப்படும் குறித்த பகுதியில் தரையிறங்கியது. நிலவின் மறுப்பக்



கத்தை ஒளிப்படம் பிடித்துப் பூமிக்கு அனுப்பியது. பகலில் அதிக வெப்பமாகவும் இரவில் கடும் குளிராகவும் நிலவு இருக்கிறது. அதாவது பகலில் 127டிகிரி செல்சியஸ் வெப்பமாகவும்,
இரவில்183டிகிரிசெல்சியஸ்உறைபனியாகவும்இருக்கிறதுஎன்றுஇந்த ஆய்வில் சீன விஞ்ஞானிகள் கூறினர். அத்துடன் அங்கு உயிர் வாழ்வதற்கானசூழல்இருக்கின்றதாஎன்றும்ஆய்வுகளைமுன்னெடுக்கின்றனர். அதன்ஒருகட்டமாகநிலவில்உயிரியல்பரிசோதனைகளைமேற்கொள்வதற்காகஒருபெட்டிக்குள்உருளைக்கிழங்கு, பருத்திவிதைகள், மற்றும் பட்டுப்பூச்சிமுட்டைகளைகுறித்தவிண்கலம்மூலம்நிலவுக்குக்கொண்டு சென்றனர். இவ்வாறாகச் சீனா 'சாங் இ4' மூலம் ஆய்வுக்காகக் கொண்டு சென்ற பருத்தி விதைகளே தற்போது முளைக்க ஆரம்பித்துள்ளன. சாங் இ4 எடுத்து அனுப்பிய ஒளிப்படங்களில், பருத்தி விதை முளைக்க தொடங்கி உள்ளதைக் காட்டியது. ஆனால் வேறு எந்தத் தாவரங்களும் முளைப்பது காணப்படவில்லை.

# மஞ்சள் அங்கிப் போராட்டத்தில் பிரான்ஸ்பொலிஸார்வன்முறை

பாரிஸ்.ஜன.17
பெற்றோல் மற்றும் டீசல் விலை உயர்வை எதிர்த்துப் பிரான்சில் 9ஆவது வாரமாகவும் மக்கள் முன்னெடுத்து வரும் மஞ்சள் அங்கிப் போராட்டம் நீள்கிறது. கடந்த ஞாயிறு அன்று தொடர்ந்த இந்த மஞ்சள் அங்கிப் போராட்டத்தின்போதுபிரான்ஸ்பொலிஸ்அதிகாரிஒருவர்வீசியகிரணைட்குண்டு போராட்டத்தில்ஈடுபட்டஒருவருடையதலையைத்தாக்கியுள்ளது. உடனே மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டபோராட்டக்காரர்மயக்கநிலைக்குச் சென்றார். பாதிப்புக்குள்ளான போராட்டக்காரர் கடந்த சனிக்கிழமைதான் இந்த மஞ்சள் அங்கிப் போராட்டத்தில் இணைந்தார். இந்தக் குண்டுவீச்சுச் சம்பவம்பற்றிவிவரித்தபாதிக்கப்பட்டவரின்மனைவி, "பிரான்ஸ்பொலிஸ்காரர் எனது கணவரை ஒரு முயலை வேட்டையாடுவது போல் சுட்டார். இந்தக் குற்றத்தை நிரூபிக்க எனக்கு வேறு ஆதாரங்கள் தேவையில்லை. அந்தச்சம்பவத்தின்போது எடுக்கப்பட்ட ஒளிப் படங்களே போதுமானவை. எங்கள்போராட்டம்அமைதியாகவேபோய்கொண்டிருந்தது. மாலை 4.30 மணியளவில் சாதாரண உடை தரித்திருந்த ஒருவர் கண்ணீர்ப்புகைக் குண்டு ஒன்றை எங்களை நோக்கிச் செலுத்தினார். அதைத் தவிர்த்துக் கொள்ள முயன்றபோது சீருடை அணிந்த ஒரு பொலிஸ் அதிகாரி 'கிரணைட்' குண்டை எங்களை நோக்கி வீசினார். அந்தக் குண்டுதான் கணவரின் தலையின் பின் புறத்தைத் தாக்கியது" என்றார்.

**பின்னணி**

பிரான்சில்கடந்த9வாரங்களாகபெற்றோல்மற்றும்டீசல்விலைஉயர்வை எதிர்த்து மக்கள் முன்னெடுத்து வரும் இந்த மஞ்சள் அங்கிப் போராட்டத்தின் விளைவாகப் போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு அடிபணிந்தது பிரான்ஸ்அரசு. ஆயினும்பிரான்ஸ்அதிபர்மக்ரோன்பதவிவிலகவேண்டும் என்றும்நாடாளுமன்றுமேற்கொள்ளும்நடவடிக்கைக்குமக்களிடத்தில்வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கின்றனர். போராட்டக்காரர்களின்கோரிக்கையைஏற்றுக்கொள்ளாதபிரானஸ்அரசு. அதற்குமாறாகபழையசட்டங்கள்சிலவற்றைப்புதுப்பித்துப்போராட்டத்தை அடக்கி ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.





# 'பிரெக்ஸிட்' ஒப்பந்தம் தோல்வி பிரிட்டன் அரசியலில் பரபரப்பு



**லண்டன்.ஜன.17**

**பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரசா மே, பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் பிரெக்ஸிட் தொடர்பாகக் கொண்டு வந்த ஒப்பந்தத்தைப் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோற்கடித்தது அந்த நாட்டு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.**

பிரிட்டனின் தலைமை அமைச்சரான தெரசா மே கடந்த செவ்வாய்க்கிழமை பிரெக்ஸிட் தொடர்பான ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். இதன்போது ஒப்பந்தத்துக்கு எதிராக 432 வாக்குகளும், ஆதரவாக 202 வாக்குகளும் பதிவு செய்யப்பட்டன. இதனால் தெரசா மே கொண்டு வந்த ஒப்பந்தம் பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தால் தோற்கடிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக வாக்களித்தவர்களில் ஆளும் கட்சி உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர். பிரிட்டன் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி அடைந்த மோசமான தோல்வியாக இது கருதப்படுகிறது.

இந்த நிலையில்தெரசா மே அரசு மீது எதிர்க்கட்சித்தலைவர்ஜெர்மிகார்பின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளார்.

**பின்னணி**

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகுவதென்று 2016ஆம் ஆண்டில்பிரிட்டன்மக்கள்மத்தியில்முன்னெடுக்கப்பட்ட வாக்கெடுப்பின் மூலம் முடிவானது. எந்தஒப்பந்தத்தின்அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகும் என்பதில் தெளிவில்லாமல்உள்ளது. ஐரோப்பியஒன்றியத்திலிருந்து விலகுவது என்ற முடிவுக்கு ஆதரவாகப் பிரிட்டனில் 2016ஆம் ஆண்டில் ஏற்பட்ட மக்களின் முடிவை நடைமுறைப்படுத்த முடியுமா என்ற சூழல்உருவானது. தெரசாவின்கன்சர்வேடிவ் (டோரி) கட்சியைச் சேர்ந்த தலைவர்கள்மத்தியில்ஐரோப்பியஒன்றியத்துடன் பிரிட்டனின் எதிர்கால உறவு எப்படி இருக்க வேண்டும் என்றுவெவ்வேறு கருத்துகளும்எழுந்தன. இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவது தொடர்பில் பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரசாமே முன்வைத்த ஒப்பந்தம் மீது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 48பேர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைத்தனர். இதனால்அந்தஒப்பந்தம்வாக்கெடுப்பைஎதிர்கொள்ளவேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டது.

# கனடா – டென்மார்க் – துபாய் – சிங்கப்பூர் எங்கும் பரவலாகப் பொங்கல் கொண்டாட்டம்



ஒட்டோவா.ஜன.17
தமிழர்களின் பாரம்பரியம் மற்றும் தமிழ்ப் புத்தாண்டையொட்டியபொங்கல்பண்டிகை கடந்த15ஆம்திகதிதமிழர்களால்கொண்டாடப்பட்டிருந்தது. அந்த வகையில் தமிழர்கள்புலம்பெயர்ந்துவாழ்கின்றநாடுகளிலும் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டது. கனடா, சிங்கப்பூர், டென்மார்க், துபாய் என உலகநாடுகளில்பரவலாகப்பொங்கல்பண்டிகை கொண்டாடப்பட்டது.




கனடாவின் தலைமை அமைச்சர் ஜஸ்டின் ட்ரூட்டோ, அந்தநாட்டிலுள்ளதமிழ்மக்களுடன் பொங்கல் பண்டிகையைக் கோலாகலமாகக் கொண்டாடியுள்ளார். இது குறித்துக் கீச்சகப் பக்கத்தில் அவர் கூறும்போது, 'மகிழ்ச்சிக்குரிய பண்டிகைதான் பொங்கல் பண்டிகை. இன்றுதமிழ்சொந்தங்களுடன் மர்காம்மில் சிறப்பாகப் பொங்கல் கொண்டாடினோம். வரவேற்புக்கு நன்றி' என்று தெரிவித்தார். தமிழ் அமைப்புச் சார்பில், துபாயில் உள்ள முஷ்ரிப் எனும் பூங்காவில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டது. இதில் துபாயில் வசிக்கின்ற தமிழர்கள் கலந்துசிறப்பித்தனர். டென்மார்க்கில்அந்த நாட்டின் நாடாளுமன்றில் டெனிஸ் தமிழ் அமைப்புகளின் ஒன்றியத்தால் பொங்கல் விழா கொண்டாடப்பட்டிருக்கிறது. டென்மார்க் மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அங்குள்ள தமிழர்கள் எனப் பலரும் கலந்து கொண்டல் அங்கு பொங்கல் விழாகளை கட்டியிருக்கிறது. இந்த நாடுகளின் வரிசையில், தமிழர்கள் செறிந்து வாழும் மலேசியா, சிங்கப்பூர் உட்பட்ட உலக நாடுகள் பலவற்றிலும் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# ஆராய்ச்சியாளரை விழுங்கியது முதலை

## அவர் முதலைக்கு உணவாகியமையும் உறுதியானது



சுலாவேசி.ஜன.17
இந்தோனேசியாவின் வடக்குச் சுலாவேசி நகரில், பெண் ஆராய்ச்சியாளர் ஒருவர் முதலைக்கு உணவு கொடுக்கச் சென்றபோது, 17 அடி நீளமுள்ளமுதலைஒன்றுஅவரை உயிருடன் விழுங்கிய சம்பவம் நடந்துள்ளது. வடக்கு சுலாவேசி நகரில் சி.வி. யோசிகி முதலை ஆராய்ச்சி மையம் அமைந்துள்ளது. இந்த மையத்தில் டீசி டுவோ (வயது44) என்ற பெண் ஆராய்ச்சியாளர் பணியாற்றி வந்தார். அந்தபண்ணையில் மெரிஎன்றமுதலைவளர்க்கப்பட்டுவந்தது. இந்தமுதலை17 அடிநீளம்கொண்டது. மனிதர்களைத் தாக்கும் தன்மை கொண்டதால், தடுப்புச்சுவருக்குள் வளர்க்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், இந்த முதலைக்கு நேற்றுமுன்தினம் டீசி டுவோ வழக்கம் போல் உணவளிக்கச்சென்றார். அப்போது திடீரென தடுப்புச் சுவற்றை மீறிப்பாய்ந்தமுதலை, டுவோவின் கைகளைப் பற்றி இழுத்துச்சென்றது முதலையின்வாய்க்குள் டுவோ உடலின் பெரும்பகுதி சென்ற நிலையில், முதலை ஆவேசமாக அவரை இழுத்துச் சென்றது. டுவோவின் அலறல் சத்தத்தைக் கேட்ட ஆராய்ச்சிமையத்தில் இருந்தவர்கள் பொலிஸாருக்கு தகவல் அளித்தனர். அதன்பின் போலீஸாரும், மீட்புப்படையினரும், விரைந்து வந்து மெரிமுதலையைப்பிடிக்கும்முயற்சியில் ஈடுபட்டனர். நீண்டநேர போராட்டத்துக்குப்பின் முதலையைப் பிடித்தனர். முதலையை ஆய்வுசெய்ததில், அதுமனிதஉடல் பாகங்களை உணவாக உட்கொண்டிருப்பதை மருத்துவர்கள் உறுதி செய்தனர். இதற்கிடையே இந்த முதலை ஆராய்ச்சி மையத்தில் முதலையை வளர்த்து வரும் ஜப்பான் நாட்டவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். டோமோஹான் நகரப் பொலிஸார் கூறுகையில், ' முதலையை வளர்த்து வந்த உரிமையாளரைத் தேடி வருகிறோம். அதிகாரிகள்பொதுமக்களின் உதவியைநாடியுள்ளார்கள். இந்தக் கொடூரமானசம்பவம்குறித்துஅந்த முதலையின்உரிமையாளர் அறிந்திருப்பார் என்று நினைக்கிறேன். முதலையை வளர்க்கச் சட்ட அனுமதி பெற்றிருக்கிறாரா என்பது தெரியவில்லை. அனுமதியில்லை என்றால் அவர் கைது செய்யப்படுவார். முதலை தற்போது பிடிக்கப்பட்டு அரச காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது' எனத்தெரிவித்தார்.



# கென்யாவில் விடுதி மீது தாக்குதல் அமெரிக்கர் உட்பட 15 பேர் சாவு

நைரோபி.ஜன.17
கென்யாவில் விடுதி ஒன்றின் மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில்15பேர் சாவடைந்தனர். கென்யாவின்தலைநகர்நைரோபியில் அமைந்துள்ள விடுதியில் நேற்று முன்தினம் மாலை இந்தத் தாக்குதல் நடந்தது.

விடுதியைச்சுற்றி வளைத்துத் துப்பாக்கியால் சுட்டும், வெடிகுண்டுகள் வீசியும் ஆயுததாரிகள் தாக்குதல்நடத்தினர். இதனால்பொதுமக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். இந்ததாக்குதலில்ஓட்டல்வளாகத்தின் வெளியே நிறுத்தப்பட்ட வாகனங்கள் தீப்பிடித்து எரிந்தன. தாக்குதலை அடுத்து, அங்கு விரைந்த பொலிஸார், விடுதியில்இருந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். பொலிஸார் சுற்றி வளைத்ததும், ஆயுததாரிகள் பதுங்கியிருந்து அவ்வப்போது தாக்குதல் நடத்தினர்.

மறுநாள் விடிய விடிய நடந்த இந்தத்தாக்குதலில்அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட 15 பேர் சாவடைந்தனர். மேலும் சிலர் காயமடைந்தனர். இன்று காலை நிலவரப்படி குறித்த விடுதிக்குள் இன்னும்சில அயுததாரிகள் இருப்பதாகப்பொலிஸ்தரப்பில்தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு அல்ஷபாப்அமைப்புபொறுப்பேற்றுள்ளது.

# சபரிமலையில்மீண்டும்பதற்றம் இளம் பெண்கள் தடுத்து நிறுத்தம்

கேரளா.ஜன.17
இந்தியாவின் கேரளாவிலுள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குத் தரிசனம்செய்வதற்குநேற்றுஅதிகாலைவந்தஇரண்டுபெண்களைப் போராட்டக்காரர்கள் நீலிமலையில் வைத்துத் தடுத்து நிறுத்தினர். அதனால் பதற்றமான சூழல் ஏற்பட்டது. அனைத்து வயதுப்பெண்களும் சபரிமலைக்குச்செல்லலாம்என்று உச்சநீதிமன்றம்அளித்ததீர்ப்பைத் தொடர்ந்து கடந்த 3 மாத காலமாகக் கேரள முழுவதும் இந்து அமைப்புகள் மற்றும் பா.ஜ.காவினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். சபரிமலையில் அசம்பாவித சம்பவங்கள் நடப்பதைத் தடுக்கும் வகையில் பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், 21 நாள் மகர விளக்கு பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் நடை பலத்த பாதுகாப்புக்கு இடையே கடந்த டிசம்பர் 30ஆம் திகதி மாலை நடை திறக்கப்பட்டது. இந்த மாதம் 2 ஆம் திகதி கேரளாவைச் சேர்ந்த கனக, துர்கா ஆகிய இரண்டு பெண்கள் சபரிமலைக்குப் பொலிஸ் பாதுகாப்புடன் சென்று ஐயப்பனைத் தரிசனம் செய்து பரபரப்பை ஏற்படுத்தினார்கள். இதையொட்டி, கேரள மாநிலத்தின் பல்வேறு நகரங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடந்து முடிந்து மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. இந்த நிலையில், இன்று அதிகாலை இரு இளம் பெண்கள் சபரிமலைக்கு ஐயப்பனைத் தரிசனம் செய்ய வந்துள்ளனர். அவர்களைநீலிமலையில்உள்ளதண்ணீர்தொட்டிபகுதியைகடக்கும்போது பக்தர்கள் பார்த்துவிட்டதால், அங்கு கோஷத்தை எழுப்பிக் குறித்த பெண்களை மலை ஏறமுடியாதபடி போராட்டம் நடத்தினார்கள்.

இதனால், அங்கு பதற்றம் ஏற்பட்டது. பொலிஸார் அங்கு விரைந்தனர். இரு பெண்களும் கடந்த 103 நாட்களாக விரதம் இருந்து இருமுடிகட்டி வந்துள்ளதாகத் தெரிவித்தபோதிலும், அவர்களைமலைஏறவிடாமல் போராட்டக்காரர்கள் தடுத்தனர். ஆனால், அந்த பெண்கள் இருவரும் தாங்கள் சபரிமலையில் ஐயப்பனைத் தரிசிக்கச் செல்வதற்குப் பொலிஸார்பாதுகாப்பு அளிக்க வேண்டும்என்று கேட்டனர். போராட்டக்காரர்கள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்ததால், போராட்டக்காரர்களில் 5 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். இதனால் பதற்றமான சூழல் ஏற்பட்டது. இதையடுத்து, இரண்டு பெண்களையும், பொலிஸார் பாதுகாப்பாகத் தமது அரணுக்கு அழைத்துச் சென்றனர். போராட்டக்காரர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.




# கமரூனில் கடத்தல் சம்பவம் அரசு - போராளிகள் முரண்



யாவுண்டே.ஜன.17
மத்திய ஆபிரிக்க நாடான கேமரூனின்தென்மேற்குப்பிராந்தியத்தில் துப்பாக்கி முனையில் 36 பயணிகள் கடத்தப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கமரூனில் ஆங்கிலம் பேசும் மக்கள் அதிகம் வாழும் தென்மேற்கு மற்றும் வடமேற்கு பிராந்தியங்களைதனிநாடாகஅறிவிக்க வலியுறுத்தி, ஆயுதமேந்திய உள்நாட்டவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை ஒடுக்குவதற்கு கமரூன் அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. இதன்காரணமாகஅரசபடைகளுக்கும், ஆயுத அமைப்புகளுக்குமிடையேபோர்நடந்துவருகிறது. இந்தநிலையில்கமரூனின் தென்மேற்குப்பிராந்தியத்தில் பியூவா கும்பா நெடுஞ்சாலையில் சென்ற பயணிகள் பேருந்தை, ஆயுதம்தாங்கியகுழுஒன்றுநேற்றுமுன்தினம் தடுத்து நிறுத்தி, அதிலுள்ள பயணிகள் அனைவரையும் துப்பாக்கியைக்காட்டிமிரட்டிக்கடத்திச்சென்றது. அவர்களிடமிருந்துவிடுவிக்கப்பட்டபேருந்தின்சாரதிகொடுத்ததகவலின் அடிப்படையில் கடத்தப்பட்ட பயணிகளை மீட்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பிராந்தியங்களில் ஆட்கடத்தல் சம்பவம் அதிகரித்து வருகிறது. இதற்கு ஆயுதம் தாங்கிய பிரிவினைவாதிகள் தான் காரணம் என அரசு குற்றம்சாட்டுகிறது. ஆனால், தங்கள் சுதந்திரப்போராட்டத்தைப்பன்னாட்டு அளவில்களங்கப்படுத்தும் வகையில், அரசால் இந்த கடத்தல் சம்பவம் திட்டமிட்டுநடத்தப்படுவதாகஆயுதஅமைப்பினர்கூறுகின்றனர்.

# நூதனமான கடத்தல்



பெர்லின். ஜன.17
ஜெர்மனி பெர்லின் நகரத்தின் ஸ்பொன்பெல்ட் விமான நிலையத்தில் இருந்து இஸ்ரேல் செல்லும் விமானத்தில் பயணிப்பதற்காக 43 வயதான பயணி ஒருவர் விமான நிலையத்துக்குவந்துள்ளார். அவரின்நடை, உடைவித்தியாசமாகத் தோன்றியதால், விமான நிலைய அதிகாரிகள் அவரைச் சோதனை இட்டுள்ளனர். அதன்போது அவர்தன்மர்மப்பகுதியில்(உள்ளாடைக்குள்)40சென்ரிமீற்றர் நீளமான உயிருள்ள பாம்பு ஒன்றை மறைத்து வைத்திருந்தமைகண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டிலே தாங்கள் கண்டு பிடித்த வெகு நூதனமான கடத்தல்இது என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# என்ன செய்யப் போகிறது தமிழ்க் கூட்டமைப்பு?

ஐப்பசி அரசியல் சூழ்ச்சியின் மூலம் தாம் கைப்பற்றிய ஆட்சியைத் தக்க வைக்க முடியாமல் தோற்றுப் போன மகிந்த ராஜபக்ச தரப்பினர், அதற்குப் பதிலடியாகவும் பழி வாங்கும் விதத்திலும் அந்தப் போராட்டத்தில் தாம் தோற்றுப் போவதற்குக் காரணமான, மையப் புள்ளியான புதிய அரசமைப்பைக் கடுமையாக எதிர்ப்பது என்கிற முடிவில் தீர்மானகரமாக இருப்பது தெளிவாகவே தெரிகின்றது.

தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்வது என்கிற நிலை ஏற்படுகின்றபோதெல்லாம் ஒரு தரப்பு அதனை ஆதரித்தால் சிங்களப் பெருந்தேசியவாதத்தைத் தூக்கிப் பிடித்துக் கொள்ளும் மறு தரப்பு அதனைக் கடுமையாக எதிர்ப்பது இலங்கை அரசியலில் புதியதொன்றல்ல. இது சிங்கள, பௌத்த தேசியவாதத்தின் இயல்பு.

இந்த இரு தரப்புகளாகவும் இதுவரை காலமும் இருந்தவை ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்காசுதந்திரக்கட்சியும். இந்த இரு தரப்புகளும் 2015ஆம் ஆண்டில் பெயருக்கு ஓர் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டபோது அந்த இணை ஒரு தரப்பாகவும் மகிந்த அணி எதிர்த் தரப்பாகவும் உருமாற்றம் பெற்றன. அப்போது முதலே மகிந்த தரப்பினர் புதிய அரசமைப்பு முயற்சிகளை எதிர்த்தே வந்தனர்.

இருப்பினும் புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவில் அங்கம் வகித்தனர். அரசமைப்பு உருவாக்கம் ஒரு கட்டத்தை அடையும் வரையில் ஒத்துப்போவதாகக் காட்டிக் கொண்ட மகிந்த தரப்பினர் பின்னர் மெல்ல மெல்ல இழுத்தடிப்புக்களையும் குழப்பங்களையும் தொடங்கினர்.

அதன் பயனாகவே வழிகாட்டல் குழுவில் அனைத்துத் தரப்பினரும் இணங்கிய ஒரு இடைக்கால அறிக்கையை முன்வைக்க முடியாமல்போனது. வழிகாட்டல் குழுவில் அலசப்பட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கையும் அது தொடர்பில் கட்சிகளின் தனிப்பட்ட நிலைபாடுகளுமாகத்தான் அந்த அறிக்கை வெளிவந்தது. அரசமைப்புச் சபையான நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச வரைவுகூட அதைப் போன்றதொன்றே. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக்கட்சிகளும் இணங்கிக் கொண்டு வந்த தொரு ஆவணம் அல்ல அது என்பதே சிங்களக் கட்சிகள் பலவற்றினதும் நிலைப்பாடு.

இல்லை, அவை இணக்கம் காணப்பட்ட விடயங்கள்தான், ஆனால் அரசியல் காரணங்களுக்காக இணக்கம் காணப்படவில்லை என்று இப்போது கூறுகின்றார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வளவுதான் கூப்பாடு போட்டாலும், யதார்த்தம் என்னவோ அனைத்துத் தரப்புகளும் இணங்கிய ஓர் ஆவணமாக உத்தேச வரைவு நாடாளுமன்றத்துக்கு வரவில்லை என்பதுதான்.

நெருக்கடிகள், இக்கட்டுக்கள், அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையில் இந்த உத்தேச வரைவு ஒருவேளை நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டாலும்கூட அது அனைத்துத் தரப்புகளும் இணங்கிக் கொண்டுவந்த ஒரு அரசமைப்பாக இருக்காது என்பதுதான் உறைக்கும் யதார்த்தமாக இருக்கும்.

இத்தகைய ஒரு நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் மகிந்த தரப்பினர் புதிய அரசமைப்பை முழுமையாக எதிர்ப்பதையே தமது அடுத்த ஆயுதமாகக் கையில் தூக்கியுள்ளார்கள் என்பது புலனாகின்றது. மகிந்த ராஜபக்ச அதனைப் பகிரங்கமாக அறிவிக்கவும் செய்கிறார். எனவே குறைந்தபட்சம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தயவில் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சி தொடரும் வரையில் இந்தக் கடும் எதிர்ப்பு தொடரவே செய்யும் என்பதை நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

எந்த அரசமைப்பை நிறைவேற்றுவதற்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தக்கவைக்க விரும்பியதோ, எதனை நிபந்தனையாக்கிக் கொண்டு இந்த அரசுக்குக் கூட்டமைப்பு ஆதரவைத் தந்ததோ அதுவே தற்போது புதிய அரசமைப்புக்கான ஆபத்தாகவும் மாறி நிற்கின்றது. இந்த இக்கட்டிலிருந்து வெளிவருவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் என்ன வழி வகை உண்டு?

தமது தயவில்தான் இந்த அரசு இருக்கின்றது என்பதை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடிய அரசியல் சூழலில் கூட்டமைப்பு இல்லை என்பதே யதார்த்தம். இந்த அரசுக்கான ஆதரவை அது விலக்கிக் கொண்டாலும் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவது இயலாதது, ஆதரவளித்தாலும் அந்தப் பணியில் நிச்சயம் வெல்ல முடியும் என்று சொல்லமுடியாது என்கிற நிலையில் கூட்டமைப்பு என்ன செய்யப்போகிறது? இதுவே தமிழர்கள் முன்னுள்ள கேள்வி.

# ஏமாற்றப்படும் அரசியல் கைதிகள்



விவேகானந்தனூர் சதீஸ்

உலகில் வலிமையுள்ளவர்கள்தான் பாவம் செய்கின்றார்கள். வலிமையற்றவர்கள் பாவம் செய்யப் பயன்படுத்தப்படுகின்றார்கள். வலிமையுள்ளவர்கள் தங்களின் பலம் பொருந்திய சக்தியைச் சரியாகப் பயன்படுத்தத் தெரிந்துகொண்டால் குற்றவாளிகள் உருவாகமாட்டார்கள். எமது நாட்டில் அதிகாரத் தரப்புக்களின் -அரசுகளின் அலட்சியப் போக்கு அபரிமிதமடைந்து இனச்சமநிலை குலைந்து பெரும் இனச் சங்காரம் நிகழ்ந்தேறியது.

**அழியா நினைவு**

போர் நிறைவுற்று பத்து ஆண்டுகளைக் கடந்துள்ள போதும் அதனை நினையாதிருக்க முடியாதவர்களாக மக்கள் இருக்கின்றனர். பத்து முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. மாறாகப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு மறுவாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுகிறார்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தினம் தினம் தெருப் போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். வடக்கு கிழக்கெங்கும் மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்படுகின்றன. தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி அபரிக்கப்பட்ட தமிழரின் சொந்தக் காணிகள் பல ஆண்டுகளுக்குப் பின்பு படிப்படியாக விடுவிக்கப்படுகிறது. அதேவேளை மறுபக்கம் தேசிய மரபுரிமை அமைச்சகத்தால் தொல்பொருள் ஆய்வுக்கு எனக் கூறி புதிதாக மக்களின் காணிகள் எல்லையிடப்பட்டு கையகப்படுத்தப்படுகிறது.

உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியதும் தீர்க்கப்படக் கூடியதுமான மனிதாபிமானப் பிரச்சினையாக தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரத்தை நோக்கலாம். கூட்டு அரசு ஆட்சிபீடமேறியதையடுத்து அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பல்வேறு கட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றன. இந்தப் பேச்சு மேசைகளுக்கு யாரும் தானாகச் சென்று அமரவில்லை. அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி பல சுற்று உணவு ஒறுப்புப் போராட்டங்களை மேற்கொண்டதன் விளைவென்றுதான் சொல்ல வேண்டும். இருந்தபோதிலும் இன்றுவரை தீர்வுகள் எட்டப்படவில்லை.

அரசியல் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டங்களில் ஈடுபடுகின்றபோது மட்டும் சிறைக்கூடங்களுக்குச் சென்று அவர்களைப் பார்வையிடுவதும் வாக்குறுதிகளை அள்ளி வழங்குவதும் அது குறித்துக் கலந்துரையாடுவதும் அறிக்கைகளை விடுவதும் பின்னர் அதன் செயற்பாடுகள் மழுங்கடிக்கப்பட்டு வசதியாக மறந்து போவதும், மறக்கடிக்கப்படுவதும் தொடர்கதையாக நீள்கிறது.

**உரிமையுடன் தட்டிக் கேட்டார்கள்**

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தைப் போலன்றி கூட்டு அரசின் காலப்பகுதியில் தமிழ் மக்கள் தமது தேவைப்பாடுகளை உரிமையுடன் தட்டிக் கேட்கத் தலைப்பட்டிருந்தார்கள். தமது பெரும்பான்மை வாக்குகளால் அமைக்கப்பட்ட அரசு என்பதாலே அவ்வாறு தட்டிக் கேட்க முற்பட்டார்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் தம்மை மறுவாழ்வளித்தாவது விடுவிக்குமாறு கோரி மேற்கொண்ட தன்னெழுச்சிப் போராட்டங்களின்போது அதனை ஆதரித்து வடக்கு கிழக்கு மாத்திரமன்றி தலைநகர் கொழும்பு மற்றும் அநுராதபுரம் போன்ற இடங்களில் கூட போராட்டங்கள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து அநுராதபுரம் சிறைச்சாலை வரையான நெடுந்தூர பாதயாத்திரையை மேற்கொண்டிருந்தார்கள்.

அது பன்னாட்டுச் சமூகத்தையே திரும்பிப் பார்க்க வைத்துவிட்டது. சில பெரும்பான்மை அரசியல்வாதிகளும் கூட கைதிகளின் விடுதலை தொடர்பில் சாதகமான பல கருத்துக்களைக் கூறியிருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரச தலைவருடனும், தலைமை அமைச்சருடனும் தொடர் பேச்சுக்களை மேற்கொள்வதாகவே தெரிவித்து வந்தது. சட்டமா அதிபருடனும் பாதுகாப்புச் சபையிலும் ஆராய்ந்துவிட்டு கைதிகள் விடயத்தில் நிச்சயமாக அரசியல் தீர்மானமொன்று எடுப்பேன் என்று அரசதலைவரும் கூறி வந்தார்.

**நம்பியிருந்தார்கள்**

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் அரச தலைவர் ஒரு அரசியல் நல்லிணக்கத்தின் படி கட்டாயம் விடுதலை செய்வார் என்றே தமிழ் மக்கள் பெரிதும் நம்பினர். அவ்வாறே மக்கள் பிரதிநிதிகளும் விசுவாசித்திருந்தனர். ஆனாலும் அரசியல் கைதிகள் விடயத்தில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. குறைந்த பட்சம் நாட்டிலுள்ள ஐந்து இலட்சம் மக்களின் கையொப்பங்களுக்கு மதிப்பளித்து தாயை இழந்த நிலையில் தந்தையைப் பிரிந்து வாழும் அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனின் இரண்டு சிறு பிள்ளைகளது எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ஆனந்தசுதாகரனையாவது விடுவித்திருக்கலாம். அரச தலைவர் மைத்திரி அதனைக் கூட இதுவரை செய்ய முன்வரவில்லையென்பது கவலைக்குரியதே.

தமிழ் அரசியல் கைதிகள் ஒரு அரசியல் நோக்

கத்தின் செயற்பாட்டாளர்கள். அந்த அரசியல் நோக்கம் கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதத்துடன் முடிவுக்கு வந்துவிட்டது. தனிநாடு ஒன்றை நிறுவும் அரசியல் நோக்கம் இன்று இல்லை. ஆகவே அரசியல் நோக்குடன் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க வேண்டியது அவசியமாகும். மக்கள் விடுதலை முன்னணியினர் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களை மன்னித்த அரசு ஏன் தமிழ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பை வழங்க முடியாது? என்று நாடாளுமன்ற உறுப்பினரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார். 'தவறுகள் செய்வது மனிதத் தன்மை. மன்னிப்பது தெய்வீகத்தன்மை வாய்ந்தது' என்கின்ற மேற்கோளுக்கமைய தன்னைக் கொலை செய்ய முயற்சித்ததாகச் சொல்லப்படும் அரசியல் கைதியை அரச தலைவர் மன்னிப்பளித்து விடுதலை செய்திருந்தார். ஆனாலும் மீதமிருக்கின்ற நூற்றுக்கும் குறைவான அரசியல் கைதிகள் மறுவாழ்வளித்து விடுவிக்கத் தயங்குவது அரசியல் உள்நோக்கமுடையதா? என்று எண்ணத் தோன்றுகிறது.



### முக்கிய பேசு பொருள்

ஒக்ரோபர் 26ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வலிந்து ஏற்படுத்தப்பட்ட அரசியல் நெருக்கடிநிலையை அடுத்து இருபெரும் தேசியக் கட்சிகளும் பெரும்பான்மையை நிரூபிக்கும் பேரம் பேசல்களில் ஈடுபட்டிருந்தன. அரசியல் கைதிகளின் விடயம் மிக முக்கிய பேசு பொருளாக மாறியிருந்தது. தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் தமது அரசு துரித கதியில் ஒரு பொறிமுறையை ஏற்படுத்தி அனைவரையும் விடுதலை செய்யும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். அதுமட்டுமன்றி தந்தையான மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகப் பதவியேற்ற மறுநாளே நாமல் ராஜபக்ச அவசர அவசரமாக கொழும்பு மகசின் சிறைச்சாலைக்குச் சென்று சில அரசியல் கைதிகளைச் சந்தித்திருந்தார்.

### நடந்தது என்ன?

அரசின் பிரதியமைச்சர்களாக இருந்த அங்கஜன், காதர்மஸ்தான், வியாழேந்திரன் ஆகியோர் மகசின் சிறைச்சாலைக்கு பயணம் செய்து தமிழ் அரசியல் கைதிகளுடன் சுமார் இரண்டு மணிநேரம் கலந்துரையாடியிருந்தனர். இது சுத்தமான அரசியல் இலாபநோக்குடையது எனக் கைதிகள் ஊகித்துக் கொண்டனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரே தம்மைக் கலந்துரையாட அனுப்பியதாகவும் எப்படியேனும் அரசியல் கைதிகளின் உறவுகளுக்கூடாகவும் சிவில் சமூக அமைப்புக்களூடாகவும் அழுத்தங்களைப் பிரயோகித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை தமது அரசுக்கு ஆதரவளிக்கச் செய்ய வேண்டுமெனக் கேட்டுள்ளனர். அவ்வாறு ஆதரவளிப்பார்களேயானால் மிகக் குறுகிய காலத்துக்குள் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்வதற்கு மகிந்த ராஜபக்சவும் மைத்திரிபால சிறிசேனவும் தயாராக இருப்பதாகவும் மூன்று பிரதி அமைச்சர்களும் தெரிவித்துள்ளனர்.

"நாம் சட்டம், நீதியின் அடிப்படையில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படவில்லை. வெறும் அரசியல் காரணங்களுக்காகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளோம் என்ற உண்மை அம்பலப்பட்டுள்ளது. எதுவானாலும் தம்மீது கரிசனை காட்டுகின்றவர்கள் சுமார் 25 வருடங்களுக்கு மேலாக சிறைக்குள் வாடும் அரசியல் கைதிகளில் குறைந்த பட்சம் ஐந்து பேரையாவது உடனடியாக விடுவித்து தமது நல்லெண்ணத்தைக் காண்பிக்க இயலுமானால் தாம் தமிழ் மக்களிடமும் மக்கள் பிரதிநிதிகளுடனும் நடப்பு அரசுக்கு ஆதரவு தெரிவிக்குமாறு வலியுறுத்த முடியும்" என்று அரசியல் கைதிகள் பதிலளித்துள்ளனர்.

### உண்மை முகம்

'சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் என்று எவரும் கிடையாது. அரசியல் தலையீடு செய்து விடுதலைப் புலிகளை சட்டத்துக்கு முரணாக விடுதலை செய்வது தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும். இடைக்கால அரசில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ச ஆகியோர் தமிழ் அரசியல் கைதிகள் எனக் குறிப்பிடுப வர்களை விடுதலை செய்வது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

தற்போது மட்டுமல்ல பிற்காலத்தில் எந்த அரசு வந்தாலும் அவர்களை ஒருபோதும் விடுதலை செய்ய முடியாது. இவ்விடயம் எமக்கொரு பொருட்டல்ல' என்று சுசில் பிரேமஜயந்த கூறியிருந்தார். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவளித்தமையால் ஏற்பட்ட உடனடி வெப்பியாரம் என்பதே வெளிச்சம். பஞ்சில் பரவும் தீப்பொறியை விட மனதில் படியும் துவேசமும் காழ்ப்புணர்ச்சியும் விரைந்து பரவும் அபாயம் மிக்கதெனலாம்.




ரணில் மீண்டும் தலைமை அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் உரையாற்றிய மைத்திரி, தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்றால், குற்றமிழைத்த இராணுவத்தினரையும் விடுவிக்க வேண்டும் என்று கூறினார். போர்க்குற்றமிழைத்த இராணுவத்தினரை இனங்கண்டு அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி யதன் பின்னரே அவர்களை விடுதலை செய்வதா? இல்லையா? என்பது தொடர்பில் சிந்திக்க முடியும். போர்க் குற்றமிழைத்ததாக ஒரு சிப்பாய் கூட அடையாளப்படுத்தப்படவோ கைது செய்யப்படவோ சுயாதீன விசாரணைக்கு உட்படுத்தப்படவோ இல்லை. தமிழ் அரசியல் கைதிகள் தமது உறவுகளை இழந்தும் பிரிந்தும் 10 முதல் 25 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து சிறைகளில் சிதைந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கும் அதிகமான தண்டனைக் காலத்தை சிறைக்குள் அனுபவித்துவிட்டார்கள். இவ்வாறிருக்கும்போது படையினருடன் அரசியல் கைதிகளை ஒப்பிட்டு அவர்களின் எதிர்காலத்தை அடகு வைத்துப் பேசுவதென்பது எந்தவகையில் நியாயமாகும்?

அரசியல் நெருக்கீடு ஏற்படுவதற்கு முன்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் கரிசனை மிகுந்தவராகவும் விரைவில் தீர்க்கமானதொரு முடிவை எடுப்பதாகவும் தெரிவித்து வந்திருந்தார். ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுத் தளத்தை தமக்கிசைவாக அசைக்க முடியாமல் போனபோது அரச தலைவரின் உண்மை முகம் வெளிப்பட்டுவிட்டது.

### கூட்டமைப்பு என்ன செய்யப் போகிறது?

முன் நிபந்தனையின்றி ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு முட்டுக் கொடுத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எந்தளவுக்கு தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தை இறுக்கிப் பிடித்து நிறைவேற்றப் போகிறது எனத் தெரியவில்லை. அதனைச் செய்வதற்கு அரசியல் அதிகார முடிவும் தற்துணிவும் அவசியம். அது தமிழ்க் கூட்டமைப்பிடம் இருக்கிறது; சில விடயங்களுக்கு அழுத்தம் கொடுத்தால் தென்னிலங்கையின் இனவாதப் பரப்புரைகளுக்கு தீனிபோடுவதாகிவிடும் என்று தயங்கிக் கொண்டிருந்தால் எதுவும் நிறைவேறிவிடப் போவதில்லை. இது கடந்த காலப்பட்டறிவு. அரசுக்கு நெருக்குவாரத்தை ஏற்படுத்திவிடக் கூடாது என்று ஓரமாக இருந்தால் கூட்டமைப்பே பரிதாபத்துக்குரிய பாத்திரமாக நேரிடும். எதிர்வருகின்ற இரண்டாண்டுகள் நாட்டில் சிறியதும் பெரியதுமான தேர்தல் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

அனைத்துக் கட்சிகளும் மக்களின் வீட்டுப் படலைகளைத் தட்ட வேண்டிய தேவை இருக்கின்றது. இவ்விடத்தில் மக்கள் விழிப்புடன் செயற்படுவது அவசியம். வாக்குவரம் கேட்டு உங்கள் வாசல் நாடி வரும் வேட்பாளர்களிடம் 'பன்நெடுங்காலம் சிறைகளில் வாடும் எமது உறவுகளைக் கூட விடுவிடுக்க முடியாத நீங்கள் வேறு எதனைச் செய்யப் போகிறீர்கள்?' என்று உரத்துக் கேளுங்கள். அது உங்கள் உரிமை.

## ஆசிரியருக்கான கடிதம்

# மனமிரங்குவார்களா மருத்துவர்கள்?

மருத்துவர்கள் இறைவனுக்கு அடுத்த நிலையில் மக்களால் போற்றப்படுபவர்கள். நோயால் அவதியுறும் நோயாளர்கள் மருத்துவரைத் தேடிச் செல்கின்றனர். இதைச் சாதகமாகப் பயன்படுத்திச் சில தனியார் மருத்துவமனையின் மருத்துவர்கள், அதற்குப் பொறுப்பானவர்கள் நோயாளிகளிடம் பணத்தைக் கறப்பது தாயகத்தில் நடந்த வண்ணமே உள்ளது.

கடந்த வாரம், வாரப் பத்திரிகை ஒன்றை வாசித்தேன். இப்படியும் மருத்துவ சேவையா தமிழர் தாயகத்தில்? அடக்கடவுளே! இது இங்கல்ல வடசென்னையில் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மக்கள் பூக்களைத் தூவி, கற்பூரச்சட்டி ஏந்தி, சில மூதாட்டிகள் நெஞ்சிலே அடித்து ஒப்பாரியிட்டும் கொண்டதாக செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வடசென்னையில் 5 ரூபா மருத்துவர் ஜெயச்சந்திரனின் இறுதி ஊர்வலம் இது. உண்மையிலேயே மக்கள் மத்தியில் இடம்பிடித்த அந்த மருத்துவர் போற்றத்தக்கவர். ஆனால் தமிழர் தாயகத்தில் இன்று மூலைக்கு மூலை தனியார் மருத்துவசேவை எனக் கூறி நோயாளர்களிடம் பணம் கறக்கும் அவலம்தான் நடக்கின்றது.


மருத்துவசேவை உன்னதமானது. அதற்கு மதிப்பளிக்கின்றோம். ஆனாலும் வடசென்னை 5 ரூபா மருத்துவர்கள் போல் உங்களால் சேவை செய்ய முடியாத பட்சத்தில் கட்டண விடயத்தில் சிறுதளர்வையாவது மனிதநேயத்துடன் கடைப்பிடித்தால் நோயாளர்கள் அதுவும் ஏழ்மைப்பட்டவர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும்.


**அ.அன்பு, வரணி.**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

## வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்





# இறக்கை கிழிந்த வண்ணத்துப்பூச்சி

காட்டில் பல வண்ணப் பூக்கள் பூத்துக் குலுங்கின. தேனீக்களும் வண்ணத்துப் பூச்சிகளும் பூந்தேனைச் சுவைப்பதில் தீவிரமாக இருந்தன. இந்தக் காட்சிகளை ரசித்துக்கொண்டே வந்தது ஒரு குரங்கு.

திடீரென்று மஞ்சள் வண்ண இறக்கைகளோடு ஒரு பெரிய வண்ணத்துப்பூச்சி குரங்கு அருகில் இருந்த செடியில் அமர்ந்தது.

"அடடா! இவ்வளவு அழகான வண்ணத்துப்பூச்சியை நான் இதுவரை பார்த்ததில்லை!" என்று நினைத்த குரங்கு, அடுத்த நொடி வண்ணத்துப்பூச்சியைப் பிடித்தது. பயந்துபோன வண்ணத்துப்பூச்சி, வேகமாக இறக்கைகளை அடித்துப் பறக்க முயன்றது. அப்போது அதன் இறக்கையில் ஒன்று, இரண்டாகக் கிழிந்துவிட்டது. வலியால் துடித்த வண்ணத்துப்பூச்சியைக் கண்டு குரங்குக்கு வருத்தமாகிவிட்டது.

"நான் உன்னைத் துன்புறுத்தும் நோக்கத்தில் பிடிக்கவில்லை. உன்னை அருகில் பார்க்க வேண்டும் என்பதற்காக யோசிக்காமல் பிடித்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு" என்று கெஞ்சியது.

"உன்னை மன்னித்தால் கிழிந்த என் இறக்கை மீண்டும் ஒட்டிவிடுமா? இனி நான் வாழ்நாள் முழுவதும் பறக்க முடியாதா? அப்படியென்றால் உணவு சேகரிக்கவும் முடியாது. இனி என் வாழ்க்கை அவ்வளவுதான்" என்று கோபத்தில் படபடத்தது வண்ணத்துப்பூச்சி.

"மன்னிக்க முடியாத செயலை நான் செய்துவிட்டேன். உன்னை மீண்டும் பறக்க வைக்க ஏதாவது செய்கிறேன். அதுவரை இந்தச் செடியிலேயே அமர்ந்திரு. எங்கேயும் போய்விடாதே" என்றது குரங்கு. "என்னால் எங்கே போக முடியும்? இங்கேதான் இருப்பேன்" என்றது வண்ணத்துப்பூச்சி.

ரீங்காரக் குரல் எழுப்பியபடி வந்துகொண்டிருந்த ஒரு தேனீயைப் பார்த்தது குரங்கு.

"தேனீ, எனக்கு ஒரு உதவி வேண்டும். சிறிது நேரத்துக்கு உன்னுடைய தேன் உறிஞ்சும் ஊசியை எனக்குக் கொடுக்க முடியுமா?"

"உன்னிடம் கொடுத்துவிட்டு நான் என்ன செய்வது? என்னால் ஒரு நொடி கூட வேலை செய்யாமல் இருக்க முடியாது.

"வண்ணத்துப்பூச்சியின் இறக்கையைத் தைத்த உடனே திருப்பிக் கொடுத்துவிடுவேன். நீ தையல் சிட்டுவிடம் கேள். அதுதான் அழகாகத் தைக்கும்" என்று பறந்தது தேனீ.

வழியில் சிலந்தியைக் கண்டவுடன், நூல் வாங்கிவிட முடிவெடுத்த குரங்கு, தன்னுடைய தேவையைச் சொன்னது.

சிறிது நூலைக் கொடுத்த சிலந்தி, "ஊசிக்கு என்ன செய்வாய்? என்று கேட்டது.

"தையல் சிட்டுவிடம் நூலைக் கொடுத்தால் கிழிந்த இறக்கையைத் தைத்துவிடும் என்று சொன்ன குரங்கு, தீவிரமாகத் தைப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தையல் சிட்டுவிடம் வந்தது. தனக்கு உதவும்படிக் கேட்டது.

"நான் இலைகளைத்தான் தைப்பேன். வண்ணத்துப்பூச்சியின் இறக்கையோ மிகவும் மென்மையானது. நான் தைத்தால் இன்னும் மோசமாகக் கிழிந்துவிடலாம். ஒரு செயலைச் செய்துவிட்டு வருந்துவதற்குப் பதில், அந்தச் செயலைச் செய்யாமல் இருப்பதே நல்லது என்று அறிவுரையும் வழங்கிவிட்டு, தைக்க ஆரம்பித்தது தையல் சிட்டு.

குரங்குக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வருத்தத்துடன் அப்படியே உட்கார்ந்துவிட்டது. வீடு கட்டுவதற்காக மரத்தைக் கொத்திக்கொண்டிருந்த ஒரு மரங்கொத்தி, திரும்பிப் பார்த்தது. விஷயம் என்னவென்று கேட்டுத் தெரிந்து கொண்டது.

வடக்குப் பக்கம் இருக்கும் ஒரு கருவேல மரத்தில் பிசின் வடிந்துகொண்டிருக்கிறது. நீ அந்தப் பிசினை எடுத்து கிழிந்த இறக்கையை ஒட்டிவிடு. தைக்கும் யோசனையை விட ஒட்டும் யோசனை நல்ல பலனை அளிக்கும். வண்ணத்துப்பூச்சியும் பழையபடி பறக்க ஆரம்பிக்கும் என்றது மரங்கொத்தி.

"நன்றி மரங்கொத்தி. ஆனால் இந்த இருளில் நான் எப்படிக் கருவேல மரத்தைக் கண்டுபிடிப்பேன்?"

"மின்மினிகளே இந்தக் குரங்கண்ணாவுக்கு உங்கள் உதவி தேவை. கொஞ்சம் வெளிச்சம் கொடுத்துவிட்டு வாருங்கள்" என்றதும் மின்மினிகள் மகிழ்ச்சியோடு கிளம்பின.

பிசினை எடுத்துக்கொண்டு, வண்ணத்துப்பூச்சி இருந்த செடிக்கு வந்தது குரங்கு. கிழிந்த இறகுகளைச் சேர்த்துப் பசையால் தடவியது. சிறிது நேரத்தில் பசை காய்ந்து, இறகு பழையபடி ஒட்டிக்கொண்டது.

வண்ணத்துப்பூச்சி மெதுவாக இறக்கையை அசைத்துப் பார்த்தது. பிறகு வேகமாக அடித்துப் பார்த்தது. சட்டென்று ஒரு சுற்றுச் சுற்றி வந்து உட்கார்ந்தது. குரங்குக்கு நிம்மதியாக இருந்தது.

"வெளிச்சம் கொடுத்த மின்மினிகளுக்கும், இந்த யோசனை வழங்கிய மரங்கொத்திக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வலியில் உன்னைத் திட்டிவிட்டேன். என்னைத் துன்புறுத்தும் நோக்கம் இன்றி, விபத்தாக நடந்த இந்த நிகழ்வை நினைத்து நீ வருந்தவேண்டாம். உன்னுடைய அன்புக்கும் உதவி செய்யும் எண்ணத்துக்கும் நன்றி. என்னைத் தேடுவார்கள். நான் வருகிறேன்" என்று வேகமாகப் பறந்து சென்றது வண்ணத்துப்பூச்சி.



# மழை நாள்

- சடுதியாக வானம் இருண்டு கறுத்தது
- கருமேகங்கள் சூழன்றுவானை தூணை மூடிமறைத்தன மின்னல் வெட்டி அடித்தது.
- இடியிடித்து காது அதிரும் படி முழங்கியது
- கடும் வறட்சியின் பின் பெருமழை பெய்தது
- வறண்டகீலம் மழை நீரை உறிஞ்சிக் குடித்தது
- வாடிய பயர்கள் சிலித்து நிமிர்ந்தன
- பசுக்கள் தலைகளை கவிழ்த்து நிக்கிறன.
- எருமைகள் ஆனந்தமாக மழையில் நனைந்து மகிழ்ந்தன
- சிறு மழைத்துளிகள் சேர்ந்து பெரு மழையாக பெய்தது.
- நிலத்தில் அருவிகள் போன்று வெள்ளம் பாய்ந்தது.
- கூரைகளில் வழிந்த மழை நீர் வீட்டைச் சுற்றி ஓடியது
- ஊருக்குள் பாய்ந்த பெரு வெள்ளம் குளங்களைச் சென்று நிரம்பியது.
- குளங்கள் நிறைந்து நீர் கடலைச் சென்றடைந்தது.
- சிறுவர்கள் கடதாசியில் கப்பல் செய்து நீரில் மிதக்கவிட்டனர்.
- நனைந்த கோழிகள் ஒதுக்கிடம் தேடின
- ஆடுகள் பட்டிகளில் ஒதுங்கின.
- மழையே சேர்ந்து புயல் காற்றும் சூழ்ந்தடிக்க ஆரம்பித்தது
- ஊரெல்லாம் வீதியெங்கும் வெள்ளம்
- போக்குவரத்துக்கள் தடைப்பட்டன
- இதனால் எமது பாடசாலைக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டது.
- சிறு பிள்ளைகள் ஆகிய எமக்கும் வீட்டில் உரே கொண்டாட்டம் , மகிழ்ச்சி





## நான் கண்ட வயற் காட்சி

- நானும் குமாரும் வயல் வரம்புகளில் நடந்து சென்றோம்.
- இருபுறமும் நெற்பயிர்கள் பச்சைப் பசேலென காட்சி தந்தன
- உயரமான வரம்புகளைத் தழுவிய வண்ணம் வெள்ளம் நின்றது.
- வயலில் சிலர் வரிசையாக நின்று நாற்று நட்டுக் கொண்டிருந்தனர்.
- சிலர் வயல்களில் பெண்கள் களை பிடுங்கிக் கொண்டிருந்தனர்.
- வயல் வெளிகளில் வெள்ளை வெளேரென கொக்குகள் கூட்டம் இரை தேடிப் பறந்தன.
- கிளிகளும் மைனாக்களும் ஆங்காங்கே அழகாக பறந்து திரிந்தன.
- எல்லா வயல்களிலும் விவசாயிகள் சுறுசுறுப்புடன் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.
- வயல் காட்சி ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

## படிப்பது எதற்காக?

நண்பர் ஒருவர் ஆபிரகாம் லிங்கனிடம் "படிப்பதால் பணம் கொட்டப் போவதில்லை. பின் ஏன் நீங்கள் எப்போதும் எதையாவது படித்துக் கொண்டே இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு லிங்கன் "நான் பணம் சேர்ப்பதற்காகப் படிக்கவில்லை. பணம் வரும்போது எப்படிப் பண்போடு வாழ வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவே படித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்







## எண்ணங்கள்

செயல்களின் வடிவம் சிந்தனைகளில் இருந்து ஆரம்பிக்கின்றது. இந்தச் செயல்களிருந்து "நீ யார்?" என்பது மற்றவர்களுக்குத் தெளிவாகிறது. அதாவது "நான் யார்?" என்பது அவரவரின் செயல்களிலிருந்து வரையறுக்கப்படுகிறது.

இந்தச் செயல்களுக்கு எண்ணங்கள் அல்லது சிந்தனைகள், காலம், நாள்,நேரம் என்பன அடிப்படைக் காரணங்களாக உள்ளது.

அதே நேரத்தில் ஒவ்வொருவரின் எண்ணங்களும் சிந்தனைகளும் ஒரு போதும் ஒத்ததாக (சமமாக) இருப்பதில்லை.

## அரசாங்க அறிவித்தல்

### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
### "ஒப்பந்தகாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2019" தொடர்பான அறிவித்தல்

28.11.2018 மற்றும் 22.12.2018 ஆம் திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட **2019ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தகாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்** சம்பந்தமான அறிவித்தலில் தெரிவிக்கப்பட்ட பதிவிற்கான இறுதித் திகதி 31.01.2019ஆம் திகதி வரை காலநீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

நா.வேதநாயகன்,
மாவட்ட செயலாளர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

## கடை வாடகைக்குண்டு

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் Fresh Juse கடை பொருள்களுடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு:

**076 970 9197**

## ஒத்து மாறல்

வவுனியா மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில் ஆங்கில பாட ஆசிரியராக கடமையாற்றும் ஒருவர் யாழ்ப்பாண நகரப்பகுதியில்/மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றுக்கு ஒத்துமாற விரும்புகின்றார்.

**தொடர்பு - 077 500 0236**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கண்ணகைப்பிள்ளை (தங்கக்கா) துரையப்பா

*(முன்னாள் முறைசாராக் கல்வி தையல் ஆசிரியை - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)*



தோற்றம் 03.08.1928 மறைவு 13.01.2019

யாழ். சாவகச்சேரி நுணாவில் சந்தியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் ஜெனீவாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணகைப்பிள்ளை துரையப்பா கடந்த (13.01.2019) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரையப்பா அவர்களின் அன்புத் துணைவியும் காலஞ்சென்ற மயிலுப்பிள்ளை, தம்பையா, காலஞ்சென்ற பரராஜசிங்கம், கருணாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தங்கம்மா, சத்தியபாமா, இராஜயோகவதி, காலஞ்சென்ற சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் றஞ்ஜினிதேவி, சிவாஜினி, மனோகரன், பாஸ்கரன் ஆகியோரின் அன்பு பெரியமாமியும் காலஞ்சென்ற றஞ்சிதமலர், பிறேமாவதி, காலஞ்சென்றவர்களான ஹேமலதா, ஹரிதாஸ், யசோதரன், முரளிதரன், கோமதி, வசந்தினி, சுகந்தினி, ராஜினி, டர்மபாலன் ஆகியோரின் பெரிய அத்தையும் ஷிராந்தி, ஹிராந்தி, சிவசங்கர் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை ஜெனீவாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**14/9, பொலிஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி.**

தகவல்
**திருமதி றஞ்ஜினிதேவி கிருஷ்ணானந்தலிங்கம்
(மருமகள்) (0767697916)
கருணாவதி (சகோதரி) சுவிஸ் (+41223218256)**

## மரண அறிவித்தல்கள்

### செல்வராஜா யோகரட்ணம்



**தோற்றம் 10.12.1935 மறைவு 16.01.2019**

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா யோகரட்ணம் நேற்று (16.01.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராஜா - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், கொடிகாமத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சீவரத்தினத்தின் (தங்கா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், இராஜேஸ்வரி மற்றும் கணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராமேஸ்வரனின் அன்புத் தந்தையும், மஞ்சுளாவின் அன்பு மாமனும், ஐங்கரன், காலஞ்சென்ற கௌதமன் மற்றும் அபிராமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை தம்பனைப்பனை, துன்னாலை வடக்கு, கரவெட்டி இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு முற்பகல் 10.00 மணிளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தம்பனைப்பனை,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.**

தகவல்
**இராமேஸ்வரன் (மகன்)**

**021 226 1364** (ac 907) (13.17)

பிறப்பு 15 . 06 . 1940



இறப்பு 13 . 01 . 2019

### திருமதி இராசம்மா கந்தசாமி

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கந்தசாமி 13.01.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் கந்தசாமியின் அன்பு மனைவியும், நாகேஸ்வரா (கனடா), நாகசோதி (இலங்கை), விக்னேஸ்வரன் (கனடா), பாஸ்கரன் (கனடா), அதிசயராசா (லண்டன்), றோமியா (பிரான்ஸ்), சுரேந்திரராஜ் (லண்டன்), கஜேந்திரராஜ் (பிரான்ஸ்), மன்மதராஜ் (பிரான்ஸ்), மோகன்ராஜ் (பிரான்ஸ்), நிக்ஷன்ராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, நல்லையா, செல்லம்மா மற்றும் மணியம்மா, சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவராசா (இலங்கை), உதயகுமார் (உதயன் - பிரான்ஸ்), றெஜினா (கனடா), சறோயினி, (கனடா), உமா (கனடா), ஜெலித்தா (லண்டன்), பிறேமினி (லண்டன்), கல்பனா (பிரான்ஸ்), சுபாசினி (பிரான்ஸ்), தர்சிகா (பிரான்ஸ்), சுபோதினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், அனோஜன், அமிஷா, ஜெனிக்கா, சுரேக்கா, சுலோஜினி, நிறோஜினி, லக்ஸ்சாயினி, லக்ஷன்ராஜ், பிரசாந்தினி, பிரவீன், பிரவீனா, பிரணவன், பிரணவி, பிரேஷத், கஜன், கஜானி, மிதுரா, பிறின்சி, ஷாம், இமானுவல், எமெல்டா, நிருசன், நிதுசியா, நிஷானி, நிதேஷ், டனீஸ், மாதேஷ், விமல்டன், அஸ்வின், கஸ்மிதா, பிறின்சிகா, டெல்சிகா, ரிஷிகா, சயினா, கிருத்திகா, பவித்திரன், கிளாரியஸ், கிளாறோன்ஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அக்ஷணா, அமிக்ஷணா, றுக்ஷிகா, றொஷாத் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார் மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஸ்ரீலங்கா லேன்,
உடுவில் வடக்கு, சுன்னாகம்.** (Cs. 22607) (13.17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

பிறப்பு 26 . 10 . 1938



இறப்பு 11 . 01 . 2019

### திருமதி நவரஞ்சிதமலர் (மனோன்) இராமச்சந்திரன்

*(ஓய்வுநிலை ஆசிரியர்)*

யாழ்ப்பாணம் ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வவுனியா கந்தசாமி கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரஞ்சிதமலர் (மனோன்) இராமச்சந்திரன் கடந்த (11.01.2019) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராமச்சந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சக்திதாஸ், ரகுதாஸ் மற்றும் ரஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஆனந்தகுமாரியின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான ஜெயலட்சுமி, இரத்தினசிங்கம் மற்றும் வீரசிங்கம் (ஜேர்மனி), இராஜம்பாள் (ஆஸ்திரேலியா), குலசிங்கம் (Engineer - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சேனாதிராசா, காலஞ்சென்ற Dr.தில்லைநடேசன் மற்றும் அன்னலட்சுமி (தாதிய உத்தியோகத்தர்), தனநாயகி, ரூபி (Engineer) மகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மோகன் (Accountant), மேகலா (Accountant), Dr. தர்சா, விக்கிசா (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புச் சித்தியும் நிமால் (Accountant), அனுபா (Accountant), வினோ (Accountant), தர்மேந்திரா, வினோத் (மருத்துவபீட மாணவன்), Dr.துவாரகா, பிரவீனா (Accountant), இரஞ்சிதமலர், Dr. இராமதாஸ், விஜயதாஸ் (முன்னாள் செயலாளர் - வ/வெங்கலச் செட்டிகுளம்), சுசீலா, பாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும் யாழினியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (20.01.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
**குடும்பத்தினர்.**

**024 222 1159** (CS 4561517)



யாழ்/ புன்னாலைக்கட்டுவன் வடக்கு கடவைத்தறை

# அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி

## அம்பாள் ஆலய விளம்பி வருட மணவாளக் கோல

# சங்காபிஷேக விஞ்ஞாபனம்

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்கலகரமான **விளம்பி வருஷ (18.01.2019) வெள்ளிக்கிழமை தை மாதம் 4 ஆம் நாள் ரோகினி நட்சத்திரம் கூடிய சுபநன்நாளில் அம்பிகைக்கு (1008)** நவோத்திர சஹஸ்ர சங்காபிஷேகமும் ஏனைய **பரிவாரமூர்த்திகளுக்கு நவகல அபிஷேகம்** நடைபெற திருவருள் கைகூடியது அத்தருணம் அடியார்கள் யாவரும் வருகை தந்து அம்பிகையின் திருவருள் பெறுவீர்களாக!

## கிரியா கால விவரம்


- **இன்று (17.01.2019) வியாழக்கிழமை மாலை (சாந்திக்கிரியைகள் ஆரம்பம்) (சங்கு ஸ்தாபனம், கும்பஸ்தாபனம்)**
- **நாளை (18.01.2019) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு விநாயக வழிபாடு ஆரம்பமாகி யாககும்பாபூஜை, சங்கு பூஜை, திரவியாபிஷேகம் தொடர்ந்து கும்பவீதி பிரதட்சணம் சங்காபிஷேகம் பூஜை வழிபாடு தொடர்ந்து மதிய அன்னதானம் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.**
- **மாலை 5.00 மணிமுதல் மூலஸ்தான பூஜை தொடர்ந்து வசந்தமண்டப பூஜை,நவசக்தி அர்ச்சனை, திரு ஊஞ்சல் என்பன இடம்பெற்று, அம்பிகை உள்வீதி வெளிவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.**

சங்காபிஷேக பிரதமகுரு : **சிவஸ்ரீ ந. சபாரத்தினக்குருக்கள்** தேவஸ்தான பரம்பரைக்குரு

## விழா உபயகாரர்கள் - திருப்பணியாளர்கள்

(mp.102) (13.17)

BOC Travels
SUBSIDIARY OF BANK OF CEYLON




## எமது சேவைகள்...

- மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
- மலேசிய, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
- சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்.
- உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்.
- சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.

இவை அனைத்தையும் **BOC TRAVELS**

இது ஓர் இலங்கை வங்கியின் துணை நிறுவனம்

## தென்னிந்திய திருத்தல யாத்திரை



- குறைந்தது 04 பேர் கொண்ட குழுமுதல்
- தங்குமிட, உணவு வசதி (10 நாட்கள்)
- விசா பயணச்சீட்டு ஒழுங்குகள்
- அனைத்து போக்குவரத்து ஒழுங்குகள்

**(யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம் உட்பட)**

**பிரயாண திகதி பங்குனி மாதம் 15ஆம் திகதி**

நம்பகரம், பாதுகாப்பு, உத்தரவாதம்
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)





**தொடர்புகளுக்கு:- இலங்கை வங்கி, (மேற்தரக் கிளை)**
**1st மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 4575 - 76 / 070 384 9335/ 070 395 1794**

**இல. 197/198/200, கண்டி வீதி, வவுனியா.**
**024 2228683**
**070 2144951**


10th EDITION
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
Jaffna International Trade Fair
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்
www.jitf.lk
jitf.lk
JITF 2019
25 26 27 ஜனவரி January
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Ground - Jaffna
PLATINUM SPONSOR INSEE CEMENT
GOLD SPONSOR Browns A Heritage of Trust
ORGANIZED BY LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH CCIY UNITY IS STRENGTH
OFFICIAL PARTNERS
HEALTH CARE FOOD BANKING TELECOMMUNICATION FERTILITY CARE
ROOFING iROOF ONLINE MEDIA PRINT MEDIA
SUPPORTED BY
ENDORSED BY
More information: RIZWAN +773 959 835 | rizwan@saexhibitions.com

LOLC ரன் சவி
தங்கக்கடன்களை பெற்றுக்கொள்ளும் போது
நிம்மதியும் வெகுமதியும்

LOLC ரன்சவி தங்கக்கடனை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு வேளையும் கேப், குடை, ஆபரணப் பை மற்றும் மேலும் பல பரிசுப்பொருட்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
இலங்கையில் முதன்முறையாக தங்கக்கடனுக்கான ஆயுட் காப்புறுதி
எதிர்பாராத அசம்பாவித சூழ்நிலையின் போது கடன் தள்ளுபடி செய்யப்பட்டு
தங்கப் பொருளை மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.
தொலைபேசி - 0115 880 400
LOLC பினான்ஸ்

## மரண அறிவித்தல்

மண்ணில் 01 . 09 . 2006



விண்ணில் 16 . 01 . 2019

# பாலச்சந்திரன் சுஜன்

நந்தாவிலடி, தாவடி கிழக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் சுஜன் நேற்று (16.01.2019) புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் பாலச்சந்திரன் (பாலா) - நாகபூசணி (குமுதா) தம்பதிகளின் அன்பு மகனும் திபுசாவின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - பாக்கியம், காலஞ்சென்ற முருகையா மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

# திருமதி சரஸ்வதி ஐயாத்துரை



தோற்றம் 05.03.1936 . மறைவு 15.01.2019

வேலணையைப் பிறப்பிடமாகவும் அத்தியடியை வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி ஐயாத்துரை கடந்த (15.01.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆசைமுத்து தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஐயாத்துரையின் பாசமிகு மனைவியும் புஸ்பலதா, வசந்தகுமார், உதயகுமார், சிவகுமார் (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் கோமதி, உஷா, ஜெயாஈஸ்வரி (துபாற்திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சோபிகா, பிரவிந்தன், அஸ்விந்தன்., யஸ்வினி, அனோஷ், உதயங்கா, உதயவேணுகா, அச்சயன், அபிநயா, சஞ்ஜய், ஐங்கரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பரமேஸ்வரி, இராசமணி, பூமணி, மனோன்மணி, காலஞ்சென்ற தவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சின்னராசா, செல்லத்துரை, பொன்னம்மா மற்றும் பாலசிங்கம், கனகம்மா, இராசையா, சின்னத்துரை, கந்தசாமி, ராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
077 465 9570

தகவல்:
சிவகுமார் (மகன்)

# அரசதலைவர் தேர்தல் தொடர்பில் சங்கக்காரவுடன் பேசவே இல்லை!

## ராஜித தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 17
அரச தலைவருக்கான தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குமாறு இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சங்கக்காரவுடன் பேசவில்லை என்று தெரிவித்தார் சுகாதார அமைச்சர் ராஜித.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளராக சங்கக்கார களமிறங்க வாய்ப்புள்ளது என்று ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டிருந்தன. இதனை சங்கக்கார ஏற்கனவே மறுத்திருந்தார். எனினும், சுகாதார அமைச்சர் ராஜித மற்றும் சங்கக்காரவுக்கு இடையில் மிக அண்மையில் உரையாடலொன்று நடைபெற்றது. இந்த உரையாடலின்போது வேட்பாளராக சங்கக்காரவைக் களமிறங்குமாறு ராஜித கேட்டார் என்று செய்திகள் வெளிவந்திருந்தன. இவற்றை கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து மறுத்தார் ராஜித.

சங்கக்காரவிடம் அரசதலைவர் வேட்பாளராக களமிறங்குமாறு நான் கேட்கவில்லை. அது பொய். பொய்யான ஒரு தகவலை யாரோ உங்களுக்குக் கூறியுள்ளார்கள்.

சங்கக்கார என்னுடன் 10 நிமிடங்களளே பேசியிருப்பார். அதுவும் சுகாதார சேவைகளின் விரிவாக்கம் தொடர்பாகவே பேசினார். இதற்கு அரசியல் தீர்மானம் எடுக்கவேண்டும். அமைச்சரவைத்தீர்மானம்எடுக்கவேண்டும். இது தேர்தல் வருடம் என்பதால் தீர்க்கமான எந்தவொரு முடிவினையும் நாம் எடுக்கமாட் டோம் என்று நான் கூறினேன். எனவே, புதிதாக அமையும் அரசில் பேசி அதனை செயற்படுத்துவோம் என்றும் சொன்னேன். இதன்போது அரசதலைவர் தேர்தல், வேட்பாளர் குறித்து பேசவில்லை. அப்படிப் பேசுவதற்கு எனக்கோ, சங்கக்காரவுக்கோ தலையில் கோளாறு ஏதும் இல்லை. சங்கக்கார கிரிக்கட் விளையர்டுபவர். நாட்டின் அரசதலைவராக அவர் நினைக்க வில்லை. அரச தலைவருக்கான தேர்தலுக்காக கிரிக்கட் வீரர்களுடன் கதைப்பது பொருத்தமாக இருக்காது. தேர்தலுக்குத் தயாராக இருப்பவர்களுடன் தான் பேசவேண்டும் என்று ராஜித மேலும் தெரிவித்தார். (ம)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ 39 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. சொந்தமாக தொழில் புரிகிறார். சீதனம் பெரிதும் எதிர்பார்க்கப்பட மாட்டாது.

தொடர்பு - 077 905 8615 (வைபர்)

(CS 22614/15/17)

**8ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



பிறப்பு 01 . 04 . 1951

இறப்பு 15 . 01 . 2011

**அமரர் நடராசா இரங்கநாதன்**

திதி: தைமாத பூர்வபக்க ஏகாதசி

குடும்பகுல விளக்காய் விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டுகள் எட்டு சென்றாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
என்றென்றும் உங்கள்
அன்பு நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்

அன்பு மனைவி இ.சாரதாதேவி

29/21, உடையார் ஒழுங்கை, ஐயனார் கோயிலடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

(CS 22477)(14.17)

**வேலை வாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- சமையல் உதவியாளர்கள் - Kitchen helper
- இறைச்சி மற்றும் மீன் வெட்டுபவர் - Butcher
- பூந்தோட்ட பராமரிப்பாளர் - Gardener

தங்களது சுய விபரக்கோவையை 20.01.2019 இற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு/ மின்னஞ்சலிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

info@tilkohotels.com
Tilko Jaffna City Hotel
70/6, K.K.S Road, Jaffna

தொடர்பு
077 769 6443
077 762 8320

**மரண அறிவித்தல்**

**செல்லப்பா தம்பிராசா**



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தம்பிராசா நேற்று (16.01.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நாகம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - பூர்ணம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் இராசமலரின் அன்புக்கணவரும் விஜயானந்தன், விஜயகுமாரி, விஜயலட்சுமி, விஜயபவானி காலம் சென்ற விஜயராகினி மற்றும் விஜயபாரதி, விஜயமேகலா ,விஜயவதனா, விஜயசேகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் வசந்தாதேவி காலஞ்சென்றவர்களான பாலதேவன், நவரட்ணம் மற்றும் லோகேஸ்வரன், பத்மநாதன், லோகேஸ்வரன், பிரபாகரன், ஜெயந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற விஜயசுதன் மற்றும் லக்ஷிகா, கேதுஜன், சாருமதி, தர்ஷிகா,பிருந்தா, டினோசிகா , மிதுரா, ராகுல், மதுஜன், மாதங்கி, கோபிகா, அபிரா, ஆரபி, அக்ஷயா, கிஷானி, கவினி, வேனிலா, ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் நாவற்குழி பிண முருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 844 9415

# இலங்கை - பிலிப்பைன்ஸ் இடையே ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்து



மணிலா, ஜன. 17
இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையே ஐந்து முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன என்று இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐந்து நாள்கள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு பிலிப்பைன்ஸ் சென்றுள்ளார். அந்த நாட்டின் தலைநகர் மணிலாவில் பிலிப்பைன்ஸ் அதிபர் டொற்ரிக்கோ டுடேர்தேயை அவர் நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது பொருளாதாரம், கல்வி, விவசாயம் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளிலேயே இந்த ஐந்து ஒப்பந்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

பிலிப்பைன்ஸ் அதிபர் டுடேர்தே பன்னாட்டு அரங்கில் சர்ச்சைக்குரிய ஒரு நபராகக் காணப்படுகின்றார். போதைப் பொருள் கடத்தல் காரர்கள் அவரது ஆட்சியின் கீழ் கண்மூடித் தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டு வருகின்றனர். இந்த விடயத்தைக் கண்டித்த அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமாவை 'பெட்டை நாயின் மகன்', 'விபச்சாரியின் மகன்' என்று டுடேர்தே வசைபாடியிருந்தார். அதேபோல் ஐ.நா. சபையின் உயர் அதிகாரிகளில் ஒருவராக இருந்த சயிட் அல் ஹுசைன், கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் ஆகியோருக்கு எதிராகவும் டுடேர்தே காட்டுத்தனமாக விமர்சனங்களை முன்வைத்தார். இதனால் பன்னாட்டு அரங்கில் இருந்து பிலிப்பைன்ஸை தனிமைப்படுத்தும் முயற்சியில் சில நாடுகள் ஈடுபட்டன. இத்தகையதொரு பின்னணியில் பிலிப்பைன்ஸ் அதிபரை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்: 3136 திகதி: 2019.01.16 புதன்கிழமை

03 | 19 | 53 | 54 | P | 50 | 59,657,055/-

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 497 இன்றைய ஜக்பொட் பரிசு
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.01.16
ரூ. 53,863,980/-

வெற்றி இலக்கங்கள்: 12 13 62 74 O

**ராசி அதிர்ஷ்டம்**

திகதி: 16.01.2019 | வெற்றி வாரம்: 2436 | வர்ணம்: பச்சை

விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 23 29 54 55
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 46, 58, 720 /=

2019.01.17 ம் திகதி வியாழக் கிழமை மண்ணிறம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**සංවර්ධන වාසනාව**
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 213
சீட்டிழுப்பு திகதி 16.01.2019 நீலம்

ஆங்கில எழுத்து: R
வெற்றி இலக்கங்கள்: 12 24 63
விதி எண்: 06

எதிர்வரும் சனிக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11, 383 572 /=

2019.01.19 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## மொழியுரிமையை கொடுத்திருந்தால் போர் வெடித்திருக்காது

அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 17 1956ஆம் ஆண்டு தமிழ் மக்கள் கேட்ட மொழியுரிமையை வழங்கியிருந்தால் நாட்டில் போர் ஏற்பட்டிருக்காது என்று தெரிவித்தார் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல. கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வரலாற்றில் இரண்டு சந்தர்ப்பங்களில் அரசமைப்புத் தயாரிக்கப்பட்டுள்ளன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வடக்குக் கட்சிகள் அதில் கலந்து கொள்ளவில்லை. சுதந்திரம் கிடைத்த பின்னர், 60 வருட காலத்தில் அரசமைப்பை வகுப்பதில் தமிழ்க் கட்சிகள் கலந்து கொள்ளாமை பெரிய பிரச்சினையாகும். இருப்பினும், தற்போது நிலமை மாற்றமடைந்துள்ளது. தற்போது நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பு புதிய அரசமைப்புக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது சாதகமான நிலமை யாகும். தாமதமாகியேனும், அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளும் அரசமைப்புத் தயாரிக்கப்படும். பௌத்த மதத்தைப் பாதுகாத்து அதற்கு முக்கிய இடத்தை வழங்கி புதிய அரசமைப்புத் தயாரிக்கப்படும் - என்றார். (ம)

---

## பெற்றோர் மகனை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்



பெயர்:
**சி.மாரிமுத்து**
தந்தையின் பெயர்:
**சிதம்பரம்**
பிறந்த இடம்:
**இந்தியா**

ஊர்: மேடயக் கொல்லை ஓரத்தநாடு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.

மனைவியின்பெயர் : **குணம்மேரி**

சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு லெபனான் நாட்டிற்கு தொழில் நிமிர்த்தம் சென்றவர் இலங்கையைச் சேர்ந்த குணம்மேரியை திருமணம் செய்து இலங்கைக்கு வந்துவிட்டார். இவரை பார்க்க தந்தை, தாய் இருவரும் ஆவலாக உள்ளனர்.

இலங்கை நம்பர் - 077 543 9550
இந்தியா நம்பர் - 009 197 8779 7833

தகவல்:
சகோதரன் சந்திரன்

(cs.22611)

---

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 . 05 . 1946



மறைவு 17 . 01 . 2011

**அமரர் இராசா முருகையா**

எட்டு ஆண்டுகள் கடந்தாலும் என்றும்
எம் இதயத்தில் வாழும் அப்பாவுக்கு எமது அஞ்சலிகள்.

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.


பிரிவால் வாடும்
மனைவி, மக்கள் மருமக்கள்,
பேரன், பேர்த்திகள்.

(CS/22437)(11,17)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 10 . 05 . 1934



மறைவு 18 . 12 . 2018

முன்னைநாள் கிராமசபைத் தலைவர்

**இராமலிங்கம் செல்லையா**

கடந்த 18.12.2018 சிவபதப்பேறடைந்த எமது குடும்பத் தலைவர் முன்னைநாள் கிராமசபைத் தலைவர் இராமலிங்கம் செல்லையா அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் வருகைதந்து மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி

குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவதாஸ் சர்வேஸ்வரி (வேவி)



சித்தங்கேணியைப்பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடியை வாழ்விடமாகவும் சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட நாதஸ்வர வித்துவான் சிவதாஸ் அவர்களின் மனைவி சர்வேஸ்வரி (வேவி) நேற்று (16.01.2019) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற கணேசபிள்ளை நாகரத்தினம் அவர்களின் மூத்த மருமகளும் கமலேஸ்வரி, நர்ராசசுந்தரம்(கனடா), செல்வராசா (தில்லை), சுதாகரன் (சுதா-கனடா), ஜெயலட்சுமி (ஜெயா-கனடா), சுதர்சன் (தாஸ் - கொழும்பு), ஆகியோரின் அன்புச்சகோதரியும் பாலச்சந்திரிகா (சுவர்ணா), ரவிச்சந்திரிகா (கௌரி-கனடா), பிரபாகரன்(பிரபா), பாலசிந்துஜா (சிந்து), பிரசாத், பிரசாந்தி (சாந்தி), ஆகியோரின் அன்புத்தாயாரும் கிருஷன், மாதங்கி , வேந்துஷன், பாதுஷன், துஸ்யந்தன், பிரணவன், இசானா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 3.00 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர் (பிரபா,பிரசாத்)

---

## திருமதி அஜந்தி குணராசா

நாவற்காடு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அஜந்தி குணராசா நேற்று (16.01.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.



தோற்றம் 09.10.1979 | மறைவு 16.01.2019

அன்னார் தம்பிராசா - புஸ்பமலரின் பாசமிகு மகளும் கந்தப்பு குணராசா (கட்டட ஒப்பந்தகாரர்) இன் அன்பு மனைவியும் பவிசா (மாணவி - யா/ அச்சுவேலி புனித திரேசா கல்லூரி), அஜித்தனா (மாணவி - யா/ அச்சுவேலி ஆரம்பபாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் நவநீதன், ஜெயந்தி, சுகந்தி, துஸ்யந்தி ஆகியோரின் சகோதரியும் கந்தப்பு சரஸ்வதியின் அன்பு மருமகளும் தருமராசா, பாலரஞ்சன், ஜீவகுமார், சேனாதிராசா, சறோஜினி தேவி, லலிதா, செல்வரோஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கந்தப்பு குணராசா
(கட்டட ஒப்பந்தகாரர்) அச்சுவேலி

077 023 1729

---

## நடராசா ஜெகநாதன் (குஞ்சர்)



பிறப்பு 18.02.1963 | இறப்பு 15.01.2019

விழிசிட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் தற்போது அளவெட்டி வடக்கு, அளவெட்டி (தவளக்கிரி முத்துமாரி கோவிலுக்கு அருகில்) தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஜெகநாதன் கடந்த (15.01.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - கனகம்மா தம்பதிகளின், அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராஜலக்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் சாந்தினியின் அன்புக் கணவரும் ஜெகராஜ், லக்சாயினி, நிரோஜன், நிரோஜினி, கஜந்தினி, திவ்வியராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஜனகா, கீர்ந்தன், பாலரஞ்சினி, நிரோசன், பிரதீபன் ஆகியோரின் மாமனாரும் யோகேஸ்வரன், யோகராஜா, ஜெகதீஸ்வரன், சிவநாதன், குகானந்தன், கோகிலவதனி, சந்திரவதனி ஆகியோரின் சகோதரனும் உமாபதி, சிவானந்ததேவி, பூங்குயில், சிவறமணி, மதிவதனி, ஸ்ரீகந்தவாசன், சிவகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் நேர்த்திகன், தரணீஸ், நினுஷன், கம்சபி, கபிசன், ஹஸ்மிதா, புவிதன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற ரஞ்சன் மற்றும் விஜயன், தேவன், வாமதேவன் (வாமன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கொப்பிளாவிடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

076 2211127 (மகன்),
0777 350 458 (சகோதரன்)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22612/15/17)

## இது புதுசு

சிறிய அளவில் புதிய வடிவில் மேசை விளக்குகள் அறிமுகமாகி யுள்ளன. இவை ஆயிரத்து 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## உடலுக்கு குளிர்ச்சியை தரும் தக்காளி



எல்லா இடங்களிலும் எல்லா காலங்களிலும் கிடைக்கும் தக்காளி அதிக நீர்ச்சத்து நிறைந்தது மட்டுமின்றி மிகவும் குளிர்ச்சியானது.

பலர் இதை பச்சையாக சாப்பிட விரும்புவார்கள். மிகவும் மலிவானது அதேசமயம் அதிக சத்தும் நிறைந்தது.

தக்காளியை எந்த விதத்தில் சாப்பிட்டாலும் அதன் சத்துக்கள் அனைத்தும் குறையாமல் நமக்குக் கிடைக்கும். இதன் பயன்கள் சில..
உடல் பருமன் மற்றும் தொப்பையை குறைக்கும்.
உடலுக்கு குளிர்ச்சியைத் தந்து மூலச்சூடு, மலச்சிக் கலை நீக்கும்.
மேனி மற்றும் முகப்பொலிவு தந்து இளமையை கூட்டுவதோடு குருதிச் சோகையை நீக்கும்.
வாயுத் தொல்லையையும் விலக்கும்.

## முதுமையை தடுக்கும் பலாப்பழம்




முக்கனிகளில் ஒன்றான பலாப்பழத்தில் அதிகளவு சத்துக்கள் காணப்படுகின்றது. நார்ச்சத்து அதிகமுள்ளதால் செரிமானத்துக்கு உதவி புரிகின்றது.
விற்றமின் ஏ, பி, சி, கால்சியம் உட்பட பல்வேறு சத்துக்கள்நிறைந்த இப்பழம்முதுமையை தடுக்க வல்லது.
அதாவது, வயது ஆவதால் ஏற்படும் தோல் சுருக்கத்தை தடுக்கிறது.
கார்போஹைட்ரேட், பொட்டாசியம், கால்சியம், புரதச்சத்து ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ள இந்த பழம் புற்று நோய் வராமல் தடுக்கும்.
மேலும் குருதி அழுத்தத்தை குறைத்து இதயநோய் வராமல் காக்கின்றது. பழம்மட்டுமல்லாமல் பலாப் பழத்தில் உள்ள பலா விதைகளும் பல்வேறு நன்மைகள் கொண்டது.

## கல்லீரல் பாதிப்பை உணர்த்தும் அறிகுறிகள்

கல்லீரல் சுமார் 500 விதமான வேலைகளைச் செய்கின்றது. அப்படிப்பட்ட கல்லீரல் சரியாக வேலைசெய்யவில்லைஎன்றால் எத்தனை பாதிப்புகள் ஏற்படும்.
ஆக ஒவ்வொருவரும் கல்லீரலைப் பாதுகாக்க அதிக கவனம்செலுத்தவேண்டும். கீழ்கண்ட அறிகுறிகள்இருந்தால்நாம் கல்லீரலைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும் என்று எடுத்துக் கொள்ளலாம்.

* நீண்ட காலசோர்வு, எப்பொழுதும்மெத்தனமாக இருத்தல்
* தலைவலி, மூட்டுகளின் வலி, தசைகளில் வலி
* அதிக வியர்வை, அஜீரணம், வயிற்றுவலி
* மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு, மனஉளைச்சல்
* வாய் துர்நாற்றம், அதிக எடை இருந்தால் மருத்துவரை அணுகி ஆலோசனைப்பெறவும்.

## மரண அறிவித்தல்



### ஐயாத்துரை அம்பிகைபாகன்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் மண்கும்பானை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை அம்பிகைபாகன் நேற்று (16.01.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகலட்சுமியின் அன்பு. மனைவியும் அருட்குமரன் , அன்பழகன், மைதிலி (ஜேர்மன்), சண்முகப்பிரியன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ருக்குமங்கள் (கனடா), காலஞ்சென்ற சூரசங்காரன், கிருபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுதாகரன் (ஜேர்மன்), திநிஜ்ஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அஸ்வின், அஸ்விகா, யனுசிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மண்கும்பான்,**
**5ஆம் வட்டாரம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# செர்ரி பழம் சாப்பிட்டால் கிடைக்கும் நன்மைகள்

குளிர்ந்தபிரதேசங்களில்அதிகம்விளையும் இந்த "செர்ரி" பழங்களை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் என்ன என்பதை தெரிந்து கொள்ளலாம்.
உடலில் நரம்பு கோளாறுகள் மற்றும் மன அழுத்தம் அதிகம் கொண்டவர்கள் தூக்கமின்மை பிரச்சனையால் பாதிக்கப்படக்கூடும்மேற்கண்டபாதிப்புகள்கொண்டவர்கள் செர்ரி அதிகம் சாப்பிட்டு வருவது நல்லது. செர்ரிபழங்கள்உடலின்நரம்புகளில்ஏற்பட்டிருக்கும் இறுக்கத்தை தளர்த்தி, ஆழ்ந்த தூக்கத்தைதருகிறது. மனஅழுத்தங்களையும் பெருமளவிற்கு குறைக்கிறது.
செர்ரி பழம் நோய் எதிர்ப்பு சக்தியை தரும் திறன்கொண்டது. எத்தகைய ஒருநோயையும்எதிர்த்துநின்று, உடல்நலனைபாதுகாப்பதில் உடலின் ரத்தத்தில் இருக்கும் நோய் பாதுகாப்பதில் சக்தி வலிமையாக இருக்க வேண்டியது அவசியம். உங்களின் நோய் எதிர்ப்பு சக்தி வீரியமிக்கதாக இருக்க தினமும்செர்ரிபழங்களைசாப்பிடுவதால்நோய் எதிர்ப்பு சக்தி மிகும்.
செர்ரி பழங்கள் சாப்பிடும் நபர்களுக்கு தோலில் மினுமினுப்புதன்மை அதிகரித்து இளமை தோற்றத்தை உண்டாக்கும்.
காலை மற்றும் மதிய வேளைகளில் செர்ரி பழங்களை சாப்பிட்டு வந்தால் உடலின் வேளைகளில் இருக்கும் செல் களைப் புத்துணர்ச்சி பெற செய்து, தோளில் பளபளப்புத் தன்மைகொடுத்து, சுருக்கங்கள்ஏற்படாமல் தடுக்கிறது.
செர்ரி பழத்தில் விற்றமின் 'ஈ' சக்தி நிறைந்திருக்கிறது. இந்த விற்ற மின் உட லின் நலத்துக்கும், குறிப்பாக கண்பார்வையின் நலத்துக்குமிகவும்அவசியமாகும். கண்பார்வை மங்குதல், மாலை மிகவும் நோய் போன்றவை ஏற்படுவதை தடுத்து, கண்பார்வை திற னைப் பிரகாசிக்கச் செய்கிறது.
எனவே கண்களின் நலமாக இருக்க விரும்புபவர்கள் செர்ரிபழங்களை அவ்வப்போது சாப்பிட வேண்டும்.
செர்ரி பழத்தில் உணவை செரிமானம் செய்ய கூடிய சத்துகள் அதிகம் உள்ளன. இப்பழங்களைஅதிகம்சாப்பிடுபவர்களுக்கு நீண்ட நாட்களாக இருக்கும் மலச்சிக்கல் பிரச்சனைகள் நீங்கும். குடல்களில் இருக்கும்நோய்களைபோக்கி, குடல்களின்நலன் மற்றும் சீரான இயக்கத்திற்கும் கிவிபழம் பேருதவி புரிகிறது.
பலருக்கும் இந்தக் காலங்களில் தலைமுடி கொட்டுதல், பொடுகு, தலைமுடியில் ஈரப்பதம் இல்லாமை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன். செர்ரிபழங்கள்சாப்பிடுபவர்களுக்கு அதிலிருக்கும் விற்றமின் 'எ" மற்றும் 'ஈ' ஆகியவை தலைமுடி உதிர்வதைத் தடுக்கிறது.
இளநரை, பொடுகு போன்ற பிரச் சினைகளை விரைவில் தீர்ப்பதில் செர்ரி பழம் மிகுந்த ஆற்றல் வாய்ந்த ஒரு இயற்கை உணவாக இருக்கிறது.
உடல் எடை கூடியவர்கள் அதிக எடையை குறைக்க பல வகையான இயற்கை உணவுகளைச் சாப்பிடுவது அவசியம். செர்ரி பழம் உடல் எடை குறைப்பதில் சிறப்பாகச் செயற்படுகிறது. உடல் இருக்கும் சத்துகள் உடலின் அதீதபசியுணர்வைகட்டுப்படுத்தி, உடல் எடையைக் குறைப்பதில் பேருதவி புரிகிறது.
செர்ரிபழம்இயற்கையிலேயேகுருதிஓட்டத்தைத் தூண்டும் ஒரு பழம் ஆகும். எனவே இதைச் சாப்பிடுபவர்களின் உடலில் குருதி ஓட்டத்தைச்சீராக்கும். இதயத்துக்குச்சீரான குருதி ஓட்டத்தைக் கிடைக்க குருதிக் குழாய்களில் குருதி உறைந்து விடாமல் இருக்க செர்ரி பழங்கள் அதிகம் சாப்பிட்டு வருவது சிறந்த வழிமுறையாகும்.







# தெலுங்கில் அறிமுகமாகும் வரலட்சுமி



கதாநாயகியாக நடித்துக் கொண்டிருக்கும் போதே தனது பயணத்தை மாற்றி வில்லி, குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடிக்கத் தொடங்கினார் வரலட்சுமி. இதனால் அவருக்கு வாய்ப்புகளும் அதிகரிக்கத் தொடங்கின.

இவரது நடிப்பில் தற்போது 'வெல்வெட் நகரம்', கன்னிராசி', 'நீயா 2', 'காட்டேரி' ஆகிய படங்கள் உருவாகி வருகிறது.

மேலும் புதிய படங்களில் நடிக்கவும் ஒப்பந்தம் ஆகியிருக்கிறார். இந்த நிலையில், முதல் முறையாக தெலுங்குப் படத்தில் அறிமுகமாக இருக்கிறார்.

சந்தீப் கிஷன், ஹன்சிகா நடிக்க இருக்கும் புதிய படத்தில் வரலட்சுமி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகியிருக்கிறார். நாகேஷ்வர் ரெட்டி இந்தப் படத்தை இயக்குகிறார்.

## twitter

எனக்கொரு டவுட்டு @Thaadikkaran

குழந்தைகளுக்கு பயந்து மறைத்து
வைத்த செல்போனை,
ஒரு போன் கோல் வந்து காட்டி
கொடுத்துவிடுகிறது..!!

சின்னவன்@sinna_twitz

மாடாய் உழைத்தால் எந்த
பிரயோசனம் இல்லை என்பது
மாட்டுப்பொங்கலுக்கு லீவு
கிடைக்காத போது தான் தெரிகிறது.

ஊர்க்காவலன்™@oorkkavalaan

விரிசல் விட்ட
கண்ணாடியும்,மனமும் எப்போதும்
இரண்டு முகங்களை
காட்டக்கூடியது....

mohanram.ko@mohanramko

வயித்துல நெருப்பை
கட்டிக் கொண்டு அலைகிறார்
'அல்சர்' நோயாளி...

கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar

அப்பா என்பவர் கமல் படம் போல,
பார்க்கும் தருணத்தில் புரியாது,
பிடிக்காது!!
காலம் போக போக தான் புரியும்,
அதன் பிறகு தான் பிடிக்கும்!!!

செந்திலின்_கிறுக்கல்கள்

மாணவர்களுக்கு தண்டிக்கிற
வாத்தியார விட தட்டி கொடுக்குற
வாத்தியார்கள் கிடைத்தால்
பள்ளிக்கூடம் சொர்க்கமே!

## சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 2 | 3 | | 6 | | 4 | |
| | 8 | | | | 4 | | 7 | |
| 1 | | 4 | | | | | | 3 |
| | | 1 | | | | | 2 | |
| | 2 | 8 | | | | 4 | 6 | |
| | 5 | | | | | 1 | | |
| 8 | | | | | | 3 | | 4 |
| | 4 | | 7 | | | | 1 | |
| | 3 | | 4 | | 5 | 8 | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 4 | 3 | 7 | 8 | 6 | 1 | 5 |
| 3 | 5 | 8 | 4 | 1 | 6 | 9 | 7 | 2 |
| 7 | 1 | 6 | 9 | 5 | 2 | 3 | 4 | 8 |
| 8 | 4 | 7 | 1 | 2 | 9 | 5 | 3 | 6 |
| 1 | 6 | 2 | 5 | 8 | 3 | 7 | 9 | 4 |
| 9 | 3 | 5 | 6 | 4 | 7 | 8 | 2 | 1 |
| 4 | 8 | 3 | 7 | 6 | 1 | 2 | 5 | 9 |
| 6 | 7 | 1 | 2 | 9 | 5 | 4 | 8 | 3 |
| 5 | 2 | 9 | 8 | 3 | 4 | 1 | 6 | 7 |

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** உண்மை, நேர்மையை மதித்து செயல்படுவீர்கள். சிறிய பணியும் பலமடங்கு நன்மையை பெற்றுத் தரும். உறவினர் வகையில் செலவு ஏற்படலாம்.

**இடபம்:** சொந்த நலனில் அக்கறை கொள்வீர்கள். நற்பெயரை பாதுகாக்க வேண்டும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய முயற்சி பலன் தரும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** சில நன்மை எளிதில் வந்து சேரும். சமூகத்தில் நன்மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** இனிய நிகழ்வுகள் மனதில் உற்சாகம் தரும். எந்த செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும்.

**சிங்கம்:** நண்பரிடம் உதவி கிடைப்பதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற கூடுதல் உழைப்பு அவசியம். செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** கடந்த கால இனிய அனுபவங்களை மனதில் நினைத்து செயல்படுவது நல்லது. சகதொழில் வியாபாரம் சார்ந்த எவரிடமும் சச்சரவு கூடாது.

**துலாம்:** முன்யோசனையுடன் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டு அதிக நன்மையை பெறுவர். தாமதமான காரியம் ஒன்று வளர்ச்சி நிலையை அடையும்.

**விருச்சிகம்:** மனதின் உற்சாகத்தினால் சந்தோஷ முகத்தோற்றம் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற வளர்ச்சி புதிய அனுகூலம் தரும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**தனுசு:** சிலர் உதவாத ஆலோசனை சொல்வர். செயல் குறையை சரிசெய்வதால் வாழ்வியல் நடைமுறை சீராகும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** சிலர் உதவுவது போல பாசாங்கு செய்வர். நம்பிக்கையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க நிதான அணுகுமுறை பின்பற்ற வேண்டும்.

**கும்பம்:** கடந்த காலத்தில் அவமதித்தவர் தன்குறை உணர்ந்து அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** செயல்திறன் கண்டு சிலர் பொறாமைபடுவர். சாத்வீக மனதுடன் செயல்படுவது நல்லது. கூடுதல் உழைப்பினால் தொழில் வியாபாரம் சீராகும்.










குறை சொல்லி, குத்திப் பேசி
நீ குண்டூசியால் குத்தும்போது,
எதிரில் இருப்பவன்
கூர் வாளால் குத்தக் கூடும்.


# ஸ்கந்தா -முன்னிலை

யாழ்ப்பாணம், ஜன. 17
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஸ்கந்தா முன்னிலை பெற்றது.
பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும், 13 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் தொடரில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.
தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி 45.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. டிமல்டன் 11 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் ஸ்கந்தா சார்பில் தர்மிலன் 4 இலக்குகளையும், சீராளன் 3 இலக்குகளையும், கேதுசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 49.4 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்கந்தா சார்பில் டிலக்சன் 33 ஓட்டங்களையும், வசீகரன் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் யூனியன் சார்பில் டான்சன் 3 இலக்குகளையும், கௌசியன் மற்றும் பவித்திரன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
(ஒ.422)

# வெற்றிவாகை சூடியது யாழ். மத்திய கல்லூரி


ஏ.பி.டிலக்சன்


டிலக்சன்


றோம்சன்

யாழ்ப்பாணம், ஜன. 17
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றிவாகை சூடியது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி. யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கால் பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் மின்ஒளியில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. ஆட்டம் ஆரம்பமாகி 15 ஆவது நிமிடத்திலேயே முதலாவது கோல் பதிவானது. சாந்தன் தனது அணிக்காக அதனைப் பெற்றுக் கொடுத்தார். முதல் பாதி ஆட்டம் நிறைவடையும்போது 1:0 என்ற கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முன்னிலை பெற்றது.
இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமானது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கு 16ஆவது நிமிடத்தில் தண்டனை உதை கிடைத்தது. வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திய மத்திய கல்லூரி அணி வீரர் றோம்சன் அதனைக் கோலாகப் பதிவு செய்தார். ஆட்டம் சமநிலை அடைந்தது. அதன் பின்னர் இரு அணிகளும் கோல் அடிப்பதற்கான வாய்ப்புக்களைத் தவறவிட்டனர்.
இருப்பினும் மத்திய கல்லூரி அணி 27 ஆவது நிமிடத்தில் கிடைத்த மற்றொரு வாய்ப்பை கோலாக மாற்றியது. விக்னேஸ் அதனைப் பதிவு செய்தார். 2:1 என்ற கோல் கணக்கின் அடிப்படையில் முன்னிலை பெற்றது மத்திய கல்லூரி. ஆட்டம் நிறைவடைவதற்கு ஒரு நிமிடம் எஞ்சியிருந்த நிலையில், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு தண்டனை உதை கிடைத்தது. அதனைக் கோலாக்குவதற்கு அந்த அணி தவறியது. ஆட்டநேர நிறைவில் 2:1 என்ற கோல் கணக்கில் மத்திய கல்லூரி அணி கிண்ணத்தை வெற்றி கொண்டது.
சிறந்த கோல் காப்பாளராக பற்றிக்ஸ் கல்லூரி வீரர் ஏ.பி.டிலக்சனும், தொடர் ஆட்டநாயகனாக மத்திய கல்லூரி வீரர் டிலக்சனும், ஆட்டநாயகனாக மத்திய கல்லூரி வீரர் றோம்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.
(ஒ.23)

# கைதடி ஐக்கியம் அணி வெற்றி





சாவகச்சேரி, ஜன. 17
சாவகச்சேரி சிவன் அணியை எதிர்த்து விளையாடிய கைதடி ஐக்கியம் அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.
சாவகச்சேரி நகரசபையினர் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 11.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 40 ஓட்டங்களை மாத்திரமே அந்த அணியால் பெற்றுக் கொள்ள முடிந்தது.
41 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கைதடி ஐக்கியம் அணி, 7.4 பந்துப் பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது. அந்த அணி வீரர் டினோஜ் 30 ஓட்டங்களை விளாசினார்.
போட்டியில் முதலிடம் பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 25 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும், இரண்டாமிடம் பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 15 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும், சுற்றுப்போட்டியில் கலந்து கொண்ட அனைத்து அணிகளுக்கும் துடுப்பாட்ட மட்டையும் பந்துகளும் வழங்கப்பட்டன.
(ஒ.9)


# தென்மராட்சி பிரதேச செயலக குழுநிலைப் போட்டி முடிவுகள்

சாவகச்சேரி, ஜன. 17
தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2019 ஆம் ஆண்டுக்கான குழுநிலைப் போட்டிகள் கடந்த 13ஆம் திகதி ஆரம்பமாகின.
கரம் போட்டியில் ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி டிறிபேக் தாரகை முதலிடத்தையும், சிறிவிநாயகர் அணி இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.
பெண்கள் பிரிவில் முதலிடத்தை வெள்ளாம்போக்கட்டி ஒளிர் வி.க. அணியும் இரண்டாமிடத்தை சாவகச்சேரி தென்னகத் தாரகை அணியும் பெற்றுக் கொண்டன.
போட்டிகளில் 26 ஆண்கள் அணிகளும், 12 பெண்கள் அணிகளும் பங்குபற்றியிருந்தன. (ஒ.9)

## மல்யுத்தத்தில் முல்லைத்தீவு சம்பியன்

முல்லைத்தீவு, ஜன. 17
வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாவட்டச் செயலக அணிகளுக்கு இடையிலான மல்யுத்தத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.
கடந்த சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.
முல்லைத்தீவு மாவட்ட செயலகம் 7 தங்கப் பதக்கங்கள், 5 வெள்ளிப் பதக்கங்கள், 4 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 16 பதக்கங்களைக் கைப்பற்றி முதல் தடவையாக சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் 4 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளி பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் உள்பட 9 பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தையும், வவுனியா மாவட்ட செயலகம் 2 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள் உள்பட 7 பதக்கங்களையும் கைப்பற்றியது. (ஒ.422)

# நவாலி சென். பீற்றஸ் கிண்ணம் வென்றது





யாழ்ப்பாணம், ஜன. 17
அராலி பாரதி விளையாட்டுக் கழக அணியை சமநிலை தகர்ப்பு உதை மூலம் வெற்றி கொண்டது. நவாலி சென். பீற்றஸ் விளையாட்டுக் கழகம். அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் விழாவை முன்னிட்டு கால்பந்தாட்டத் தொடரை நடத்தியது. இறுதியாட்டம் பொங்கல் நாளான நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.
ஆட்டத்தின் முதல் பாதியில் கோல் அடிப்பதற்கான வாய்ப்புக்கள் இரு அணிகளுக்கும் கிடைத்தபோதும் அவற்றை வீணடித்தன. இரண்டாம் பாதி ஆட்டமும் அவ்வாறே அமைந்தது. நிர்ணயிக்கப்பட்ட ஆட்டநேர நிறைவில் இரு அணிகளும் கோல் எதனையும் பதிவு செய்யாத நிலையில் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.
வெற்றியைத் தீர்மானிக்க சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. 3:0 என்ற கோல் கணக்கில் நவாலி சென். பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
சிறந்த கோல் காப்பாளராக நவாலி சென். பீற்றஸ் அணி வீரர் றொசாந்தன் தெரிவானார். தொடர் ஆட்ட நாயகனாக நவாலி சென். பீற்றஸ் விளையாட்டுக்கழக வீரர் ஜோன் கீர்த் தெரிவு செய்யப்பட்டார். ஆட்டநாயகனாக அராலி பாரதி விளையாட்டுக்கழக வீரர் டிசாந்தன் தெரிவு செய்யப்பட்டார். (ஒ.23)

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்


சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும். அதிபர் செ. பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபுவும் சிறப்பு விருந்தினராக சிற்பாசிரியர் கி.கலாமோகனும் கலந்து கொள்ளவுள்ளனர்.


❖❖ ❖❖ ❖❖

கைதடி குருசாமி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினர்களாக மத்திய மாகாண ஓய்வுநிலை உதவிச் செயலர் இல.வாசுதேவன், தென்மராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் நிரூபராணி அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஒ.9)





# மதிப்புமிக்க வீரர் டோனி

## கூறுகிறார் கவாஸ்கர்

டோனியை நெருக்கடி இல்லாமல், தனியாக, சுதந்திரமாக விளையாடவிடுங்கள், சிறப்பாகச் செயற்படுவார் என்று முன்னாள் அணித் தலைவர் சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் அடிலெய்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் இந்திய அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நீண்ட காலமாக டோனியின் ஆட்டத்தை முடித்து வைக்கும் திறனை காணமுடியாமல் இருந்த ரசிகர்களுக்கு இந்த ஆட்டம் விருந்தாக அமைந்தது. அரைச்சதம் அடித்த டோனி இறுதியில் ஒரு ஆறு ஓட்டம் அடித்து அணியை எளிதாக வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இது குறித்து கவாஸ்கர் தெரிவித்ததாவது:


டோனி நாளுக்கு நாள் இளைமையாக மாறிக் கொண்டிருக்கவில்லை என்பதை அவரை விமர்சனம் செய்பவர்கள் புரிந்து கொண்டு பொறுமை காக்க வேண்டும்.

பந்துவீச்சாளர் ஒவ்வொரு பந்துவீசும் போதும் டோனி அவரிடம் சென்று துடுப்பாட்ட வீரர் என்ன நினைக்கிறார், எப்படி பந்துவீச வேண்டும் என்பதைப் பற்றி ஆலோசனை கூறுகிறார். துடுப்பாட்ட வீரர் என்ன நினைக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளும் திறன் டோனிக்கு இருக்கிறது. அதனால், பந்துவீச்சாளர்களுக்கு உதவுகிறார், களத்தடுப்பாளர்களையும் சரியான இடத்தில் நிறுத்துகிறார்.

இறுதி நேரத்தில் கோக்லிக்கு பல்வேறு ஆலோசனை வழங்குவதன் மூலம் டோனி அவரின் நெருக்கடியைக் குறைக்கிறார். ஆதலால், டோனியிடம் ஆலோசனை கேட்காமல் கோக்லியால் களத்தடுப்பாளர்களை மாற்றியமைப்பது என்பது இயலாத காரியம். டோனி மீது கோக்லி மிகுந்த நம்பிக்கையும் வைத்திருக்கிறார்.

அனைத்து விடயங்களையும் நாம் மதிப்பிட முடியாது. என்னுடைய வேண்டுகோள், டோனியை தனியாக விடுங்கள், சுதந்திரமாகச் செயற்படவிடுங்கள், அழுத்தம் கொடுக்காதீர்கள் அவர் சிறப்பாக விளையாடுவார். டோனிக்கு இளமை திரும்பவில்லை, அவர் இளைமையாக இருந்தபோது இதுபோன்ற விமர்சனங்கள் இருந்தால் அதை ஏற்கலாம். இப்போது நாம் பொறுமை காக்க வேண்டும். டோனியின் நிலையற்ற தன்மையைப் பார்த்து குறை சொல்லாதீர்கள், பொறுமை காட்டுங்கள், அணிக்கு மிகப்பெரிய மதிப்புமிக்க வீரர் டோனி. உலகக் கிண்ணத்துக்கு முன்பாக டோனி வழமையான ஆட்டத்துக்குத் திரும்பிவிடுவார்- என்றார்.

# வலைப் பயிற்சி தடம் திறப்பு



மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் துடுப்பாட்ட வலைப் பயிற்சித் தடம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.


பாடசாலை பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட பயிற்சித் தடத்தை, பாடசாலை அதிபர் த.அம்பலவாணர் திறந்து வைத்தார்.

இதற்கு முன்னதாக, வீரசிங்கம் மத்திய கல்லூரியின் 73ஆம் ஆண்டு அணியினரால் விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ஒ.160)

## மகளுக்கு கருப்பு பொம்மை கொடுத்த செரீனா வில்லியம்ஸ்

பிரபல ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ். தன்னுடைய ஒரு வயது மகள் ஒலிம்பியாவுக்கு முதன்முதலாக கருப்பு நிறத்தில் பொம்மையைப் பரிசளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது: " நான் வளரும்போது கருப்பு பொம்மைகளை வைத்து விளையாட வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதனால் என் மகளுக்கு அந்த வாய்ப்பை அளித்திருக்கின்றேன். மரபுரீதியாக அவள் கலப்புத்தான். மனிதர்கள் என்ன நிறத்தில் இருந்தாலும் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும் என்பதை அவளுக்குச் சொல்லிக் கொடுப்பதே இதன் நோக்கம்" -என்றார்




# சர்ச்சையின் பின்னர் வீட்டில் முடங்கிய ஹார்திக் பாண்டியா

பெண்கள் தொடர்பான சர்ச்சைக் கருத்துக்களுக்குப் பிறகு ஆஸ்திரேலியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட ஹார்திக் பாண்டியா. கே.எல்.ராகுலுக்கு என்ன அபராதம் என்பதை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை பரிசீலித்து வருகிறது. தற்போது இவர்கள் இருவருக்கும் இடைக்காலத் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஹார்திக் பாண்டியாவின் தந்தை தெரிவிக்கையில்; "ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்பிய பிறகு பாண்டியா வீட்டில்தான் இருக்கிறார், வெளியில் எங்கும் செல்வதில்லை. இந்திய கிரிக்கெட் போட்டிகளை அவர் வீட்டிலிருந்து பார்க்கிறார். எந்த ஒரு அலைபேசி அழைப்புக்களையும் அவர் எடுப்பதில்லை. அவர் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்.

சர்ச்சையால் மிகவும் மனவருத்தத்துடன் இருக்கிறார், நாங்கள் வீட்டில் இது பற்றி எதுவும் விவாதிப்பதில்லை. சகோதரர் குருணால் கூட ஹார்திக்கிடம் இது குறித்து எதுவும் பேசவில்லை. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் முடிவுக்காகக் காத்திருக்கிறோம்" - என்றார்.

# இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 17

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 180ஆவது ஆண்டு நிறைவையொட்டி வடமாராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் 14 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் நடத்தப்பட்டது. அதன் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் ரி.முகுந்தன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

மாலை 3 மணிக்கு இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலை அணி மோதவுள்ளது.

இன்றைய நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.இராஜசீலன் கலந்து கொள்வுள்ளார். (ஒ.23,422)





# டெஸ்ட் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்துக்கு முன்னேறியது தெ.ஆபிரிக்கா

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் தரப்படுத்தலில் தென்னாபிரிக்கா அணி இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.
தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் இடம் பெற்றமூன்றுபோட்டிகள்கொண்ட டெஸ்ட்தொடரில்தென்னாபிரிக்கா அணி 3:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம் நான்கு புள்ளிகள் பெற்று 110 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது தென்னாபிரிக்கா அணி.
இந்தியா 116 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், இங்கிலாந்து 109 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும், நியூசிலாந்து 107 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திலும், ஆஸ்திரேலியா 99 புள்ளிகளுடன் 5ஆவது இடத்திலும், இலங்கை 91 புள்ளிகளுடன் 6ஆவது இடத்திலும் உள்ளன. பாகிஸ்தான் இந்தப் போட்டியில் தோல்வியடைந்ததன் காரணமாக 7ஆவது இடத்துக்குப் பின்தள்ளப் பட்டுள்ளது.

Sinhala வகுப்புகள்
Sinhala (Second Language) Classes
காலை முதல் மாலை வரை
தரம் - 6, 7, 8, 9, 10 வரை
மற்றும்
For: Government Employees - Mon, Wed, Friday 4.30 pm & Weekends.
- 077 666 0400 N.Tennekoon

ஆங்கிலம் புதிய பிரிவுகள்
மூன்று மாத சனி, ஞாயிறு மற்றும் வாரநாள் வகுப்புகள்
O/L, A/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், தொழில்புரிவோருக்கான 3 மாத உரையாடல் மூலமான ஆங்கிலப்பயிற்சிநெறி.
சனி,ஞாயிறு பிரிவுகள்
சனி,ஞாயிறு பிரிவு ஆரம்பம் : 19.01.2019
1. காலை 08.00-10.00 3. காலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. காலை 03.00-05.00
வாரநாள் பிரிவுகள்
செவ்வாய்,வியாழன் பிரிவு ஆரம்பம் : 22.01.2019
1. காலை 08.30-10.30 1. காலை 10.30-12.30
18.01.2019 வரை பதிவுசெய்வோருக்கு ரூபா 1800 பெறுமதியான Study pack மற்றும் பெறுமதியான சான்றிதழ் முற்றிலும் இலவசம்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் இணைந்து பயிற்சிபெறமுடியும்.
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
077 621 4567 222 4282




# ரியல் மட்ரிட் திரில் வெற்றி

ஸ்பானியக்கழகங்களுக்கிடையிலான லாலிகா தொடரில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி ரியல் பிற்றிஸ் அணியை 2:1 என்றகணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது.
ரியல் மட்ரிட் அணியை எதிர்த்து ரியல் பிற்றிஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் மட்ரிட் அணியின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் லூகா மொட்ரிட். முதலாவது பாதி ஆட்டம் 1:0 என்ற கணக்கில் ரியல் மட்ரிட் அணி முன்னிலை பெற்றது.
இரண்டாவதுபாதிஆட்டம்ஆரம்பமாகி 67ஆவது நிமிடத்தில் ரியல் பிற்றஸ் அணியின் கனலெஸ் ஒரு கோலைப் போட இரு அணிகளும் 1:1 என்று சம நிலையானது.
ஆட்டம் முடிவடைவதற்கு முன்னர் எவ்வாறாயினும் ஒரு கோலைப் போட்டுவெற்றிபெற வேண்டும்என்று இரு அணி வீரர்களும் போராடினார்கள். இறுதியில் ரியல் மட்ரிட் அணியின் வீரர் டானி கபிலோஸ் ஆட்டத்தின் இறுதி நேரத்தில் 88 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட ரியல் மட்ரிட் அணி 2:1 என்ற கணக்கில் திரில் வெற்றி பெற்றது.

# அம்பதி ராயுடு பந்து வீச்சில் சந்தேகம்

இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் மற்றும் பகுதி நேர சுழற்பந்துவீச்சாளரான அம்பதி ராயுடு பந்து வீசும் முறை சந்தேகத்துக்கு உரிய முறையில் இருப்பதால், அவரைச் சோதனைக்கு உட்படுத்த பன்னாட்டு கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது.
சிட்னியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி வீரர் அம்பதி ராயுடு இரண்டு பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து எந்தவொரு இலக்கையும் கைப்பற்றவில்லை.
இந்த நிலையில், அம்பதி ராயுடு பந்துவீசும் போது அவரின் பந்து வீசும் முறை பந்துவீசும் விதிமுறைகளுக்கு மாறாக இருப்பதாகப் போட்டி நிர்வாகிகள் கேள்வி எழுப்பினர். எனவே இனிவரும் காலப் பகுதிகளில் டெஸ்ட், ஒருநாள், ரி-20 போட்டிகளில் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறைகளுக்கு அமைய அவர் சந்தேகமான முறையில் பந்து வீசுகிறாரா என ஆய்வு செய்யப்படும் வரை அவர் பந்து வீசுவதற்கு எந்தத் தடையும் இல்லை என பன்னாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. எனினும் அவர் 14 நாள்களுக்குள் பந்து வீசும் பரிசோதனைக்கு தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது நியதி.



மரண அறிவித்தல்
கந்தையா தர்மகுலசிங்கம்(ரவி)
(K.T.M Oil மில் உரிமையாளர் )
கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மகுலசிங்கம் 14.01.2019 திங்கட்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
தகவல்:
குடும்பத்தினர்.
K.T.M Oil Mill
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

(CS 23653)

# பாண்டியா, ராகுலுக்கு ஹர்பஜன் சாட்டையடி



இந்தியக் கிரிக்கெட் அணி வீரர்கள் ஹர்திக் பாண்டியா, லோகேஷ் ராகுல் ஆகியோர் பெண்கள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகள் தெரிவித்தது பெரும் பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்துள்ளது. இரண்டுவீரர்களையும் விசாரணை முடியும் வரை இடைநீக்கம் செய்து இந்திய கிரிக்கெட் சபை அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.
இந்த நிலையில் இது குறித்து மூத்த சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:
இந்த மாதிரியான விடயங்களை நாங்கள் நண்பர்களுடன் கூடப் பேசமாட்டோம். ஆனால் இவர்களோ பலரும் பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பேசி இருக்கிறார்கள். தற்போது இதனைப் பார்த்த பொது மக்கள் கிரிக்கெட் வீரர்கள் எல்லோரும் இப்படித்தான் இருப்பார்களோ என்று நினைக்கக்கூடும். ஹார்திக் பாண்டியா இந்திய அணிக்கு வந்து குறுகிய காலமே அவர் எவ்வாறு அணியின் கலாசாரம் குறித்துப் பேச முடியும்.
இந்தியக் கிரிக்கெட் சபை இரண்டு வீரர்களையும் இடைநீக்கம் செய்தது சரியானதுதான். இந்திய அணியின் பேருந்தில் இவர்கள் இருவரும் பயணித்தால், எனது மனைவி அல்லது குழந்தை என்னுடன் வந்தால் நிச்சயம் இவர்களுடன் இணைந்து பயணிக்க மாட்டேன் - என்றார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.